# விதைகள்...

பாகம்–12

# விதைகள்...

## பகுதி–12

### முதலாவதாக ... ஒரு சிறிய முன்னுரை:

பாவங்களினாலே மரித்தவர்களாயிருந்த நம்மை இயேசுவோடு கூட உயிர்ப்பித்து, அக்கிரமங்களெல்லாவற்றையும் நமக்கு மன்னித்து, நமக்கு எதிரிடையாகவும் கட்டளைகளால் நமக்கு விரோதமாக இருந்த கையெழுத்தை (நியாயப்பிரமாண – 10 கட்டளைகளை) குலைத்து, அதை நடுவிலிராதபடிக்கு எடுத்து, சிலுவையின்மேல் ஆணியடித்து; துரைத்தனங்களையும் அதிகாரங்களையும் உரிந்துகொண்டு, வெளியரங்கமான கோலமாக்கி, அவைகளின்மேல் சிலுவையிலே வெற்றி சிறந்த, கர்த்தர் இயேசுவின் நாமத்தில் உங்களனைவரையும் வாழ்த்தி, இந்த விதைகள் பகுதி–12 ஐ வெளியிடுவதில் பெருமகிழ்ச்சி கொள்கிறோம்.

**உங்களது சந்தேகங்கள் - கேள்விகள் - ஆலோசனைகள் ஏதேனுமிருப்பின் எங்களுக்கு எழுதுங்கள். தொடர்பு கொள்ளுங்கள்.**


**எங்கள் முகவரி:**

சகோதரி. **லதா டேவிட்**

**நித்தியர் இயேசு ஊழியங்கள்**

5-A/233, கால்டுவெல் காலனி 2-ம் தெரு கிழக்கு,
தூத்துக்குடி-628 008
தொலைபேசி: +91 - 461 - 320 97 37
அலைபேசி: +0-94424 66250 & +0-90034 56506
Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

**Our Address:**
**Sis. LATHA DAVID**
**SOVEREIGN JESUS MINISTRIES**
**5-A/233, CALDWELL COLONY**
**SECOND STREET (EAST)**
**TUTICORIN-628 008**

**Ph.: +91 - 461 - 320 97 37**
**Mobile: +0-9442466250 & +0-9003456506**

Email: sovereignjesus@gmail.com
Web : www.sovereignjesus.com

இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு இரட்சிக்கப்பட்டும், பாவமன்னிப்பை பெற்று ஞானஸ்நானம் பெற்றும், அபிஷேகம் பெற்று அந்நிய பாஷை பேசியும் ... திருப்தியில்லை. மனதில் சந்தோஷம் சமாதானம் இல்லை. பாவத்தில் இருந்து விடுதலை இல்லை, பரிசுத்தமாக வாழ முடியவில்லை.

**"பாவமும் வியாதியும் தரித்திரமும்**
**சேரும் திரிவேணி சங்கமத்தில் குளித்துவிட்டு**
**சாபம் தன் தலையை கோதிக்கொண்டு நின்றது!"**

இனிமேலும் பொறுத்துக் கொள்ள முடியாது என்ற சூழ்நிலை வந்தது. நிச்சயமாக இது வாழ்க்கை இல்லை, இப்படியொரு பயங்கரமான வாழ்க்கை தேவனால் மனிதனுக்குத் தரப்பட்டதல்ல. எங்கேயோ தவறு **(blunder mistake)** நடந்திருக்கிறது; அது என்ன? எங்கே? எப்போது? யாரால்? இந்த கேள்விகளுக்கு விடையைக் கண்டுபிடித்தே ஆகவேண்டும். என் தேடல்கள் ஆரம்பமாயின. கடவுள் என்று ஒருவர் இருப்பாரானால் நிச்சயம் அவர் நல்லவராகத்தான் இருக்க வேண்டும், நல்ல காரியங்களை மட்டுமே செய்பவராகவும் அவர் இருக்க வேண்டும். இது எல்லா மனிதர்களின் இருதயத்திலும் ஆழ்பகுதியில் உறுமிக்கொண்டிருக்கும் ஒரு எண்ணம்.

என்னுடைய தேடல்களின் முதல்கட்ட முயற்சிதான் விதைகள் – பகுதி 1. தேவனுடைய பிள்ளைகள் ஆசீர்வாதமாக இருக்க வேண்டும் என்பது தேவனுடைய சித்தம்... அதுவே அவருடைய திட்டம் என்பது மட்டும் தெளிவாகத் தெரிந்தது. தேவனிடமிருந்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்டே ஆகவேண்டும் என்ற தீர்மானத்துடன் புறப்பட்டேன். ஆனால் அதற்கு நான் தெரிந்தெடுத்த பாதை தான் தவறானதாகப் போய்விட்டது. இயேசு எதை சிலுவையில் ஒழித்தாரோ அந்தப் பாதையை தெரிந்து கொண்டேன்! எனக்கு முன்பாக இரண்டு பாதைகள் பிரிந்தன. முதல் பாதையின் ஆரம்பத்தில் இருந்த வழிகாட்டியில் மோசேயின் மூலமாக தேவன் அளித்த நியாயப்பிரமாணத்தின் காரியங்கள் இருந்தன. அது எனக்குத் திருப்தியாக இருந்தது; ஏனென்றால் இதுவரை நான் சென்ற சபைகளில் எல்லாம் அவை தான் பிரசங்கிக்கப்பட்டு இருந்தன. அதனால் அவைகள் எனக்கு சரியானவைகளாகத் தெரிந்ததால் அந்த வழியில் நடக்க ஆரம்பித்தேன். அடுத்த பாதையின் துவக்கத்தில் இருந்த வழிகாட்டியில் என்னவோ எழுதியிருந்தது. அது என்னவென்று தெளிவாகத் தெரியாததால், அதைப்பற்றி கேள்விப்படாததால்; அதைக் கண்டு கொள்ளவில்லை. நின்று நிதானிக்காததால், யாரிடமும் விசாரிக்காததால் என் தேடல்களின் தூரத்தின் மைல் கற்கள் அதிகமாகிக்கொண்டே வந்தன.

மீண்டும் சந்தேகம்! பாதை சரியானதல்ல என்பதை புரிந்து கொண்டேன், கேட்டு விசாரித்து, சரியான பாதையைக் கண்டுபிடித்தேன். நான் சென்ற தவறான வழியின் தாக்கங்கள் சரியான வழியை கண்டுபிடிக்க ஒரு உந்துதலாக இருந்தது என்று கூடச் சொல்லலாம். நான் தவறான பாதையில் போகாமலிருந்திருந்தால் சரியான பாதையைக் கண்டுபிடித்தே ஆக வேண்டும் என்ற பிடிவாதம், தீவிரம், விடாமுயற்சி எனக்குள் வந்திருக்காது. அதற்காக உங்களையெல்லாம் முதலில் தவறான பாதையில் போங்கள் என்று நான் **recommend** செய்யவில்லை. முதலிலேயே சரியான வழியை நீங்கள் தெரிவு செய்வதற்கு ஏதுவாகவே இவைகளை எழுதுகிறோம்.

*"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் **(old path - trodden track -** மனிதக் காலடிகள் தொடர்ச்சியாக படுவதால் ஏற்படும் ஒற்றையடிப் பாதைகள்) எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் ... எரே. 6:16."* என்ற தீர்க்கதரிசன வார்த்தைகள் என் வாழ்க்கையில் நிறைவேறியது.

என் வாழ்க்கையின் முக்கியமான நிகழ்வு என்று ஒன்று இருக்குமானால்; அது பூர்வ பாதைகளை நான் கண்டுபிடித்தது தான். நான் பெற்ற பாக்கியம் என்று ஒன்று இருக்குமானால், அது சிலுவையின் சத்திய உபதேசங்களை நான் பெற்றுக் கொண்டது தான். தேவன் எனக்குக் கொடுத்த எத்தனையோ பரிசுப் பொருட்களில் நான் முதன்மையானதாக நினைப்பது ஒன்று தான்... அது தான் புதிய பிரமாணத்தை ஆராய்ச்சி செய்ய எனக்குக் கொடுக்கப்பட்ட பச்சைக் கண்ணாடி! (பிரகாசமுள்ள மனக்கண்களைத்தான் சொல்லுகிறேன்!)

## *மனிதனுக்குப் பதிலாக களத்தில் இறங்கிய தேவன்!:*

உலகத்தோற்றத்திற்கு முன்னதாக தேவன் நமக்காக ஆயத்தம் பண்ணியிருந்த ஆசீர்வாதங்களை ஆதாம் கைநழுவ விட்டுவிட்டு சாத்தானின் காலடியில் வழுக்கி விழுந்தபோது அவன் மட்டுமல்ல ஒட்டுமொத்த மனுக்குலமே வழுக்கி விழுந்தது. தேவனுடைய மற்றுமொரு பரலோகத் திட்டம் ஆட்டம் கண்டது. தேவனுடைய ஒரு பிரமாண்டமான **project** தான் இந்த பூலோகம்! **6,00,00,000,00,00,000,00,00,000** டன் எடையில் (ஆறு கோடி கோடி கோடி!) தேவனால் வடிவமைக்கப்பட்ட இந்தப் பூமியைக் குறித்த தேவனுடைய திட்டம் நிச்சயமாக மிகப் பெரிதான ஒன்றாகத்தான் இருந்திருக்க வேண்டும். ஆனால் பூமியை துவக்கி வைத்து கொஞ்சக்காலத்துக்குள்ளாகவே மனிதன் தன்னுடைய ஒரு பிரமாண்டமான திட்டத்தை இப்படி தூக்கிப்போட்டு உடைத்து தூள்தூளாக்குவான் என்று தேவன் எதிர்பார்த்திருக்கவில்லை! அதனால்தான் *“தாம் பூமியிலே மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது”* என்று *“ஆதி. 6:6”* ல் வருகிறது.

தன்னுடைய திட்டம் தோல்விக்குள்ளாகிவிட்டது என்பதற்காக தேவன் உடனே தன்னுடைய ஒரு முடிவைக் கொண்டு வந்து, பூமியை அழித்துப் போட்டு; **file-** ஐ மூடிவிடவில்லை.

பூமியைக் குறித்ததான தேவனுடைய திட்டத்தை மனிதனால் செய்து முடிக்க முடியாமல் போய்விட்டது; சரி, பரவாயில்லை. மனிதனுக்குப் பதிலாக வேறொன்றை – அதாவது தேவனுடைய திட்டத்தை சரியாக முடிக்கக்கூடிய வல்லமை வாய்ந்த வேறொன்றை அனுப்ப தேவன் திட்டமிட்டார். தன்னுடைய திட்டத்தை, தொடர்ந்து வெற்றியாக பூமியின் மீது செயல்பட வைத்து; மீண்டுமாக இந்த பூமியை பரலோகமாக்குவதற்கு தேவன் போட்ட அடுத்த **(project)** திட்டம் தான் இயேசு! வார்த்தையுருவில் இருந்த தேவனுடைய குமாரனாகிய இயேசுவை சுமார் **4000** வருட போராட்டங்களுக்குப் பிறகு இந்த பூமியில் மனுஷனாக வந்து பிறக்கும்படி செய்தார். தன்னுடைய பரலோக மகிமையை இழந்த இந்த பூமியை மீண்டும் பரலோகமாக்க என்னென்ன செய்யவேண்டுமோ, அத்தனையையும் சிலுவையில் செய்து முடித்து, வழுக்கி விழுந்த ஒட்டுமொத்த மனுக்குலத்தையும் தூக்கி நிறுத்தினார்!

தோல்வியடைந்த பூமியில்; தோல்வியடைந்த மனிதர்களை வைத்து சளைக்காமல் தொடர்ந்து வேலை செய்தார் சர்வவல்லமை பொருந்திய தேவன். மனிதனும் அவரைப்போலிருப்பதால் அவனும் சளைக்கவில்லை! ஒவ்வொரு மனிதனையும் கவனித்துப் பார்த்தாலே இது புரியும். தேவனே இல்லையென்று சொல்கிற மனிதர்கள், பெயருக்கு தேவனை நம்புபவர்கள், சாத்தானுடைய தூதர்களை ஆராதிக்கும் புறமதத்தை சார்ந்தவர்கள், பெயர்க்கிறிஸ்தவர்கள், பாரம்பரியம் சார்ந்த நியாயப்பிரமாண கிறிஸ்தவர்கள், சத்தியத்தை அறிந்த புதிய பிரமாண கிறிஸ்தவர்கள் – அவன் யாராக இருந்தாலும் சரி; அவன் தான் நின்ற இடத்திலேயே நிற்பதில்லை. காலைத் தூக்கி முன்னே வைக்கிறான், முன்னேறிச் செல்ல முற்படுகிறான். எங்கே போகிறான்? அவன் பயணத்தின் முடிவு எங்கே? நோக்கம்தான் என்ன? இதைப் பற்றியெல்லாம் அவன் சிந்திக்கிறானா, இல்லையா என்பதெல்லாம் இங்கே பிரச்சனையில்லை. எதையோ பிடிக்க முன்னேறுகிறான். தன்னுடைய இடம் இது அல்ல என்பது மட்டும் அவனுக்குப் புரிகிறது. தேவனைப் போலிருக்கும் அவனுடைய ஆவி (உள்ளான மனிதன் – **inner man)** யின் துடிப்பு இதை அவனுக்குப் புரிய வைக்கிறது. சாபமும், சாத்தானும் எவ்வளவுதான் அவனைத் தடுக்க முயன்றாலும்; அவன் யார் என்ற உண்மையை அவனுக்கு மறைக்க முயற்சித்தாலும் முடியவில்லை என்பதுதான் உண்மை! **“இன்றளவும் சாத்தான் மனுக்குலத்தோடு போராடுகிறான் என்றால்; இன்னமும் அவனுடைய எண்ணம் ஈடேறவில்லை என்று தானே அர்த்தம்? மனுக்குலத்துக்கு எதிரான அவனுடைய திட்டம் நிறைவேறியிருந்தால் போராட்டத்தை நிறுத்தியிருப்பானே?”**

இதை வாசித்துக்கொண்டிருக்கும் யாரானாலும் சரி; உங்களை உற்சாகப்படுத்திக் கொள்ளுங்கள். நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் பூலோகத்திட்டம் தோல்வியடைந்திருக்கலாம். என்றாலும் அதை வெற்றியாக மாற்றுவதற்கான **formula** நம் கையில் தான் இருக்கிறது. சிலுவையில் அதற்கான சூத்திரம் தான் நம் இயேசுவால் எழுதப்பட்டது. தேவன் அதைப் பத்திரமாக தன் பிள்ளை

இயேசுவின் மூலமாக நம் கைகளில் கொடுத்துவிட்டார். பரிசுத்தாவியானவர் அதை எப்படி இயக்குவது என்பதை (சூத்திரத்தின் படி எப்படி கணக்குப் போடுவது என்பதை) சொல்லிக்கொடுத்து வருகிறார். பரிசுத்தாவியானவரிடம் கற்றுக்கொண்டதை உங்களுக்குச் சொல்லுகிறோம். நீங்கள் கற்றுக்கொண்டதை மற்றவர்களுக்குச் சொல்லுங்கள்; கணக்குப் போடுங்கள்! இதை வாழ்க்கையின் சவாலாக எடுத்துக் கொள்ளுங்கள். சவாலே சமாளி என்கிறான் உலக மனிதன்! சத்தியம் அறியாத தேவபிள்ளைகளோ ... ஐய்யைய்யோ, நமக்கெதுக்கு வீண் வம்பு? வாலை சுருட்டிக்கொண்டு சும்மா இருங்கள் என்கிறார்கள்.

நமக்கேன் வம்பு என்று தாவீது திரும்பியிருந்தால் கோலியாத்தின் கொட்டம் அடங்கியிருக்குமா? சாத்தான் தோற்கடிக்கப்படாத காலக்கட்டத்தில் வாழ்ந்த தாவீதே இவ்வளவு தைரியமாக சவால் விடுவானானால் ... தலை நசுக்கப்பட்டு, தோற்கடிக்கப்பட்டு, நம் காலடியில் இருக்கும் சாத்தானிடம் சவால் விட பயந்து கொண்டிருப்போமானால் ...? வேதாளம் திரும்பத் திரும்ப முருங்கை மரத்தில் ஏறிக்கொண்டிருப்பதற்கு காரணமே இந்த ஏமாந்த சோணகிரிகளான தேவபிள்ளைகள்தான்! விக்கிரகங்களை வணங்கி அதற்கு தூபம் காட்டும் புறமதஸ்தர்களைப் பார்த்தால் இவர்களுக்கு கிண்டலாக வேறு இருக்கிறது. தேவன் தங்களை எதற்காக சபையில் ஊழியக்காரர்களாக வைத்திருக்கிறார் என்ற காரண காரியமே தெரியாமல்; நமக்கேன் வம்பு என்றுச் சொல்லி திரும்ப ஆடு மேய்க்கப் போய்விட்ட இலட்சக்கணக்கான தாவீதுக்களால் வந்தது இந்தப் பிரச்சனை.

இப்போது ஆயிரக்கணக்கான கோலியாத்துக்கள் எழும்பி நின்று சவாலிடுகிறார்கள். அவனை எதிர்க்க திராணியில்லாத ஜனங்கள் அவனிடம் தோற்றுப் போய்; அவனுக்கு வேலைக்காரர்களாகப் போய்விட்டார்கள். இப்படியாக சாத்தான் தேவனுடைய சாயலாகப் படைக்கப்பட்ட மனிதர்களைக் கொண்டே (அந்த உண்மை அவர்களுக்குத் தெரியாததினால்) அவர்களின் சொத்து சுகங்களை, ஏதேனின் மகிமையான வாழ்வை சுரண்டி எடுத்து தன்னுடைய கிடங்குக்குள் குவித்துக் கொண்டே இருக்கிறான். இப்போதைய நிலவரத்தைக் குறித்ததான ஒரு தீர்க்கதரிசன வசனம் இதோ: *"வேலைக்காரர் குதிரைகள்மேல் ஏறிப்போகிறதையும், பிரபுக்கள் வேலைக்காரர் போல் தரையிலே நடக்கிறதையும் கண்டேன். பிர. 10:7."* இதில் வேலைக்காரர்கள் தேவனை அறியாத உலக மக்களையும், பிரபுக்கள் சத்தியம் தெரியாத வெட்கக்கேடான தேவப்பிள்ளைகளையும் குறிக்கிறது.

## ***பிதாவின் அன்பு (ஒரு demonstration):***

பிதாவின் அன்பு இங்கே செயல் விளக்கம் **(demonstration)** செய்யப்படுகிறது. தேவன் தன்னுடைய அன்பை நமக்கு நிரூபித்துக் காட்டியிருக்கிறார். சில வசனங்களைப் பார்ப்போம்.

*"நாம் பாவிகளாக இருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். ரோமர். 5:8"*

*"தம்முடைய ஒரேபேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதினால் தேவன் நம்மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 1 யோவான் 4:9"*

*"தேவன் நம்மேல் வைத்திருக்கிற அன்பை நாம் அறிந்து விசுவாசித்திருக்கிறோம். தேவன் அன்பாகவே இருக்கிறார் ... 1 யோவான். 4:16)"*

தன்னுடைய பிள்ளையை, பாவ மனிதனின் சாயலாகப் பிறக்க வைத்தார், நரகத்திற்கு அனுப்பினார். மனிதனின் பாவங்களை அவர் கணக்குப் பார்க்கவில்லை. சாபத்தால் புரையோடிக்கிடக்கும் பூமியில் பிறக்கும் மனிதர்களால் இவ்வளவு தான் வாழ முடியும். மனிதனின் நிர்க்கதியான சூழ்நிலையை, அவனுடைய கையாலாகாத நிலைமையை புரிந்து வைத்திருந்தார் நம் அன்பு தேவன். **"பாவத்தைத் தவிர வேறெதுவும் செய்யத் தெரியாத மனிதர்கள் பிழைக்கும்படிக்கு; பாவம் என்றால் என்னவென்றே தெரியாத தன் குமாரனை உலகத்திற்கு அனுப்பத் துணிந்தார்."** அன்பு எதையுமே பார்க்காது, கண்ணை மூடிக்கொண்டு காலைத் தூக்கி வைக்கும்! தன் கண்ணை மூடிக்கொண்டு இயேசுவைத் தூக்கி சிலுவையில் போட்ட தேவன்! இந்த மயிர்க்கூச்செறிய வைக்கும் அன்பை புரிந்துக் கொண்ட நாம் தான் புதிய உடன்படிக்கையின்

விசுவாசிகள்! இயேசுவும் தன்னுடைய அப்பாவுக்கு சளைக்காமல் பிதாவின் சித்தம் செய்ய துணிந்தார், தைரியமாக களமிறங்கினார், சாத்தானையும், பாதாளத்தையும், நரகத்தையும் ஜெயித்தார். சாத்தானுக்கு **check** வைத்தார், அவன் ஜெயிக்க சந்தர்ப்பமே இல்லாதபடி, அவனுக்கிருந்த சாத்தியக்கூறுகளை உடைத்து, கதவுகளை மூடினார். பாதாளத்தின் சாவியை பிடுங்கினார், நம் கையில் கொடுத்தார்! அல்லேலூயா! இனிமேல் சாத்தானால் பாதாளத்தின் வாசலைத் திறக்க முடியாது என்பது தான் உண்மை.

ஆனால் நிலைமையைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே? சாத்தான் திறக்கிற மாதிரியல்லவா தெரிகிறது என்றால் ... ? தவறு தேவனுடைய பிள்ளைகள் மேல் தான்; விவரம் புரியாமல், சத்தியம் தெரியாமல் சாவியைச் சாத்தான் கையில் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று அர்த்தம்! ஆனால் சிலுவையில் இயேசு என்ன செய்தார் என்பது தெரியாமல் இன்னமும் சாத்தானின் காலடியில் மரவட்டைகளாக ஊர்ந்து செல்லும் மனுக்குலம்! மிகவும் வெட்கக்கேடான வேதனையான இந்த நிலைமையை குறித்து யாரும் கவலைப்பட்ட மாதிரி தெரியவில்லை. ஆனால் உண்மை நிலவரம் என்னவென்றால் சாத்தான் தான் நம் காலடியின் கீழ் இருக்கிறான்.

இயேசு இன்னொரு சாவியையும் நம்மிடம் கொடுத்திருக்கிறார்; அதுதான் பரலோகத்தின் சாவி! இந்த சாவியும் தேவபிள்ளைகளிடம் சிக்கிக் கொண்டிருக்கிறது; யாருக்கும் பிரயோஜனப்படாமல்! தங்கச் சாவிகள் விற்கப்பட்டும், திறவுகோல் வாக்குத்தத்தக் கூட்டம் நடத்தப்பட்டும் பெரும்பாலானவர்களின் வாழ்க்கையில் இன்னும் பரலோக வாசல் பூட்டப்பட்டுக் கிடக்கின்றன. இந்த பூமி நமக்கு, அதன் ஆளுகை நம் கையில்! மனிதர்களுக்கு பரலோகத்தின் வாசலைத் திறந்து கொடுப்பது சத்தியம் அறிந்த தேவபிள்ளைகளாகிய நம் கையில் தான் இருக்கிறது. சத்தியத்தை அறியாதிருந்த காலங்களில் (துரித்திர உபதேசத்திற்குள் சிக்கி; நியாயப்பிரமாணத்திற்கு அடிமைகளாக இருந்த காலத்தில்) நம்மையறியாமல் மக்களுக்கு நரகத்தின் வாசலைத் தான் திறந்து கொடுத்துக் கொண்டிருந்தோம். அதாவது பரலோகத்தின் ஆசீர்வாதங்களை அவர்கள் பெற்றுக்கொள்ள முடியாதபடி அதை மூடி; இயேசுவை ஏற்றுக் கொண்ட பிறகும் அவரை பிரயோஜனப்படுத்த முடியாதபடி வேதனையையும், கண்ணீரையும், புலம்பலையும், குறைவுகளையும், தோல்விகளையும் **provide** பண்ணிக்கொண்டிருந்தோம்... அதை பிரசங்கமும் பண்ணிக்கொண்டிருந்தோம்.

*"மாயக்காரராகிய வேதபாரகரே பரிசேயரே உங்களுக்கு ஐயோ, ஒருவனை உங்கள் மார்க்கத்தானாக்கும்படி சமுத்திரத்தையும் பூமியையும் சுற்றித்திரிகிறீர்கள், அவன் உங்கள் மார்க்கத்தானான போது அவனை உங்களிலும் இரட்டிப்பாய் நரகத்தின் மகனாக்குகிறீர்கள். மத். 23:15."* என்று இயேசு இந்தப் பிரச்சனையை குறித்துத்தான் சொன்னார். இயேசு சிலுவையில் புதிய சுயாதீன பிரமாணத்தை பிரகடனப்படுத்திய பிறகும்; இன்னும் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு விசுவாசி; ஒரு மனிதனுக்கு சுவிசேஷம் சொல்லி அவனை கிறிஸ்துவுக்குள் வழி நடத்தும்போது நடக்கிற காரியத்தை தான் இயேசு இங்கே சொல்லுகிறார். ஒரு மனிதனை இரட்சிப்பிற்குள் நடத்துவது நல்ல காரியம் தான்... நிச்சயமாக அதை செய்து தான் ஆக வேண்டும்.

ஆனால் புதிதாக இரட்சிக்கப்பட்ட ஒரு ஆரம்ப விசுவாசியை (குழந்தை போலிருக்கிற) அவர்கள் கையாள்கிற விதம் மிக மிக ஆபத்தானது. இன்னமும் நியாயப்பிரமாண உபதேசத்தின் அடிப்படையில் வாழ்ந்து கொண்டிருக்கும் ஒரு ஊழியனுடைய ஆவிக்குரிய கண்கள் திறக்கப்படாத நிலையில்தான் இருக்கிறது. கண் தெரியாத ஒரு குருடன் பிறந்து சில நாட்களே ஆன, இன்னமும் கண் திறக்காத குழந்தையை கையில் தூக்கிக்கொண்டு நடந்தால் ... ?

*"... அவர் (இயேசு) ... சொன்னார்: குருடனுக்குக் குருடன் வழிகாட்டக்கூடுமோ? இருவரும் பள்ளத்திலே விழுவார்கள் அல்லவா? லூக். 6:39."* இப்படி குழிக்குள் விழுந்த பிரசங்கியார்கள், தன்னுடன் விழுந்து கிடக்கும் இளம் விசுவாசிகளுடன் அந்த பள்ளத்திலேயே ஆலயம் கட்டி ஆராதனை நடத்துகிறார்கள்!

*"அவருடனே கூட இருந்த பரிசேயரில் சிலர் இவைகளைக் கேட்டபொழுது: நாங்களும் குருடரோ என்றார்கள். யோவான். 9:40"*

*"இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் குருடராயிருந்தால் உங்களுக்குப் பாவமிராது; நீங்கள்*

*காண்கிறோம் என்று சொல்லுகிறபடியினால் உங்கள் பாவம் நிலை நிற்கிறது என்றார். யோவான். 9:40"*

*... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். நீதி. 28:25* என்று தான் வசனம் இருக்கிறது. கர்த்தரை நம்புகிறவன் நாசமாகப் போவான் என்று உங்களுக்கு அறிவித்தது யார்? (நிர்வாணம் இல்லாதிருந்தும் நிர்வாணம் உண்டு என்று ஏவாளிடம் பொய்யை அறிவித்த அதே பழைய சாத்தான்தானே?) இப்போது புரிகிறதா? இவன் பேச்சையெல்லாம் கேட்டுக்கொண்டு திரியவா கையில் இவ்வளவு பெரிய **Bible? Bible** ஒரு **Answer Book (Responses to questions).** உலகம் கேள்விகளால் நிறைந்திருக்கிறது. மனிதர்களுக்குக் கேள்வி கேட்க மட்டும் தான் தெரிகிறது. என்ன செய்வது, குழப்பம் நிறைந்த உலகம் மனிதனின் மூளையை கேள்விகளால் நிறைத்து வைத்திருக்கிறது. உலகத்தின் சாப சீர்கேடுகள் ஏன்? எதனால்? எப்படி? என்னாகும்? என்ற கேள்விகளை பிரசவித்துக் கொண்டே இருக்கின்றன. அந்த கேள்விகள் வளர்ந்து பூதாகரமாகின்றன. மண்டை உடைந்து விடும் போன்ற உணர்வு வரும் போது மூளை தன் கேள்விக்கு யார் பதில் சொன்னாலும் உடனே யோசிக்காமல் ஏற்றுக்கொண்டு இலேசாகி விடுகிறது. நம் கேள்விக்கு பதில் சொன்னது யார்? அவர் எங்கிருந்து வந்தார்? அவர் பதிலை வேத வசனத்தின் அடிப்படையில் தான் சொன்னாரா? அல்லது தனக்குத் தெரிந்ததை சொல்லுகிறாரா என்றெல்லாம் ஆராய்ந்து கொண்டிருப்பதில்லை.

புதையலைத் தேடிப்போன வழியில் புதைமணலில் சிக்கினோம்; அந்த புதைமணலுக்குள்தான் புதையல் இருக்கிறது என்று எல்லோருக்கும் சொன்னோம். (ஏற்கெனவே பலர் எங்களுக்கு புதை மணலுக்குள் புதையல் இருக்கிறது என்று தவறாக வழிகாட்டியதால் தான் அங்கே போனோம்) நல்லகாலம், இயேசு வந்து தன் மாபெரும் அன்பின் கயிறைப் போட்டு எங்களை வெளியே இழுத்தார். இப்போது பிரசங்கிக்கிறோம் சத்தமாக! கேளுங்கள்: "அங்கே போகாதீர்கள், அங்கே புதை மணல் இருக்கிறது!"

*"வழிகளிலே நின்று, பூர்வ பாதைகள் எவையென்று கேட்டு விசாரித்து, நல்ல வழி எங்கே என்று பார்த்து, அதிலே நடவுங்கள்; அப்பொழுது உங்கள் ஆத்துமாவுக்கு இளைப்பாறுதல் கிடைக்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்; ... எரே. 6:16"*

இந்த இரகசியங்களை வெளிப்படுத்த பரிசுத்த ஆவியானவர் அடுத்த **(project)**-டுடன் வந்தார். மனிதனுக்குத் தேவனைத் தெரியாவிட்டாலும்; தேவனுக்கு மனிதனை நன்றாகத் தெரியும். மனிதன் தேவனை நம்புகிறானோ இல்லையோ; தேவன் மனிதனை நம்புகிறார். தன்னைப் போல தன்னால் உருவாக்கப்பட்டிருக்கும் மனிதனிடம் தன்னுடைய இரகசியங்களை பகிர்ந்து கொள்ள தேவன் தயக்கம் காட்டுவதேயில்லை. மனிதன் தன் மகிமையை இழந்திருந்தாலும்; இரகசியத்தை வெளிப்படுத்திவிட்டால் சரியாக அதைப் பிடித்துக்கொண்டு; தன் திட்டத்தை செய்து முடிக்க புறப்பட்டு விடுவான் என்பது அவருக்குத் தெரியும்.

இப்போது பரிசுத்தாவியானவரின் வேலை தான் நடந்து கொண்டிருக்கிறது நம் மூலமாக. மனிதனைத் தான் வாழும் ஆலயமாகக் கொண்டு வெகு மும்முரமாக வேலை பார்த்து வருகிறார். நாங்கள் போதித்து வருகிற இந்தச் சிலுவையின் உபதேசம் – கிருபை சார்ந்த புதிய உடன்படிக்கையின் பிரசங்கங்களின் வழியாக பரிசுத்தாவியானவர் விழுந்து போன தேவ இராஜ்ஜியத்தை மீண்டுமாக கட்டி வருகிறார். *"தம்முடைய ஒரே பேறான குமாரனாலே நாம் பிழைக்கும்படிக்குத் தேவன் அவரை இவ்வுலகத்திலே அனுப்பினதால் தேவன் நம் மேல் வைத்த அன்பு வெளிப்பட்டது. 1 யோவான். 4:9."*

மனிதன் விழுந்துபோனதால், அதற்குப் பிறகு மனிதனின் பிழைப்பு கெட்டுப் போனது; அதாவது மனித வாழ்க்கை நாசமாகிப் போனது. அவனுக்கு பிழைப்புக்கு இப்போது ஏதாவது ஒரு வழி செய்தாக வேண்டும். பிதாவின் அன்பு, பிழைப்புக்கான வழியை ஏற்படுத்திக் கொடுத்தது. அந்த வழி தான் தன் ஒரே பிள்ளையாகிய இயேசு!

இயேசு நமக்குள் வந்து வசிப்பதனால் நாம் தப்பிப் பிழைத்தோம். நமக்குள்ளாக இருந்து; நமக்குப் பதிலாக செயல்பட்டு, பிதாவின் சித்தம் செய்ய வைத்து, மீண்டுமாக இந்தப் பூமியைப் பரலோகமாக – வெற்றியடைந்த திட்டமாக மாற்றி வருகிறார் இயேசு! அவர் எண்ணப்படி நடக்குமா

என்ற பேச்சுக்கே இடமில்லை! வெற்றி நிச்சயிக்கப்பட்ட ஒன்றாகி விட்டதால் இனி நீங்களோ நானோ எதற்கும் பயப்படத் தேவையில்லை.

பூமி தன் தொடக்க நிலையில் பரலோகமாகத்தான் இருந்தது; அப்போது அங்கே இருந்தது சுயாதீன பிரமாணமாகிய கிறிஸ்துவின் பிரமாணம் தான். (இது கிருபை பிரமாணம், நீதியின் பிரமாணம் என்று பல பெயர்களில் புதிய ஏற்பாட்டு அப்போஸ்தலர்களின் கடிதங்களில் இடம் பெறுகின்றன.) பூமியின் மீது சாபம் ஏற்பட்டபோது, சாத்தான் ஜெயித்த போது அந்தப் பிரமாணத்தை இயக்க முடியாத சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் வேறு வழியில்லாமல் மனிதர்களையும், முக்கியமாக தேவ ஜனங்களையும் **regulate** பண்ண (கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்த) நியாயப்பிரமாணத்தை இயற்ற வேண்டிய கட்டாயச் சூழ்நிலை ஏற்பட்டது.

அரசியல் கூட்டங்கள் நடக்கும் போது பார்த்திருக்கலாம்; கூட்டத்தில் கலவரம், கலாட்டா வரக்கூடாது என்பதற்காக ஆங்காங்கே காவல் துறை ஊழியர்கள் **(police)** நிறுத்தி வைக்கப்பட்டிருப்பார்கள். கூட்டம் நடக்கும் போது பிரச்சனை செய்பவர்களை அதட்டுவார்கள், லத்தியால் அடிப்பார்கள். கலவரத்தின் தீவிரம் அதிகமாகும் போது துப்பாக்கி சூடு, கண்ணீர் புகை ஏற்படுத்தி கூட்டத்தைக் கலைந்து போகும்படி செய்வார்கள். போலீஸ்காரர்களின் இந்த நடவடிக்கைகள் மக்களை மிரட்டி கட்டுப்பாட்டுக்குள் வைக்கத்தானே தவிர அவர்களை திருத்துவதற்காக அல்ல. இந்த மிரட்டலுக்கெல்லாம் பயந்து அவர்கள் திருந்தப்போவதும் இல்லை. அடுத்த கூட்டம் நடக்கும்போதும் இதே நிலைமை நீடிப்பது நிற்கப் போவதுமில்லை.

மோசேயின் நியாயப்பிரமாணமும் இந்த அளவுக்குத்தான் மக்கள் மீது நடவடிக்கை எடுக்க முடிந்தது. தேவன் மனிதனை தன்னைப் போலவே உருவாக்கியிருக்கிறார். அவனுக்கு தன்னைப் போலவே செயல்படக்கூடிய முழு சுதந்திரத்தையும் கொடுத்திருக்கிறார். வேதம் நம்மை தேவர்கள் என்றே அழைக்கிறது.

*"நீங்கள் தேவர்கள் **(you are gods)** என்றும், நீங்களெல்லாரும் உன்னதமானவரின் மக்கள் என்றும் நான் சொல்லியிருந்தேன் சங். 82:6." "தேவ வசனத்தைப் பெற்றுக்கொண்டவர்களைத் தேவர்கள் என்று அவர் சொல்லியிருக்க, ... யோவா. 10:35"*

தேவனைப் போலவே இயங்கக்கூடிய ஆற்றலைப் பெற்றிருக்கிற நம்மை இன்னும் நியாயப்பிரமாண போலீஸ்காரர் லத்தியைக் கொண்டு அடிக்க வேண்டிய அவசியமென்ன? நமக்கு தேவன் முழு சுதந்திரத்தைக் கொடுத்திருக்கிறார். எந்த ரீதியிலும் நம்மை கட்டாயப்படுத்தாத அளவில் சுயாதீன பிரமாணத்தை இயேசுவைக் கொண்டு இயற்றிக் கொடுத்திருக்கிறார். இந்த மகத்தான ஆசீர்வாதத்தை அறிந்து கொள்ளாத காரணத்தினால் தேவபிள்ளைகளுக்கு வரவேண்டிய ஆசீர்வாதங்களை சாத்தான் கைக்குள் (பைக்குள்) வைத்திருக்கிறான். அந்த ஆசீர்வாதங்கள் கொள்ளை, கருப்புப் பணம், போலி ரூபாய் நோட்டுகள், பதுக்கல் பணம், பொருளாதார சீர்குலைவு, பணவீக்கம், விலை வாசி உயர்வு, லஞ்சம், ஊழல் இன்னும் என்னென்னவோ ... இந்த ரீதியில் சாத்தானின் ஆளுகைக்குள்ளாக இருக்கிற ஜனங்கள் மூலமாக விழலுக்கு இரைத்த நீராக வீணாகிப் போய்க்கொண்டே இருக்கிறது. பொருளாதாரம் மட்டுமல்ல, தேவன் நமக்கு தந்த பாவமில்லாத பரிசுத்த வாழ்க்கை, வியாதியில்லாத சுக வாழ்க்கை... இவற்றைக்கூட சாத்தான் வீணாக்கிக் கொண்டிருக்கிறான்.

தேவன் இயேசு இரத்தம் சிந்தி நமக்காக சம்பாதித்த, மீட்ட ஆசீர்வாதங்கள் இப்படி வீணாக போகாதபடி தடுத்து; அதைச் சுதந்தரித்து, தேவனுடைய சித்தப்படி அதை தேவ இராஜ்ஜியப்பணிக்காக செலவு பண்ணவே நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம்.

## வழி மேல் விழி வைத்து காத்திருக்கும் தேவன்!:

தேவன் இயேசு சம்பாதித்த ஆசீர்வாதங்களுடன் காத்திருக்கிறார்... நமக்காக, நீண்ட நெடுங்காலங்களாக... விசுவாசத்துடன் தைரியமாக சென்று கேட்க ஆளில்லை. வாக்குத்தத்தங்களை ஜெபத்தில் **claim** பண்ணாமல்; (உரிமை பாராட்டாமல்) திசை மாறி வழிதப்பி எங்கெங்கோ போய் தவறான பாதையில் வழிமேல் விழி பிதுங்க காத்திருக்கும் தேவ ஜனங்கள்!

இந்தப் பூமியை பரலோகம் போலவே **maintain** பண்ண (பராமரிக்க, நிர்வாகம் செய்ய) தேவன் தந்திருந்த சகல ஆசீர்வாதங்களையும், சாத்தியக் கூறுகளையும், சூழ்நிலைகளையும், வசதி வாய்ப்புகளையும் ஆதாம் தவற விட்டான். ஒளியிழந்து, களையிழந்து அழுது வடிந்த பூமியுடன் அதற்கு பின்வந்த மனுக்குலமே அழுது வடிந்தது!

இழந்த எல்லாவற்றையும் இயேசுவின் மூலமாக சிலுவையில் மீட்டுக் கொடுத்தார் தேவன். களையிழந்து அழுதுவடிந்து கொண்டிருந்த பூமி தன் கண்களைத் துடைத்துக்கொண்டது; மீண்டும் இழந்த ஒளியை பெற்றுக் கொண்டது. *"... ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்ததுபோலவும், எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்தது போலவும் இதுவுமாயிற்று. ரோமர். 5:12." "இதுவுமாயிற்று"* என்ன அர்த்தம்? **ஆதாம் என்ற முதல் மனிதனால் பாவமும், மரணமும் உலகத்தில் பிரவேசித்தது போல, இயேசு என்ற இரண்டாம் மனிதனால் (இரண்டாம் ஆதாமினால்) நீதியும் அந்த நீதியால் ஜீவனும் உலகத்தில் பிரவேசித்தது. எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லோருக்கும் வந்ததுபோல, இயேசுவால் நீதி செய்யும் ஆற்றலைப் பெற்று எல்லா மனிதரும் நீதி செய்யக்கூடிய சாத்தியக்கூறுகள் உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த வெளிப்பாட்டை பெற்றுக்கொண்டு இயேசுவின் நீதியில் நிலைத்திருக்கிற எல்லா மனிதருக்கும் நித்திய ஜீவன் வந்தது! சாத்தானால் இந்த பூமிக்கு ஏற்படுத்தப்பட்ட அநீதி, அவமானம், அலங்கோலம் எல்லாம் தேவன் இயேசுவால் துடைக்கப்பட்டது.**

முதல் ஆதாமின் பாவத்தால் பூமியில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனின் கைகளிலும் நரகத்துக்கான அனுமதிச்சீட்டு **(ticket)** கொடுக்கப்பட்டது. இரண்டாம் ஆதாமாகிய இயேசுவின் நீதியினால் பரலோகம் செல்வதற்கான **ticket** கொடுக்கப்பட்டது. அதாவது ஒரு மனிதன் இரட்சிப்பின் சுவிசேஷத்தைக் கேட்டு விசுவாசியாக மாறி இயேசுவை தன்னுடைய இருதயத்தில் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும்போது; இயேசுவால் நரகத்துக்கான அனுமதிசீட்டு ரத்து செய்யப்பட்டு; பரலோகத்துக்கான அனுமதிச்சீட்டு கொடுக்கப்படுகிறது.

ஒரு மனிதன்(ஆதாம்) பாவம் செய்தான் என்பதற்காக ஒட்டுமொத்த மனுக்குலமே பாவத்திற்குள் சிக்கிக்கொள்வது நியாயமாகுமா? என்று கேள்வி கேட்பவர்களின் வாயை அடைக்கும் வண்ணமாக தேவனுடைய எதிர்செய்கை இருந்தது. ஒரு மனிதன் (இயேசு) நீதி செய்ததினால் மொத்த மானுட வர்க்கமே நீதிக்குள், பரிசுத்தத்திற்குள் சிக்கிக் கொண்டது!

மீண்டுமாக மனிதன் இந்தப் பூமியைத் தன்னைப் போலவே ஆளுகை செய்யக்கூடிய சாத்தியங்களை ஏற்படுத்தினார் புதிய உடன்படிக்கை மூலமாக. என்றாலும் இன்னமும் நியாயப்பிரமாணத்தை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு பிடிவாதம் செய்து, அழுது கொண்டிருக்கும் பால்குடி மறக்காத பிள்ளைகள்! பால் பாட்டிலை வாயில் வைத்துக் கொண்டு இன்னும் தொட்டிலுக்குள் தாலாட்டுப்பாட்டைக் கேட்டுக்கொண்டு உறங்கிக் கொண்டிருக்கும் 7 வயது பாப்பாக்கள்! 16 வயது பாப்பாக்கள்! 22 வயது பாப்பாக்கள்! 80 வயது பாப்பாக்கள்!

இவர்களைத் தொட்டிலை விட்டு இறக்கி, பால் மறக்க வைத்து, சத்தியத்தை பிரசங்கித்து **solid food** (திட ஆகாரம் – புதிய உடன்படிக்கையின் காரியங்கள்) கொடுப்பதற்குள் இந்த புதிய உடன்படிக்கையின் ஊழியக்காரர்களாகிய நாங்கள் செப்படி வித்தை காட்ட வேண்டியதாயிருக்கிறது! அதனால் தானோ என்னவோ பவுல் சபை மக்களிடம் தனக்காக இவ்விதமாக ஜெபிக்கச் சொன்னார்:

*"சுவிசேஷத்திற்காகச் சங்கி**லி**யால் கட்டப்பட்டிருக்கிற ஸ்தானாபதியாகிய நான் அதைப்பற்றிப் பேசவேண்டியபடி தைரியமாய்ப் பேசத்தக்கதாக, நான் தைரியமாய் என் வாயைத் திறந்து சுவிசேஷத்தின் இரகசியத்தை அறிவிக்கிறதற்கு வாக்கு எனக்குக் கொடுக்கப்படும்படி எனக்காகவும் விண்ணப்பம் பண்ணுங்கள். எபே. 6: 19, 20"*

*"கிறிஸ்துவின் இரகசியத்தினிமித்தம் கட்டப்பட்டிருக்கிற நான் அந்த இரகசியத்தைக்குறித்துப் பேச வேண்டிய பிரகாரமாய்ப் பேசி, அதை வெளிப்படுத்துவதற்கு, திருவசனம் செல்லும்படியான வாசலைத் தேவன் திறந்தருளும்படி எங்களுக்காகவும் வேண்டிக்கொள்ளுங்கள். கொலோ. 4: 3, 4"*

எங்களுக்காகவும் இந்த வசனத்தின்படி வேண்டிக்கொள்ளுங்கள்; கொஞ்சம் அதிகப்படியாகப் போய்... எழுதுவது நானல்ல, பரிசுத்த ஆவியானவரே என்று நான் தைரியமாகச் சொல்லும் அளவுக்கு எழுத ஜெபித்துக் கொள்ளுங்கள்.

5ஆம் வகுப்பு பாஸ் பண்ணிவிட்டு ஒண்ணாங்கிளாசுக்கு பாடம் எடுக்கும் நியாயப்பிரமாண வாத்தியார்கள்! பையன்களின் கதி என்னவாவது? எங்க ஊர்ல **B.Ed.,** இல்லாவிட்டால் **L.K.G.,** வகுப்புக்கு கூட டீச்சராக **appointment** செய்ய மாட்டார்கள்!

## *நியாயமான பயம்:*

சிலுவையில் என்ன நடந்தது என்பதைக் குறித்த வெளிப்பாடுகளைப் பெற்றுக் கொண்ட பவுல்; அதைக் குறித்ததான சத்தியங்களை சபைகளுக்கு கடிதங்களில் எழுதுகிறார். சபைகளுக்கு நேரிடையாகவும் சென்று பிரசங்கிக்கிறார். சத்தியத்தைப் பிரசங்கித்த சபைகளுக்கு மீண்டுமாக போய் சபையின் நிலவரங்களை விசாரிக்கிறார், சில வேளைகளில் தூரத்திலிருந்தும் கவனிக்கிறார். பவுலுக்கு சபை மக்களைப் பற்றிய ஒரு பயம் இருந்தது, அது என்ன பயம்? பயத்துக்கு என்ன காரணம்?

*“... சர்ப்பமானது தன்னுடைய தந்திரத்தினாலே ஏவாளை வஞ்சித்ததுபோல, உங்கள் மனதும் கிறிஸ்துவைப் பற்றின உண்மையினின்று விலகும்படி கெடுக்கப்படுமோவென்று பயந்திருக்கிறேன். 2 கொரி. 11:3.”*

சாத்தான் ஆரம்பத்தில் ஏவாளை எப்படி ஏமாற்றினானோ அதே ரீதியில்தான் இன்றளவும் தேவபிள்ளைகளை வஞ்சித்து வருகிறான் என்று பார்க்கிறோம். காலத்திற்கு ஏற்றபடி, பூமியின் நாகரீக, அறிவியல் முன்னேற்றத்திற்கு ஏற்றபடி தன்னுடைய ஏமாற்று வித்தையின் **style-ஐ (font-ஐ)** மாற்றிக் கொள்கிறான். சாத்தான் ஏவாளை கிறிஸ்துவைப் பற்றின உண்மையிலிருந்து விலகும்படி செய்தான். இன்றும் அதைத்தான் செய்கிறான். தேவனுடைய வார்த்தை தான் கிறிஸ்து என்பதால் சாத்தான் சபை மக்களை தேவனுடைய வார்த்தையிலிருந்து விலகும்படி செய்து கெடுக்கிறான். அதாவது இயேசுவை விட்டே பிரிக்கிறான்! தேவனுடைய வார்த்தையிலிருந்து விலக்கிப் பிரிப்பதென்றால்; சத்தியத்தை தேவ பிள்ளைகள் அறிந்து விடாதபடி செய்து; அதற்குப் பதிலாக வேறு எதையெதையோ சொல்லி குழப்புவது. சிலுவையின் பாடு மரணத்தின் இரகசியத்தை சுவிசேஷமாக பிரசங்கிக்க விடாதபடி அதற்கு செழிப்பின் உபதேசம் என்றும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதியான கள்ள உபதேசம் என்றும் சொல்லி சபையினர் மத்தியில் துர்ச்செய்தியைப் பரப்பி வருகிறான். இவனுடைய பூச்சாண்டி வேலைக்கு பயந்த தேவ பிள்ளைகள் உள்ளங்கால் பிடரியில் அடிக்க பயந்து சத்தியத்தை விட்டு ஓடியே போய்விட்டார்கள். பெரும்பாலானவர்கள் திரும்பவே இல்லை; மிகச் சிலர் தான் திரும்பியிருக்கிறார்கள்; அந்த சிலரில் நானும் (நாமும்) இருக்கிறோம்; நாம் பாக்கியம் பெற்றவர்கள். இந்த வேலை தான் இப்போதும் பெருமளவில் நடந்து வருகிறது.

சபைக்கும், சபை போதகருக்கும், அவரின் போதனை நடைக்கும் **(style)** முக்கியத்துவம் கொடுக்கும் வரை சாத்தான் வஞ்சித்துக் கொண்டுதான் இருப்பான், ஏமாற்றப்பட்டுக்கொண்டேதான் இருப்பீர்கள். இப்படிப்பட்டவர்கள் இன்னும் சத்தியத்தை அறிகிற அறிவுக்குள் இன்னும் வரவில்லை என்று தான் அர்த்தம். *“உங்களில் சிலர்: நான் பவுலைச் சேர்ந்தவனென்றும் (நான் அந்த பாஸ்டர் சபைக்கு போகிறவனென்றும்), நான் அப்பொல்லோவைச் சேர்ந்தவனென்றும் (நான் இந்த பாஸ்டர் சபைக்கு போகிறவனென்றும்), நான் கேபாவைச் சேர்ந்தவனென்றும் சொல்லுகிறபடியால், நான் இப்படிச் சொல்லுகிறேன். கிறிஸ்து பிரிந்திருக்கிறாரா? பவுலா (பாஸ்டரா) உங்களுக்காக சிலுவையிலறையப்பட்டார்? பவுலின் நாமத்தினாலேயா (சபை போதகரின் நாமத்தினாலேயா) ஞானஸ்நானம் பெற்றீர்கள்? (1 கொரி. 1: 12, 13)”*

தேவனுடைய வார்த்தையை விட்டு விலகின (இயேசுவை விட்டு விலகி – அதாவது கிறிஸ்துவைப் பற்றிய உண்மையிலிருந்து விலகி) ஆதாமும் ஏவாளும் வேறு ஒரு காரியத்துடன் போய் சேர்ந்து விடுகிறார்கள். உலகத்தையே மோசம் போக்கின சாத்தானுடைய வார்த்தைகள் தான் அது. அரசனை நம்பி புருஷனைக் கைவிட்டு ஆத்தோடு போன கதையாகிப் போனது.

மனிதன் விழுந்த முதல் பாவமே இச்சை தான், இன்றளவும் மனுக்குலத்தின் பாவப்பட்டியலில் முதலிடத்தைப் பிடித்து வருவதும் இந்த பாவம் தான். *"மறுபடியும் நான் வருகிறபோது, ... முன் பாவஞ்செய்தவர்களாகிய அநேகர் தாங்கள் நடப்பித்த அசுத்தத்தையும் வேசித்தனத்தையும் காமவிகாரத்தையும் விட்டு மனந்திரும்பாமலிருக்கிறதைக்குறித்து, நான் துக்கப்பட வேண்டிய தாயிருக்குமோவென்றும் பயந்திருக்கிறேன். 2 கொரி. 12: 21"*

பவுலின் பயத்துக்குக் காரணம் என்ன? பவுல் சிலுவையில் அறையப்பட்ட இயேசுவை – அதைச்சார்ந்த புதிய உடன்படிக்கையின் சத்தியங்களை சபைகளிலே போதித்து வருகிறார். நியாயப்பிரமாணத்துக்குட்பட்டிருந்த சபைகளில் இதனால் விழிப்புணர்ச்சி வருகிறது. ஜனங்கள் சத்தியத்தை அறிந்து கொண்டு விடுதலையாக்கப்படுகிறார்கள். இயேசு தங்களுக்குள் வசிக்கும் இரகசியத்தை அறிந்து கொள்ளுகிறார்கள். பாவத்தை ஜெயிக்கும் ஆற்றலையும் பெற்றுக் கொள்ளுகிறார்கள். இச்சை மற்றும் சகல பாவங்களையும் மேற்கொண்டு வாழும் ஆற்றலைப் பெற்ற தேவபிள்ளைகள் மீண்டுமாக நியாயப்பிரமாண உபதேசங்களால் குழப்பப்படும் சந்தர்ப்பம் இருக்கிறது. ஏனென்றால் ஏற்கெனவே நியாயப்பிரமாணத்துக்குட்பட்டிருந்த சபைகளில் தான் பவுல் சென்று பிரசங்கிக்கிறார். விசுவாசித்து சத்தியத்தை ஏற்றுக் கொண்ட சபையினரை விசாரித்து கடிதங்களும் எழுதுகிறார்.

பழைய பிரமாணத்தின்படி ஊழியம் செய்து கொண்டிருக்கும் பரிசேயர்கள், சதுசேயர்கள், வேதபாரகர்களின் எதிர்ப்புகளை சமாளித்து தான் பவுல் ஊழியம் செய்கிறார். பவுல் சொன்ன சத்தியத்திற்கு விரோதமாக, அதற்கு எதிரிடையான காரியங்களை இவர்கள் சபையில் தொடர்ந்து பிரசங்கிக்கிறார்கள். என்ன நடந்திருக்கும்? பழைய திராட்சை ரசத்தால் புதிய துருத்தி கிழிந்து சேதமாகியிருக்கும். கொஞ்சம் புளித்த மாவு கூட நல்ல மாவை புளித்துப் போகச் செய்துவிடுமே. குழப்படி பிரசங்கங்களால் தாக்கப்படும் சபையினர், சத்தியத்தை விட்டு நழுவும் சந்தர்ப்பம் உருவாகிறது. சிலர் அப்படி நழுவியும் போனார்கள். அப்படி கிறிஸ்துவைப் பற்றின சத்தியத்திலிருந்து வழுக்கி விழும் போது, மீண்டுமாக பாவம் செய்யாதபடிக்கு தாங்கள் பெற்றிருந்த ஆற்றலை இழந்து விடுகிறார்கள். இதனால் பழைய பாவ ஆசைகள், இச்சைகள், அதனால் வரும் பாவ சந்தோஷங்கள் உள்ளே நுழைந்து விடுகின்றன. பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலைத் தருகிற இயேசுவை அவர்கள் விசுவாசிக்காமல்; தங்கள் மேலும், தங்கள் கிரியைகளின் மேலும், பாரம்பரிய சடங்குகளின் மேலும் கவனத்தை திருப்பியதால் மீண்டுமாக பாவங்களில் விழுந்து விடுகிறார்கள்.

தான் பிரசங்கித்த சத்தியத்தில் மக்கள் நிலைத்திருக்க முடியாமல் போன நிலைமையை நினைத்து பவுல் கலங்குகிறார், சபைக்காக பரிதபிக்கிறார். *"நான் உங்களுக்காக பிரயாசப்பட்டது வீணாய்ப்போயிற்றோ என்று உங்களைக் குறித்துப் பயந்திருக்கிறேன். கலா. 4:11" "என் சிறுபிள்ளைகளே, கிறிஸ்து உங்களிடத்தில் உருவாகுமளவும் உங்களுக்காக மறுபடியும் கர்ப்ப வேதனைப்படுகிறேன். கலா. 4:19"*

## பவுல் பிரசங்கித்த இயேசு:

பலவிதமான போதனைகளால் அலைக்கழிக்கப்பட்டு நுரைதள்ளி கரையில் ஒதுங்கிக்கிடந்த தேவபிள்ளைகளைக் கரையேறும்படிச் செய்து; அவர்களுக்கு கரங்கொடுத்து, அரவணைத்து, கிறிஸ்துவின் அன்போடு சத்தியத்தை அறிவிக்கும் ஊழியத்தைச் செய்கிறார் பவுல். பவுல் அறிவித்த சத்தியம் எது? இயேசு தான் அந்த சத்தியம்.

*"... நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன்; என்னாலேயல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான். யோவான். 14:6"* என்றார் இயேசு. எல்லா ஊழியக்காரர்களும் சுவிசேஷகர்களும் இயேசுவைத்தானே பிரசங்கிக்கிறார்கள்? என்று நினைக்கலாம். உண்மை தான் எல்லோரும் இயேசுவைத்தான் பிரசங்கிக்கிறார்கள். ஆனால் பவுல் பிரசங்கித்த இயேசு யார்? அவர் எப்படிப்பட்டவர்?

*"இயேசுகிறிஸ்துவை, சிலுவையில் அறையப்பட்ட அவரையேயன்றி, வேறொன்றையும்*

*உங்களுக்குள்ளே அறிவியாதிருக்கத் தீர்மானித்திருந்தேன். 1 கொரி. 2:2."* பிதாவின் வார்த்தையாகிய இயேசுவையும், தேவன் அவரை மனுஷ ரூபத்தில் பூமியின் மேல் அனுப்பிய காரணத்தையும், அதன் பிரதிபலன்களையும் பவுல் பிரசங்கிக்கிறார். கண்ட கண்ட கதைகளையும் பிரசங்கித்து மக்களைப் போட்டு குழப்பவில்லை அவர். நியாயப்பிரமாணம் சார்ந்த பிரசங்கங்களின் மூலமாக சிலுவையின் இரகசியங்களை அறிவிக்க முடியாது. நியாயப்பிரமாணத்தை முடித்து வேறொன்றை ஆரம்பித்து வைக்கத்தானே இயேசு வந்தார்! அதனால் பவுல் நியாயப்பிரமாணத்தைச் சார்ந்து போதிக்கவில்லை. அதனால் தான் அவர் சென்ற சபைகளிலெல்லாம் குழப்பங்கள், பிரச்சனைகள், கூக்குரல்கள், சண்டைகள் உருவாகின.

*"... முதலாம் உடன்படிக்கை (நியாயப்பிரமாணம் – பத்து கட்டளைகள்) பிழையில்லாதிருந்ததானால், இரண்டாம் உடன்படிக்கைக்கு இடம் வேண்டுவதில்லையே. எபி. 8:7"*

*"... இரண்டாவதை நிலை நிறுத்துவதற்கு முதலாவதை நீக்கிப்போடுகிறார். எபி. 10:9"*

சிலுவையின் மூலமாக நீக்கிப்போடப்பட்ட முதலாம் உடன்படிக்கையான நியாயப்பிரமாணத்தையே மீண்டுமாக எடுத்து; அதன் மூலமாக தேவனை அறிந்து கொள்ளவும், கிறிஸ்துவுக்குள் வளரவும், கனிகொடுக்கவும், முயற்சித்த தேவ பிள்ளைகளைப் பார்த்து கண்கலங்குகிறார், அங்கலாய்க்கிறார்.

*"புத்தியில்லாத கலாத்தியரே, (சபை மக்களே) நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே. கலா. 3:1"*

பவுலின் கவலைக்கும், பயத்திற்கும், கோபத்திற்கும் நியாயமான காரணம் இருந்தது. ஆதியில் ஏவாளை மயக்கிய அதே சாத்தான்தான் இன்றும் சபை மக்களை சத்தியத்திற்குக் கீழ்படியாதபடி மயக்குகிறான்! இப்படிப்பட்ட பிரச்சனைகளை நினைத்து நாமும் கூட கவலைப்படவேண்டும்; அறியாமையின் இருளில் இருப்பவர்களுக்கு சத்தியத்தை சாந்தமாக ... மெதுவாக ... வாழைப்பழத்தில் ஊசியை ஏற்றுவதுபோல அறிவிக்கவேண்டும்!

நியாயப்பிரமாண சபைகளுக்குள் கிறிஸ்துவின் பிரமாண போதனைகளைக் கொண்டு போவது அப்படி ஒன்றும் எளிதானதல்ல. என்றாலும் பவுல் தன் வேலையை வெற்றியாக செய்து முடித்தார். அதனால்தான் இந்த சத்தியமான உபதேசம் சபை மத்தியில் இன்றளவும் சாகாமல் வளர்ந்து கொண்டே இருக்கிறது. சரியான சத்தியத்தை அறிந்தவர்களின் அளவு (%) ஒருவேளை மிகக்குறைவாக இருக்கலாம். என்றாலும் தேவனுக்கு இது ஒரு பிரச்சனை இல்லை. எப்போதுமே **minimum**-த்தை உபயோகித்து; **maximum**-த்தை முறியடிப்பது தான் தேவனுடைய போர் முறை! தான் ஒருவராய் பெரிய காரியங்களைச் செய்கிறவர் அவர். அவரையொத்த மனிதர்களாகிய நமக்கும் அந்த வல்லமையைக் கொடுத்திருக்கிறார். சத்தியத்தை மட்டும் சரியாகக் கற்றுக்கொள்ளுங்கள்; நீங்கள் ஒருவராகவே நின்று உலகத்தை மாற்றிக் காட்டலாம். உண்மை நம் வாயிலிருந்து புறப்படும் முன்னதாகவே ஒரு பொய் இந்த உலகத்தையே சுற்றி வந்து விடுகிறது என்பார்கள்! இருக்கலாம், உலகத்தின் சாபம் பொய்க்கு சாதகமாக இருக்கலாம். என்றாலும் என்றாவது ஒரு நாள் குட்டு வெளிப்படுவதும்; உண்மை ஜெயிப்பதும் உலகத்தில் நடந்து கொண்டுதான் இருக்கிறது. நாமும் அதை பார்த்துக்கொண்டுதான் இருக்கிறோம்.

இதைப் போலவே சபையிலும் இரண்டு விதமான உபதேசங்கள் வலம் வந்து கொண்டிருக்கின்றன.

1. பழைய ஏற்பாட்டில் மோசேயின் மூலமாக தேவன் ஏற்படுத்திக்கொடுத்த நியாயப்பிரமாணம் – பத்து கட்டளைகள் – இதைச் சார்ந்த உபதேசம். இது மனிதனின் கிரியையின் அடிப்படையில் செயல்படுகிற பிரமாணம். இதைச் செய்தால் இது கிடைக்கும் என்கிற ரீதியில் செயல்படுகிற பிரமாணம். இந்தப் பிரமாணம் தோல்வியடைந்ததால்; தேவன் இயேசுவின் மூலமாக சிலுவையில் அதற்கு ஒரு முடிவு கட்டினார்.

**2.** இது புதிய ஏற்பாட்டில், சிலுவையில் இயேசுவின் மூலமாக பழைய பிரமாணத்திற்கு முடிவு கட்டி, அதற்குப் பதிலாக தோல்வியடையாத ரீதியில் இயேசுவின் மூலமாக ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரமாணம். இது புதிய பிரமாணம், நீதியின் பிரமாணம், கிருபை பிரமாணம், விசுவாச பிரமாணம் , கிறிஸ்துவின் பிரமாணம் என்று பல பெயர்களில் வருகிறது.

இந்த இரண்டு பிரமாணங்களைப் பற்றியும் நிறைய பார்த்துவிட்டோம்.

சிலுவையில் இயேசு என்ன செய்தார் என்பதைச் சாத்தான் மறைத்து, காரியங்களை இருட்டடிப்பு செய்து, சபையினை வஞ்சித்தது தான் சபையின் மாபெரும் வீழ்ச்சிக்கு காரணமாகிப் போனது. பரலோகத் திட்டத்தை இழந்த பூலோகத்தை மீண்டுமாக பரலோகமாக்கவும், தேவ மகிமையை இழந்த மனிதன் மீண்டும் அந்த மகிமையைப் பெற்றுக் கொள்ளவும், தேவன் சிலுவையில் செய்த ஒரு மகத்தான காரியத்தை, தலை நசுக்கப்பட்ட சாத்தான் இந்த அளவுக்கு மனிதன் அறிந்து கொள்ளாதபடி மறைத்து; ஆசீர்வாதங்களை கெடுக்கிறான் என்றால் ... அவனைவிட தவறு நம் பக்கத்தில் தான் அதிகம் இருக்கிறது! சொல்லுகிறவன் சொல்லிவிட்டுப் போகட்டும்; கேட்கிறவனுக்கு புத்தி எங்கே போனது? "எச்சொல் யார் யார் வாய் கேட்பினும் அச்சொல்லின் மெய்ப்பொருள் காண்பதரிது" என்கிறான் உலக அறிஞன். உலகத்தார் உலகக் காரியங்களைக் குறித்து இந்த அளவுக்கு எச்சரிக்கையாக இருக்கும்போது; ஆவிக்குரியவர்களாகிய நாம்; ஆவிக்குரிய காரியங்களைக் கேள்விப்படுவதில் எந்த அளவுக்கு கவனமாக (**alert** ஆக) இருக்க வேண்டும்! (?)

## *பைபிள் வாசித்து கெட்டுப் போக முடியுமா? (!)*

இது ஒன்றும் விசித்திரமான கேள்வி இல்லை. பைபிளை வாசித்துத் தவறாக புரிந்து கொண்டோமானால் நிச்சயமாக பெரிய ஆபத்து காத்திருக்கிறது! எதைப் புரிந்து கொண்டோமோ அதன்படி நடக்க ஆரம்பிப்போம். ஏற்கெனவே இப்படித்தான் ஆளுக்கொரு பக்கமாக நடந்து போய்க்கொண்டே இருக்கிறார்கள். சிலர் அந்தி சாயும் நேரத்தில் தன்னந்தனியாக ஆற்றுப்பக்கமாக போகிறார்கள்; அங்கே கரையோரமாக அசைவின்றி படுத்திருக்கும் பெரிய முதலையை கவனிக்காமல் போனதால் ... ! ஒரு சிலர் புதை மணலுக்குள் புதைந்து போனார்கள்; அவர்களைக் காப்பாற்றி வெளியே இழுக்கப் போனவர்கள் கையில் வைத்திருந்ததோ மணல் கயிறுகள்! காட்டு மரத்தின்மேல் ஏறிப்போனவனை மலைபாம்பு ஒன்று சுற்றி வளைத்தது!

பைபிளை ஏன் தவறாக புரிந்து கொள்கிறார்கள்? ஏற்கனவே பாரம்பரிய, பெயர்க்கிறிஸ்தவ, மற்றும் நியாயப்பிரமாண சபைகளில் இருப்பதால். பிரகாசமில்லாத மனக்கண்கள், மங்கலான பார்வைகள் .. ! *"...இருளானது அவன் கண்களைக் குருடாக்கினபடியால் தான் போகும் இடம் இன்னதென்று அறியாதிருக்கிறான். 1 யோவா. 2:11* அதனால்தான் வேத வசனங்களை ஆராய்ந்து பாருங்கள் என்கிறோம். வாசிப்பது வேறு, ஆராய்வது வேறு." ஆராய்ச்சி செய்வதற்கு முன்னதாக பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்றுக் கொள்வது அவசியம். பிரகாசத்தைப் பெற்றுக் கொண்ட நம்முடைய மனக்கண்கள் நுண்ணோக்கியாக (**microscope**) இயங்குகிறது! நுண்ணோக்கி இல்லாமல் வேதத்தை ஆராய்ந்து விஞ்ஞானிகள் (சபை போதகர்கள்) வெளியிடும் செய்திகளால் சபை பெரிய குழப்பத்தில் சிக்கிக்கொண்டிருக்கிறது. பிரகாசமான மனக்கண்கள் இல்லாமல் வேதத்தை ஆராய்வது ... அது **impossible! ridiculous! Silly!**

நாங்கள் குடியிருக்கும் வீட்டின் முன்புறம் சில செம்பருத்திச் செடிகளை வளர்க்கிறோம்; அவைகளில் அழகான சிவப்பு செம்பருத்தி பூக்கள் பூத்திருக்கின்றன. பக்கத்தில் போய் அதிலிருந்து ஒரு இலையை பறித்து உள்ளங்கையில் வைத்து பார்க்கிறேன். ஒரு மேலோட்டமான பார்வையில் ஒரு பச்சை நிற இலை, அதன் விளிம்புகள், காம்பு, இலையினூடே பரவி பிரிந்து செல்லும் நரம்புகள் தெரிகின்றன, அவ்வளவு தான்.

அடுத்தக் கட்டமாக அந்த இலையை கொண்டுபோய் ஒரு மைக்ரோஸ்கோப்பின் அடியில் வைத்து பார்க்கிறேன். இப்போது நான் பார்ப்பது அந்த இலையைத்தானா என்ற சந்தேகம் வரும் அளவுக்கு அற்புதமாக இருந்தது. அந்த இலையை பல கோணங்களில் ஆராய்கிறேன்; அதன் முக்கிய வேலையான பச்சையம் தயாரிக்கும் முறையை (**Photosynthesis**) பற்றி ஆராய ஆரம்பிக்கிறேன்,

சில காரியங்கள் தெரிகிறது, அது: **A process by which green plants and other organisms turn carbon dioxide and water in to carbohydrates and oxygen, using light energy trapped by chlorophyll.** இலைகள் உணவு தயாரிக்கும் முறை ஓரளவுக்குத் தெரிகிறது. அடுத்த கட்ட ஆராய்ச்சிக்குள் போகிறேன், அது: **chlorophyll** பற்றியது. **Chlorophyll is contained within numerous minute membranous sacs chloroplasts within cells of the stems and leaves.** அடுத்த கட்ட ஆராய்ச்சி **Chloroplasts** பற்றினது ... அது: **Part of plant cell containing Chlorophyll.** இப்படியே தொடரப்பட்ட என் ஆராய்ச்சி குறிப்புகள் நூறு பக்கங்களுக்கு மேல் நீண்டது!

செம்பருத்தி இலையைப் பறித்து கையில் வைத்து பார்த்து விட்டு, அதைக் கீழே போட்டு விட்டு... இப்படிப்பட்ட வேதவாசிப்பால் தங்களுடைய ஆவிக்குரிய ஜீவியத்தில் ஆபத்தை வரவழைத்துக் கொண்டவர்கள் கோடானுகோடி.

புதிய ஏற்பாட்டில், அப்போஸ்தலனாகிய பவுல் ரோமாபுரியாருக்கு எழுதின கடிதத்திலிருந்தே இந்தப் பிரச்சனை ஆரம்பமாயிற்று. நுனிப்புல் மேய்ந்து கொண்டிருந்த சபையாருக்காக பவுல் ஜெபிக்கிறார். *“தாம் (பிதாவாகிய தேவன்) கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்ளுகிறன். எபே. 1:19”*

பிதாவாகிய தேவன் சிலுவையில் தன்னுடைய குமாரனாகிய இயேசுவைக் கொண்டு நமக்காகச் செய்த காரியங்களை நாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்பது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. நிச்சயமாக நாம் தெரிந்து கொண்டு தான் ஆக வேண்டும். ஏனென்றால் இயேசுவின் சிலுவை மரணப்பாடுகள் அவருக்காக அல்ல, நமக்காகத்தான். அதனால் தான் இயேசுவுக்கு சிலுவை தண்டனை நிறைவேற்றப்படும்போது அழுத பெண்களைப் பார்த்து இப்படிச் சொன்னார்: *“... எருசலேமின் குமாரத்திகளே, நீங்கள் எனக்காக அழாமல், உங்களுக்காகவும் உங்கள் பிள்ளைகளுக்காகவும் அழுங்கள். லூக். 23:28 என்றார்.”*

ஏன் அப்படிச் சொன்னார்? இயேசு பட்டபாடுகள் எதுவும் அவருக்காக அல்ல, அவர் எந்த பாவமும் செய்யவில்லை, அவருக்கு எந்தக் குறைவும் இல்லை. எந்த குறைவுமில்லாத பரிபூரணமான பரலோகத்தில் அவர் இருக்கிறார். பிரச்சனை பூலோகத்திற்கும், அதில் வசிக்கிற மனுவர்க்கத்துக்கும் தான். *“... மேசியா சங்கரிக்கப்படுவார்; ஆனாலும் தமக்காக அல்ல, (நமக்காக)... (தானி. 9:26)”* என்ற தானியேலின் தீர்க்கதரிசன வார்த்தைகளைக் கவனியுங்கள்.

தேவனுடைய பூலோகத் திட்டம்; முதல் மனிதனின் கீழ்படியாமையினால் விழுந்து நொறுங்கி தவிடு பொடியான சோகக் கதையைப் பார்த்து வருகிறோம். பூலோகத்தின் இந்த சோகக் கதையை மாற்றி எழுதி; மனிதனின் வாழ்க்கையை **reset** செய்யவே இயேசு வந்தார்; பிதாவின் திட்டத்தை சிலுவையில் நிறைவேற்றி முடித்தார். இயேசுவின் சிலுவைப் பாடுகளுக்கான காரணம் தெரியாமல், புரியாமல் அவருடைய வேதனையையும், காயத்தையும், இரத்தத்தையும் பார்த்து அழுத பெண்களைப் பார்த்து இப்படிச் சொன்னார்.

பிதாவின் திட்டத்தை பரிபூரணமாக நிறைவேற்றி முடித்து, சாத்தானின் தலையை நசுக்கி, பூமியையும் அதன் சாபத்தையும் **overcome** செய்தார். அந்த இயேசுதான் இப்போது நமக்குள் வசிக்கிறார். அதனால் நம்மாலும் உலகத்தை மேற்கொள்ள (ஜெயிக்க) முடியும். அதாவது பூமியின் சாபத்தை, அடிமைப்படுத்தும் பாவத்தை, பாடாய்ப்படுத்தும் வியாதியை, விழிபிதுங்க வைக்கும் தரித்திரத்தை ஜெயிக்க முடியும். இயேசு நம் வலப்பக்கத்தில், மேலே, கீழே, சூழ்ந்து ... அதெல்லாம் பழைய ஏற்பாட்டின் காலத்தில். இப்போது அவர் நமக்குள் இருக்கிறார் என்ற இரகசியத்தை அம்பலப்படுத்துவதுதான் எங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் ஊழியத்தின் முக்கிய நோக்கம்.

சாத்தானின் வண்டவாளங்களை ஏற்றி உலகளாவிய சபைகளுக்குள் அனுப்பி; விழிப்புணர்வை உண்டாக்க உலகளாவிய சபைகளுக்குள் தண்டவாளங்கள் போடப்பட்டு வருகின்றன! கண்ணுக்குத்

தெரியாத இந்த தண்டவாளம் போடும் வேலை, அதன் மேல் சாத்தானின் வண்டாவாளங்களை (பொய், புரட்டு உபதேசங்கள் – நியாயப்பிரமாணம் சார்ந்த பிரசங்கங்கள்) ஏற்றும் வேலை, சிக்குபுக்கு சிக்குபுக்கு ரெயிலை இயக்கும் வேலை! இப்படியாக பலதரப்பட்ட வேலையில் எங்கள் **team** பிசியாக இருக்கிறது. வேலைக்கு ஆள் தேவை, ஆம்... இராஜாவின் வேலைக்கு ஆள் தேவை, சேர்ந்து கொள்ளுங்கள் எங்களோடு!

*"புறஜாதிகளுக்குள்ளே விளங்கின இந்த இரகசியத்திலுள்ள மகிமையின் ஐசுவரியம் இன்னதென்று, தேவன் தம்முடைய பரிசுத்தவான்களுக்குத் தெரியப்படுத்தச் சித்தமானார்; கிறிஸ்துவானவர் மகிமையின் நம்பிக்கையாக உங்களுக்குள் இருப்பதே அந்த இரகசியம். கொலோ. 1:27."* உங்களைப் பற்றி உங்களுக்கே தெரியாதிருக்கும் இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறோம்.

(சிந்திப்பதற்காக ஒரு விஷயம்: அமெரிக்க **Shoe company** ஒன்று மறைந்த அமெரிக்க ராக் பாடகர் ஜிமி ஹென்ட்ரிக்ஸ்சின் நினைவாக ஒரு காலணியை வெளியிட்டது. அதில் 1967ம் ஆண்டு வெளியான அந்த பாடகரின் "ஆக்சிஸ் போல்டு அண்ட் லவ்" என்ற ஆல்பத்தின் மேல் உறையின் படத்தை காலணிகளில் பொறித்தது.

அந்த மேல் உறைகளில் சில தெய்வங்களின் படங்கள் – சாத்தானுடைய தூதர்களின் படங்கள் – இடம் பெற்றிருந்ததினால் அவைகளும் காலணிகளில் டிசைன் பண்ணப்பட்டன! தேவனை அறியாத மக்களிடமிருந்து கடும் எதிர்ப்பு கிளம்பியதால் இந்த காலணிகளின் விற்பனையை அந்த கம்பெனி கைவிட்டு விட்டது!)

*"சமாதானத்தின் தேவன் சீக்கிரமாய்ச் சாத்தானை உங்கள் கால்களின் கீழே நசுக்கிப்போடுவார். ... ரோமர். 16:20."* சொல்ல வருகிறது என்னவென்றால்; உலக மனிதர்களுக்கே சாத்தானை வைக்க வேண்டிய இடம் தெரிந்திருக்கிறது! பரலோகவாசிகளாகிய தேவ பிள்ளைகளுக்கோ... சாத்தானை வைக்கக்கூடாத இடத்தில் (தலை மேல்) வைக்கத் தெரிந்திருக்கிறது!

## ... நீங்கள் பாவம் செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன் ... 1 யோவான் 2:1:

சிலுவையில் பிதாவாகிய தேவன் இயேசுவின் மூலம் நமக்கு தந்த புதிய உடன்படிக்கையைப் பற்றி பல வாக்குவாதங்கள், சர்ச்சைகள் சபை வட்டாரத்தில் காணப்படுகிறது. அதில் முக்கியமானதொன்று: பாவம் செய்வதற்கு அனுமதி **(licence)** கொடுக்கப்படுகிறது என்பது தான்! (சரி, பாவம் செய்வதற்கு அனுமதி கொடுக்கப்படுகிறது என்று எங்களைப் பார்த்து குற்றம் சாட்டுபவர்களைப் பார்த்து கேட்கிறேன்: உங்களுக்கு பாவம் செய்ய அனுமதி கொடுக்கப்படவில்லை, அப்படியிருந்தும் பாவம் செய்கிறீர்களே, ஏன்?!) பவுல் அக்கால சபைகளுக்கு புதிய உடன்படிக்கையை பிரசங்கித்த போதும் இதே குற்றச்சாட்டு இருந்தது. ரோமர் 3 ஆம் அதிகாரத்தில் பவுல் இதற்கு பதிலடிக் கொடுப்பதைப் பார்க்கலாம். *"நன்மை வரும்படிக்கு தீமை செய்வோமாக என்றும் சொல்லலாமல்லவா? நாங்கள் அப்படிப் போதிக்கிறவர்களென்றும் சிலர் எங்களைத் தூஷித்துச் சொல்லுகிறார்களே; அப்படிப் போதிக்கிறவர்கள் மேல் வரும் ஆக்கினை நீதியாயிருக்கும். ரோமர் 3:8"*

பவுலும் சரி, யோவானும் சரி, புதிய ஏற்பாட்டில் அப்போஸ்தல ஊழியத்தைச் செய்தவர்கள் நாம் பாவம் செய்யாமலிருப்பதற்காகவே இந்தச் சத்தியத்தை அறிவித்தார்கள். பாவம் செய்வதற்கு யாரும் அனுமதி கொடுக்க வேண்டிய அவசியமே இல்லை, அதுதான் மனிதன் பிறக்கும்போதே அவனுடன் ஒட்டிக்கொண்டு பிறக்கிறதே! பாவத்திற்கு **licence** கொடுக்க வேண்டிய அவசியமேயில்லை, பாவம் செய்ய யாரும் சொல்லிக்கொடுக்க வேண்டியதும் இல்லை! சிறு குழந்தை முதல் பொக்கை வாய் தாத்தா, பாட்டி வரை எல்லோருமே பாவம் செய்வதில் **expert** (கைதேர்ந்தவர்களாக, நிபுணர்களாக, சாமர்த்தியசாலிகளாக) இருக்கிறார்கள்!

எப்படியென்றால் பூமியின் ஒட்டுமொத்த மனுக்குலத்தின் பிரதிநிதியான **(ambassador -**

**representative)** ஆதாமின் மூலமாக பாவம் எல்லோருக்குள்ளும் இயற்கையாகவே கடந்து வந்து கொண்டே இருக்கிறது. பாவம் என்பது ஒரு பிரமாணம் **(law).** அது தானாக இயங்கிக்கொண்டே இருக்கும். இதற்கு யாரும் வாத்தியார் போட்டு டியூஷன் வைக்க வேண்டியதில்லை. பாவம் செய்யாமல் இருக்கத்தான் கற்றுக் கொடுக்க வேண்டியதாயிருக்கிறது. அதற்காகத்தான் சபைகள், சபை போதகர்கள் இருக்கிறார்கள். *"என் பிள்ளைகளே, நீங்கள் பாவஞ்செய்யாதபடிக்கு இவைகளை உங்களுக்கு எழுதுகிறேன்; ... 1 யோவான். 2:1"* கவனியுங்கள், நாங்களும் நீங்கள் பாவம் செய்ய வேண்டும் என்று இவைகளை உங்களுக்கு எழுதவில்லை! பாவம் செய்யக்கூடாது என்ற போதனை சபை வட்டாரத்தில் மட்டுமல்ல, ஒட்டுமொத்த உலகமே அதைத்தான் அறிவிக்கிறது. பூமியில் பிறக்கிற எந்தவொரு மனிதனாக இருந்தாலும் சரி, அவன் பாவம் செய்யாமல் பரிசுத்தமாக வாழவே ஆசைப்படுகிறான். ஏனென்றால் ஒவ்வொரு மனிதனும் தேவ சாயலின்படி **(similitude - resemblance)** பிறந்திருக்கிறான். ஆனால் பாவம் செய்யாமலிருக்க மனிதனால் முடிவதில்லை, அதனால் தான் பாவம் செய்கிறான். ஏனென்றால் ஆதாமின் மூலமாக பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலை மனுக்குலம் இழந்துவிட்டது.

மனுக்குலத்தின் ஒட்டுமொத்த பிரதிநிதியான ஆதாம் பாவம் செய்ததினால்; அந்தப் பாவம் செய்கிற தன்மை வாழையடி வாழையாக சந்ததிகளுக்கும் கடந்து வர ஆரம்பித்தது. ஏனென்றால் மனிதன் தன் குழந்தைகளை பாவத்தில் கர்ப்பம் தரிக்க வேண்டிய நிர்ப்பந்தம் உருவானது. தேவனுடைய ஆரம்ப நியமம் மிக நல்லதான ஒன்றாக இருந்தது. அந்த நியமத்தின்படி போயிருந்தால் பிள்ளைகளை பாவத்தில் கர்ப்பம் தரிக்க வேண்டிய கட்டாயம் உருவாகியிருக்காது. ஆனால் பூமி சாபத்துக்குள்ளான பிறகு, ஆதாமும் ஏவாளும் ஏதேனை விட்டு வெளியேறிய பிறகு, ஏவாள் கர்ப்பம் தரிக்கும் சூழ்நிலை உருவானதால் நிச்சயமாக அதிலே பிரச்சனை இருந்திருக்கும். தேவனின் நியமம் அதில் வெளிப்பட்டிருக்காது. பூமியின் சாபத்தால் இயக்கப்பட்டு மகிமையிழந்த சரீரத்தின் தூண்டுதல்களால் ஏற்பட்ட முறைமைதான் இக்கால கர்ப்பம் தரிக்கும் முறைமை. சாத்தான் ஏவாளை தனிமையில் சந்தித்து வஞ்சித்த போது, இந்த பாவம் (இச்சை) முளைத்தெழும்புவதற்கேதுவான வார்த்தைகளை விதைத்து விடுகிறான். வார்த்தைகள் தேவ நியமத்திற்கு மாறானதொன்றை ஏற்படுத்தி விடுகிறது.

ஆதி. 2–ம் அதிகாரத்திற்கு பிற்பாடு நடக்கிற எதுவுமே தேவனுடைய பரிபூரண சித்தமல்லாத, தேவன் அனுமதிக்காத, அவருடைய திட்டத்திற்குப் புறம்பான காரியங்கள் தான் என்பதைப் பார்த்து வருகிறோம். அதற்குப் பிறகு இந்த பூமி அதனுடைய சாப நியமத்தின்படியே இயங்கி வருகிறது. அதுமட்டுமல்ல, பூமியும் அதின் நிறைவும், அதிலுள்ள சகல மக்களும், அவர்களுடைய வாழ்க்கை நிகழ்வுகளும் அந்த சாப நியமத்தின் போக்கிலேயே விட்டுவிடப்பட்டன. காரணம் வேறு வழியில்லை.

இந்த சாபத்தால் பூமியைக் குறித்த தேவனுடைய திட்டத்தைக் கெடுத்துப்போட்ட சீர்கேடுகளை மாற்றி; மீண்டுமாக பூமியை ஆரம்பத்தில் இருந்தது போல மிக நன்றாக ஆக்க வேண்டுமானால்; அதற்கு தேவன் ஏதாவது செய்தாக வேண்டும். அதாவது இயேசு பாவ பரிகாரியாக பூமிக்கு வர வேண்டும். தேவனுடைய திட்டப்படியே இயேசு பூமிக்கு வந்தார், ஆதாமினால் மனுவர்க்கத்திற்கு ஏற்பட்ட பிரச்சனையை சிலுவையில் சரி செய்தார். பிதாவாகிய தேவன் இயேசுவின் மூலமாக நமக்குக் கொடுத்திருக்கும் இந்த **assignment** பெரியது.

*"சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ, 1 கொரி. 9:16*

இழந்து போனதை மீட்கவும், பாவிகளை இரட்சிக்கவும் வந்தார் என்பதான காரியங்களை பார்த்துவிட்டோம். இப்போது மிக முக்கியமான காரியம் ஒன்றை இங்கே பார்க்கப்போகிறோம். அது: பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலை நமக்கு தருவதற்காகவே இயேசு வந்தார். என்றைக்காவது இதை யோசித்துப் பார்த்ததுண்டா? அதாவது நம்மை நீதிமான்களாக்குவதற்காக இயேசு வந்தார். நாம் நாமாகவே நீதிமான்களாகவில்லை, நாம் நம்மை நீதிமான்களாக ஆக்கிக்கொள்ளவும் இல்லை. இயேசு நம்மை நீதிமான்களாக்கினார்!

*"... நாம் விசுவாசத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறபடியால், ... ரோமர். 5:1"*

*"... நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப்பட்டிருக்க, ... ரோமர். 5:9"*

*"... கர்த்தராகிய இயேசுவின் நாமத்தினாலும், நமது தேவனுடைய ஆவியினாலும் கழுவப்பட்டீர்கள், பரிசுத்தமாக்கப்பட்டீர்கள், நீதிமான்களாக்கப்பட்டீர்கள். 1 கொரி. 6:11"*

*"தமது கிருபையினாலே நாம் நீதிமான்களாக்கப்பட்டு, ... தீத்து. 3:6"*

எல்லா வசனத்திலும் ஒன்றைக் கவனியுங்கள். நாம் நம் சுய முயற்சியினாலோ, நியாயப்பிரமாண முறைமைகளை கஷ்டப்பட்டு கடைப்பிடித்ததினாலோ நீதிமான்களாக்கப்படவில்லை. சடங்கு சம்பிரதாயங்களைக் கைக்கொண்டதினாலோ, பொருத்தனைகளைச் செலுத்தினதாலோ, தசமபாகம் கொடுத்ததினாலோ நாம் நீதிமான்களாகவில்லை. நம்முடைய நற்கிரியைகளினாலோ, தானதர்மங்கள் செய்ததினாலோ, நன்மைகள் செய்ததினாலேயோ இது நடக்கவில்லை! அப்படியானால் ...

**சிலுவையில் சிந்தப்பட்ட இயேசுவின் இரத்தம்; நீதி செய்ய முடியாமல் சிக்கித் தவித்துக் கொண்டிருந்த நம்மை நீதிமான்களாக்கிற்று. இயேசுவின் நாமம் நம்மை நீதிமான்களாக்கியது, பரிசுத்தாவியானவர் நம்மை நீதியாக்கினார்; இந்தக்காரியம் முழுவதும் கிருபையினால் நடந்தது. அதாவது நாம் நீதிமான்களாக இருக்கவில்லை, நீதி செய்ய திராணியுமில்லை. என்றாலும் நம்முடைய தகுதியினால் அல்ல, இயேசுவின் தகுதியினால் நாம் நீதிமான்களாக்கபட்டிருக்கிறோம்.**

*"கிருபையினாலே விசுவாசத்தைக்கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள்; இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு. எபே. 2:8."*

பாவத்தில் கர்ப்பம் தரிப்பிக்கப்பட்ட நம்மை நீதிமான்களாக்கினார்! பாவமில்லாமல் கர்ப்பம் தரிப்பிக்கப்பட்ட இயேசுவை நமக்காக பாவமாக்கினார்! நீதி செய்ய முடியாத நம்மை நீதியாக்கினார்; பாவம் செய்ய முடியாத இயேசுவை பாவமாக்கினார்! என்ன இது? இது ஒரு விபரீதக்கோட்பாடு போல அல்லவா தெரிகிறது? (ஏன், விபரீத விளையாட்டு போலக்கூடத்தான் தெரிகிறது!) அப்படித்தான் தெரிகிறது, ஆனால் தேவன் இதையெல்லாம் ஏன் செய்தார் என்பதை விளங்கிக்கொள்ள முயற்சிப்போம். வகுப்பறையில் ஆசிரியர் பாடம் நடத்திக்கொண்டிருக்கிறார். அவர் சொல்வதைப் புரிந்துக்கொள்ள வேண்டும் என்ற விருப்பமுள்ளவனுக்குத்தான் அது புரியும். கண்ணைத் திறந்து கொண்டு பகல் கனவு கண்டு கொண்டிருப்பவனுக்கு எதுவுமே புரியாது.

நாம் பாவம் செய்ய ஆரம்பித்ததற்கு முன்பாகவே பாவியாகப் பிறந்தோம்! காரணம் ஆதாமினால் நம் ஜென்ம பாவம் நம்மோடு ஒட்டிக்கொண்டு பிறந்தது! *"... மரணமானது ஆதாம் முதல் மோசே வரைக்கும், ஆதாமின் மீறுதலுக்கொப்பாய்ப் பாவஞ்செய்யாதவர்களையும் ஆண்டு கொண்டது; ... ரோமர். 5:14"* ஒரு மனுஷன் இந்த பூமியில் பிறக்கும்போதே பாவியாக பிறக்கின்ற இந்த பயங்கரம் ... தேவனைப் போல படைக்கப்பட்டிருந்த மனிதனை மனிதனாக வாழ முடியாதபடி செய்தது. அதுவாவது பரவாயில்லை, மிருகத்தைவிட கீழ்த்தரமாக வாழவும் வைத்தது.

பாவம் செய்தது ஆதாம் மட்டும் தான். ஆனால் அவனுடைய வித்தின் மூலமாக அந்த பாவம் அடுத்தடுத்த சந்ததிகளுக்குக் கடத்தப்பட்டது. பாவத்தினால் மகிமையிழந்த சரீரத்தினால் இது தான் சாத்தியமாயிற்று. மனிதர்கள் இப்படி பாவத்தில் பிறப்பதை தடுத்து நிறுத்த அக்காலகட்டங்களில் வேறு வழி எதுவும் இல்லாததினால்; இதை இப்படியே விட்டுவிட வேண்டியதாயிற்று. பாவம் செய்யாதவர்களையும் பாவம் மேற்கொள்ளும் இந்தப் பரிதாபத்தை மாற்ற தேவன் ஒரு திட்டத்தை வைத்திருந்தார். அது: நீதி செய்யாதவர்களையும் நீதிமான்களாக்கும் மிக உன்னத திட்டம்!

ஆதாமின் பாவம் ஒட்டு மொத்த மனுக்குலத்தையும் பாவத்தில் தள்ளி; கொன்று குவித்தது. உலகத்தை மீட்கும் பொருளாக வந்த இயேசுவின் நீதி ஒட்டு மொத்த மனுக்குலத்தையும் தன் நீதிக்குள்ளே தள்ளி; நித்திய ஜீவனுக்குள் நடத்தியது! இது எப்படி இருக்கு? மிக நல்ல, நியாயமான காரியமாக இருக்கிறதல்லவா? ஆம், உண்மையாகவே நம் தேவன் நமக்காக இந்த நேர்மையான

நல்ல காரியத்தை யுகா யுகங்களாக திட்டமிட்டு நடத்தி முடித்தார்.

இயேசுவை இந்தப் பூமியில் மனிதனாக பிறக்க வைத்த விதமே வித்தியாசமானது. எல்லா மனிதர்களையும் போல இயேசு ஒரு ஆணின் வித்தினால் கர்ப்பம் தரிக்கப்படவில்லை. அப்படிச் செய்தால் ஆணின் வித்தின் வழியாக தலைமுறை தலைமுறையாக கடந்து வரும் ஆதாமின் பாவம் இயேசுவின் பிறப்பிலும் நுழைந்து விடுமே! அதனால் தேவன் ஞானமாக இயேசுவின் பிறப்பில் ஆணைத் தவிர்த்து **(avoid)** விடுகிறார். அதனால் இயேசு பாவமில்லாமல் பிறக்கிறார்... ஆதாமைப் போலவே.

பாவமில்லாமல் பிறந்த முதல் மனிதன் ஆதாம்; சாத்தானால் பாவம் செய்தபோது, ஒட்டுமொத்த மனுவர்க்கமும் பாவத்திற்குள்ளாகியது. ஒரு பாவமும் அறியாத சிறு குழந்தைகள் கூட "பாவி" என்ற பெயரோடு தாயின் கருவறையிலிருந்து வெளியே வந்தது. என்னவொரு பரிதாபம்! இந்த பரிதாப நிலைமை இயேசுவின் சிலுவை மரணம் வரையிலும் நீண்டது. இந்தப் பிரச்சனைக்கு முடிவு கட்ட தேவன் செய்த "பரிகாரம் தான் இயேசு". பாவமில்லாத முறையில் பிறந்த இயேசு; தன்னுடைய நீதியினால் ஒட்டுமொத்த மனுவர்க்கத்தையும் நீதிக்குள்ளாக்கினார். பாவிக்கு "நீதிமான்" என்று பெயர் சூட்டினார்!

பாவியாயிருக்கும் ஜனங்கள் எப்போது நீதிமான்களாக்கப்படுகிறார்கள்? சுவிசேஷ கூட்டங்களில் தான்!

ஆனால் இந்தக் காரியத்தை பிரசங்கித்தால் சபைக்குள் பிரச்சனை, குழப்பம், சண்டை, பிரிவினைகள், வெளிநடப்புகள் ... ஏன் இப்படி நடந்து கொள்ளுகிறார்கள்?

*"நான் உங்களுக்குச் சத்தியத்தைச் சொன்னதினாலே உங்களுக்குச் சத்துருவானேனோ? கலா. 4:16."* ஒரு மனிதனின் (ஆதாமின்) பாவத்தினால் எல்லோரும் பாவியாக்கப்பட்டதை ஏற்றுக் கொள்ளும் தேவ பிள்ளைகள்; ஒரு மனிதனின் (இயேசுவின்) நீதியால் எல்லோரும் நீதிமான்களாக்கப்பட்டதை மட்டும் ஏற்றுக் கொள்வதில்லை, தயக்கம் காட்டுகிறார்கள். அது எப்படி சாத்தியமாகும்? நாம் நீதிமான்களாக வேண்டுமானால்; அதற்கு நாம் தான் முயற்சிகள் எடுக்க வேண்டும், நற்கிரியைகள் செய்து நல்லவர்களாக வாழ்ந்து காட்ட வேண்டும் என்கிறார்கள். ஐம்புலன்களை அடக்கி நல்லவர்களாக வாழ இவர்கள் எடுக்கும் முயற்சிகளைப் பார்த்தால் செப்படி வித்தைக்காரனின் வித்தைகள்தான் ஞாபகத்திற்கு வருகிறது. ஆனாலும் முடிகிறதா என்றால் அதுவும் இல்லையே.

நாம் நீதிமான்களாக்கப்பட்டிருக்கிறோம் என்கிற சத்தியம் தெரியாததினால் தான் இப்படிப்பட்ட சுய முயற்சிகளில் ஈடுபடுகிறார்கள். இன்னமும் தங்களைப் பாவியென்று நினைத்துக் கொண்டிருக்கிறார்கள், அப்படியே குறிப்பிடவும் செய்கிறார்கள். பற்றாக்குறைக்கு சபையிலும் தேவபிள்ளைகளை பாவிகள் என்றே குறிப்பிடுகிறார்கள். இயேசுவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட பிறகும் இன்னமும் பாவி என்றே அழைக்கப்படுவோமானால் ... நம் பாவங்களை சுத்திகரிக்கும் ஆற்றல் இயேசுவின் இரத்தத்திற்கு இல்லையா? பரிசுத்தமாக்கப்பட்ட பிறகும் தங்களை இன்னமும் பாவி என்றே நினைத்துக்கொண்டிருப்பவர்கள்; தொடர்ந்து பாவம் செய்யும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். பாவி என்றால் பாவம் செய்துதானே ஆக வேண்டும்? பாவி என்ற வார்த்தை தேவ பிள்ளைகளின் இருதயத்தில் தாங்கள் இன்னமும் பாவிதான் என்கிற படத்தை உருவாக்கிக் கொண்டே இருக்கிறது. இருதயத்தில் இருப்பது பேசும் போது வார்த்தையாக வெளிப்பட்டுக்கொண்டே இருக்கிறது. பேசுகிற வார்த்தைகளின்படியே நடக்கிறது, பாவம் செய்ய சந்தர்ப்பங்கள் உருவாகின்றன, தொடர்ந்து பாவத்திலேயே வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

நான் பாவி என்கிற எண்ணம் நம்மை பரிசுத்தமாக வாழ முடியாதபடி தடை செய்கிறது. கவனியுங்கள்... நான் பரிசுத்தவான், நீதிமான் என்ற தீர்க்கமான எண்ணம் இருந்தால் தான் பரிசுத்தமாக வாழ முடியும். முதலில் எண்ணத்தை மாற்ற வேண்டும்; பேச்சு தானாக மாறிவிடும். குதிரையானது வண்டியின் முன் பகுதியில் கட்டப்பட்டிருந்தால் தான் வண்டி ஓடும். இரட்சிக்கப்பட்டு, நீதிமான்களாக ஆக்கப்பட்டப் பிறகும் தன்னைப் பாவி என்றே நினைத்துக் கொண்டிருக்கும் ஒரு நபரின் சூழ்நிலை

எப்படி இருக்கிறது என்றால் … வண்டியை, குதிரைக்கு முன்பக்கத்தில் இணைத்ததைப் போலிருக்கிறது.

நாம் நீதிமான் என்கிற உணர்வு குதிரையை போல இருக்கிறது. நம்முடைய பரிசுத்த ஜீவியத்தை வண்டிக்கு ஒப்பிடலாம். குதிரை முன்பாக கட்டப்பட்டிருந்தால்; குதிரை ஓட ஓட வண்டி தானாகவே பின்னாக வந்து கொண்டிருக்கும். நாம் நீதிமான் என்கிற சத்தியத்தை அறிந்திருந்தோமானால்; பரிசுத்த ஜீவியம் தானாகவே சாத்தியமானதாகிவிடும். கஷ்டப்பட்டு பரிசுத்தமாக வாழ முயற்சிகள் எதுவும் எடுக்க வேண்டியதிருக்காது. குதிரை முன்னதாக ஓடிக்கொண்டிருக்கும்போது; பின்னாக இருக்கும் வண்டி கஷ்டப்பட்டு தானும் முயற்சி எடுத்து குதிரைக்கு பின்னாக ஓட வேண்டியதில்லையே! அதே போல நாம் பரிசுத்தவான், பரிசுத்தவான்களாக ஆக்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மை நமக்கு புரியுமானால்; பரிசுத்த ஜீவியம் இலகுவாகிவிடும், அது தானாக வந்துவிடும்.

இந்த சத்தியம் தெரியாமல் வண்டியை குதிரைக்கு முன்பாக இணைத்து விட்டு, ஓட முடியாமல் முழித்துக்கொண்டு நிற்கும் தேவ பிள்ளைகள்தான் இன்றைய தினம் அதிகமாயிருக்கிறார்கள் **(majority).** நியாயப்பிரமாண கிரியைகள், முயற்சிகள் சபை மக்களை இப்படிப்பட்ட பரிதாபமான சூழ்நிலைக்குள் நிறுத்தி வைத்திருக்கின்றன. மனது எப்படியோ அப்படியே மனிதனும் இருக்கிறான்; நினைவுகள் எவ்வழியோ, அவ்வழியே மனிதனும் போகிறான். பாவி என்கிற எண்ணமுடைய மனிதனால் பரிசுத்தத்தில் நடக்கவே முடியாது; பாவி என்கிற எண்ணம் பாவத்திற்குள்தான் நடத்த முடியும். இயேசுவை ஏற்றுக்கொண்டு ஆண்டாண்டு காலமாகியும் தேவபிள்ளைகள் தொடர்ந்து உலகத்தாரைப் போலவே பாவங்களில் வாழ்கின்ற காரணம் இப்போது புரிந்திருக்கும். தான் பரிசுத்தவான், நீதிமான் என்கிற எண்ணம் தான் ஒரு விசுவாசியை பரிசுத்தமாக வாழ வைக்கும்.

தேவன் தன் பிள்ளை இயேசுவின் மூலமாக சிலுவையில் முடித்து வைத்த நியாயப்பிரமாண கிரியைகளை இப்போதும் முயற்சிப்பவர்களின் நிலைமை இதுதான். நியாயப்பிரமாணத்தின் கிரியைகளை செத்த கிரியைகள் என்று வேதம் குறிப்பிடுகிறது. வண்டிக்கு பின்னாக கட்டப்பட்ட குதிரைகள் திருதிருவென்று முழித்துக்கொண்டு நிற்கின்றன. நத்தைகளும், ஆமைகளும், எருமை மாடுகளும் குதிரையை **overtake** செய்து முன்னாகப் போய்க்கொண்டிருக்கின்றன! குதிரைக்கு வேகம் அதிகம் தான்; என்றாலும் அவை வண்டியால் தடைபட்டு நின்ற இடத்திலேயே நிற்கின்றன! ஒன்றல்ல, இரண்டல்ல கோடிகோடியான குதிரைகள் நின்ற இடத்திலேயே நிற்கின்றன.

குதிரையை அவிழ்த்து வண்டிக்கு முன்பாக கட்டுங்கள், குதிரை ஓட ஆரம்பித்ததும் வண்டி தானாகவே நகர்ந்து பின்னால் ஓட ஆரம்பித்து விடும். இந்த வேலைதான் சிலுவையில் நடந்தது. நியாயப்பிரமாண கிரியைகளினால் யாரும் நீதிமானாக முடியாது, பரிசுத்த ஜீவியம் செய்ய முடியாது என்பதை அறிந்த இயேசு; புதிய நீதியின் பிரமாணத்தைக் கொண்டு வந்து சிலுவையில் அமல்படுத்தினார். அதாவது குதிரையை அவிழ்த்து வண்டிக்கு முன்னதாகக் கட்டினார். இனிமேல் வண்டிக்கு வேலை இல்லை. குதிரை இழுக்க, கண்ணை மூடிக்கொண்டு தைரியமாக பின்னாகச் செல்லலாம். இயேசுவின் நீதிக்கு முன்னால் நம் கிரியைகளுக்கு வேலையில்லை, அவற்றிற்கு மதிப்பும் இல்லை. அவைகளெல்லாம் செத்த கிரியைகள் என்ற இரத்தம் உறைய வைக்கும் பயங்கர உண்மையை அறிந்து கொள்வோமாக!

இயேசு ஜெயித்தார்; ஜெயக்கொடி நம் கையில், இனி யுத்தம் அவசியமில்லை. இயேசு நீதி செய்தார், நம்மை நீதிமான்களாக்கிவிட்டார், அதனால் இனிமேல் நீதியைத்தான் செய்வோம். *“தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யான், ஏனெனில் அவருடைய வித்து அவனுக்குள் தரித்திருக்கிறது; அவன் தேவனால் பிறந்தபடியினால் பாவஞ்செய்யமாட்டான். 1 யோவான். 3:9.” “தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கன் அவனைத் தொடான். 1 யோவான். 5:18.”*

பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் பிரசங்கங்கள் அவசியம் என்பது சபை மத்தியில் முன் வைக்கப்படும் ஒரு எச்சரிக்கை. வருஷக்கணக்கில் கண்டிக்கப்பட்டும் யாரும் திருந்துகிற மாதிரித் தெரியவில்லையே, திருந்த முடிவதில்லை என்பதே உண்மை! உருட்டல் மிரட்டல்களுக்கு பயந்து

ஒன்றிரண்டு நாள், அல்லது ஒரு **short period** தன்னுடைய பாவங்களை நிறுத்தலாம். சில நாட்களில், ... சில மாதங்களில் வேதாளம் திரும்பவும் முருங்கை மரத்திலேறிவிடும்; சாம்பார் வைக்க முருங்கைக்காயை பறித்தும் கொடுக்கும்! இனிமேலாவது யாரும் குதிரையை வண்டிக்கு முன்னதாக கட்டி ஓட்ட முயற்சிக்காதீர்கள்.

*"வாரினாலும் கடிவாளத்தினாலும் வாய் கட்டப்பட்டாலொழிய, உன் கிட்டச் சேராத புத்தியில்லாக் குதிரையைப் போலவும், கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம். சங். 32:9."* தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் சுதந்திரமான பிரமாணத்தை பிரயோஜனப் படுத்துவதை விட்டுவிட்டு; கண்ணியிலும் வலையிலும் குழியிலும் சிக்கிக் கொள்ளாதிருப்போம். தேவன் நமக்காக செயல்படுத்தியிருக்கும் இத்தனை இலகுவான வழியை விட்டு விட்டு மீண்டுமாக நியாயப்பிரமாண முயற்சிகளில் இறங்கி; பாவம் செய்யாதபடி நம்மை நாமே அடக்க முயற்சிப்போமானால் ... நிச்சயமாக பாவம் நம்மை ஜெயித்து **(overlook)** விடும்!

புதிதாக சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட கிருபை பிரமாணத்திற்கு கீழ்ப்பட்டிருக்கிற நாம் தேவனுடைய கிருபையை காரணமாகக்காட்டி பாவம் செய்ய முடியாது என்பதை அறிந்து கொள்ளலாம். பாவம் இனிமேல் நம் தலைமேல் ஏறி உட்காராது; வேண்டுமானால் கொஞ்சம் தூரம் துரத்திப் பார்க்கும், பிறகு கால்வலித்து, மூச்சு வாங்கி நின்றுவிடும்! முன்பு, நாம் நியாயப்பிரமாணத்திற்கு உட்பட்டிருந்த காலங்களில் பாவம் நம்மை ஜெயித்தது, அடிமைப்படுத்தியது. ஏனென்றால் பிரமாணம் என்றாலே அது ஒரு **law** (சட்டம்) என்பது தெரியும். சட்டத்தை மாற்ற முடியாது; அது அதன் போக்கிலேதானே போய்க்கொண்டேயிருக்கும். அதனால் நாமும் தன்னிச்சையாக **(automatic)** பாவம் செய்துகொண்டே இருந்தோம். தவறு செய்தவுடன் பிரம்பை எடுத்து விளாசித்தள்ளின அப்பா? ... அவர் கதையும் இதே கதை தான்! பாவம் யாரையும் விட்டு வைக்கவில்லை, பாவத்திலிருந்து விடுதலையாகமலேயே அதே பாவத்தை செய்கிற தன் மகனைக் கண்டிக்க வேண்டிய பரிதாப நிலைமை. தண்ணீரில் தத்தளிக்கிற நீச்சல் தெரியாத மனிதன்; அதே தண்ணீரில் மாட்டிக் கொண்ட நீச்சல் தெரியாத இன்னொரு மனிதனுக்கு உதவி செய்ய முயன்றால் ... ?

நாம் எப்படியெல்லாம் பாவம் செய்யாமலிருக்கலாம், பாவத்தை தவிர்த்திருக்கலாம்? என்று ஆண்டாண்டு காலமாக போதித்த பள்ளிக்கூட வாத்தியார்களும் பாவம் செய்து கொண்டு தான் இருந்தார்கள்! ஏனென்றால் அவர்களும் இந்த நியமத்திற்கு விதிவிலக்கல்ல. பாவம் செய்யாதே, உன் இரகசிய பாவங்கள் தேவனுக்குத் தெரியாது என்று நினைத்துக் கொண்டிருக்கிறாயா? இனி மேலும் இந்தப் பாவத்தை செய்தாயானால் நீ தொலைந்தாய்... என்று உருட்டி மிரட்டிக் கொண்டிருந்த நியாயப்பிரமாண சபை போதகர்களின் நிலைமையும் பரிதாபம் தான். பாவங்கள் பூனைபோல சத்தமில்லாமல் நடந்து வந்து, பின்வாசலின் இருட்டறைக் கதவை மெதுவாக தட்டிக்கொண்டு நின்றது!

1. கதவைத் திறந்துவிடு!
2. கதவைத் திறக்காதே!

இரண்டுக் கேள்விகளின் மோதலில் கேள்வி 1. ஜெயித்தது! (இன்னும் கிருபை பிரமாணத்திற்குள் வந்திராத ஒரு ஊழியக்காரர் தன்னுடைய அனுபவத்தைப் பிரசங்க நேரத்தில் சொன்னபோது; முடிவில் தான் பாவத்திற்குக் கதவைத் திறந்து விட்டதை விளக்கிய போது; ... அந்தக் காலகட்டத்தில் அது எனக்கு பெரிய அதிர்ச்சியாக இருந்தது. ஆனால் இப்போது இல்லை.) எல்லோரும் பாவம் மனுஷங்க தானே, பாவம் தெரியாமல் செய்துட்டார் என்று எல்லோரையும் போல ஒப்பாரிப் பாடல் பாட நாங்கள் வரவில்லை. இயேசு இல்லாமல், அவருடைய உதவி இல்லாமல் உங்களால் பாவம் செய்யாமல் இருக்கவே முடியாது என்பதையே சொல்ல வருகிறோம்.

*"... இயேசு கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கிற வாக்குத்தத்தம் விசுவாசமுள்ளவர்களுக்கு அளிக்கப்படும்படி வேதம் எல்லாரையும் ஏகமாய்ப் பாவத்தின் கீழ் அடைத்துப்போட்டது. கலா. 3:22"*

நியாயப்பிரமாண கிரியை முயற்சிகளிலிருந்து விடுபட்டு (புரியும்படி சொல்லப்போனால் **self-**

**control, will power -** யாருடைய உதவியும் இல்லாமல் தன்னிச்சையாக பாவம் செய்யாமலிருக்க முயற்சிப்பது) சிலுவையில் திருத்தியமைக்கப்பட்ட புதிய கிருபை பிரமாணத்திற்குள் பிரவேசித்த பிறகு பாவம் நம்மை ஆளுகை செய்யாது; அதற்குப் பிறகு பாவத்தால் நம்மை ஆளுகை செய்ய முடியாது. இனிமேல் பரிசுத்தம் நம்மை ஆளுகை செய்ய ஆரம்பிக்கும். அதாவது பாவமில்லாத பரிசுத்தமான தன்மைகள், காரியங்கள், பழக்க வழக்கங்கள் தானாகவே நம்மை ஆளுகை செய்ய ஆரம்பிக்கும். எங்கே பாவம் செஞ்சிடுவோமோன்னு பயப்பட வேண்டிய அவசியமிருக்காது. ஏனென்றால் நம்மில் முன்பு இயங்கிக்கொண்டிருந்த பாவ பிரமாணம் செயலிழந்து விட்டது, செத்தும் விட்டது! செத்தவனால் பாவம் செய்ய முடியாதே! அதுபோலவே கிறிஸ்துவுடன் கூட பாவத்திற்கு செத்த பிறகு நம்மால் பாவம் செய்ய முடிவதில்லை. இயேசு சிலுவையில் நியாயப்பிரமாணத்தின் உயிரை எடுத்து விட்டார்! இப்போது பரிசுத்தமாக்கும் பிரமாணம் அமலில் இருக்கிறது. இந்த இரகசியத்தைக் கண்டுபிடித்து விட்ட நாம் பாக்கியவான்களாயிருக்கிறோம். கண்டுபிடிக்காதவர்களும் சீக்கிரமாகவே கண்டுபிடித்து விடுவார்கள். ஏனென்றால் உயிரில்லாத பிரமாணத்துடன் மல்லுக்கட்ட அவர்களால் ரொம்ப நாளைக்கு முடியாது.

நிரந்தர இயக்க இயந்திரங்களை **(perpetual motion)** செய்ய முயன்றவர்களைப் பற்றி சிலருக்குத் தெரிந்திருக்கலாம். அப்படிப்பட்ட அமைப்புகள் சிலவற்றை பார்த்தும் இருக்கலாம். (பார்க்காதவர்கள் விதைகள் – பகுதி 2–ல் பாருங்கள்) முடிவில்லாமல் ஏதாவது ஒரு வேலையை செய்தபடி இயங்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் வடிவமைக்கப்பட்டன. நியூட்டனின் **Second law of thermo-dynamics** என்ற பௌதிக விதிப்படி இந்த முயற்சிகள் எல்லாமே தோல்வியில் முடிந்தன. இது சாத்தியமற்ற ஒன்று என்ற முடிவு ஆணித்தரமாக அறிவிக்கப்பட்டு, இப்படிப்பட்ட முயற்சிகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டு விட்டன. ஆரம்பத்தில் தேவன் பூமியை உருவாக்கி, அதில் ஏதேனை உண்டாக்கின ஆதி. 1, 2, அதிகாரங்களின் காலகட்டத்தில் இந்த முயற்சிகள் நடந்திருந்தால் சாத்தியமாகி இருந்திருக்கும். அப்போது பூமியின் மீது ஆற்றல் அழியாமல் இருந்தது. பூமியில் பரலோக விதியான ஆசீர்வாத விதி இயங்கிக்கொண்டிருந்ததால் மனிதனின் ஆற்றலுக்கு எல்லையே இல்லாமல் இருந்தது. அவன் தேவனைப் போலிருந்தது தான் அதற்கான முக்கிய காரணம். இதைப் பற்றியெல்லாம் நாம் நிறையவே பார்த்துவிட்டோம்.

ஆனால் பூமியில் முதலில் இருந்த ஆற்றல் (சக்தி) வேறொன்றாக மனிதனால் மாற்றப்பட்டபோது (மனிதன் இயற்கையோடு எதிர்த்து, அதைத் தாக்கி, நாசப்படுத்தி, அதனால் கிடைக்கும் பலனில் வாழ ஆரம்பித்தபோது) அதில் ஒரு பகுதி அழிக்கப்பட்டுப் போனது. இதைத்தான் **2nd Law of thermo dynamics** விவரிக்கிறது. நூற்றுக்கணக்கில் இப்படிப்பட்ட இயந்திரங்கள் செய்யப்பட்டன, ஆனால் ஒன்றாவது இயங்கவில்லை. இதைச் செய்த ஒவ்வொருவரும் இந்த அமைப்பை இயங்கச் செய்யக்கூடிய முக்கியமான ஒன்றை தவறவிட்டிருந்தனர் **(miss - fail to be somewhere)**. இன்னமும் நியாயப்பிரமாணத்தின் படி வாழ்ந்து, சுயமாக கிரியைகளை நடப்பித்து, நல்ல காரியங்களை செய்து, தன்னை நீதிமானாக தேவனுக்கு முன்பாகக் காட்ட முயற்சிப்பவர்கள் எல்லாம் மூக்குடைந்து போய்க்கொண்டிருக்கிறார்கள். ஆம், அவர்கள் இயேசுவையே தவறவிட்டு விட்டார்கள்!

முன்பு சொன்ன ஒரு உதாரணத்தையே இப்போதும் கொண்டு வருகிறேன்; ஆனால் அதன் **point of view** வேறு, கவனியுங்கள். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் ஒரு ஹோட்டல் விளம்பரத்திற்காக ஒரு நிரந்தர இயக்க சக்கரம் அமைக்கப்பட்டிருந்தது. உண்மையில் அது ஒரு போலியாகும்; மறைவாக வைக்கப்பட்டிருந்த ஒரு மின்சார மோட்டாரினால் அது சுழற்றப்பட்டு வந்தது.

ஹோட்டலுக்கு தங்கள் ஆசிரியருடன் வந்திருந்த சில மாணவர்களை இந்த அமைப்பு மிகவும் கவர்ந்தது. குண்டுகள் உருண்டு உருண்டு சக்கரத்தை சுழற்றியதைப் பார்த்தபோது; அது மிகவும் தத்ரூபமாக இருந்தது. மாணவர்கள் அதை நிஜம் என்றே நம்பி விட்டனர். ஆசிரியர் **Law of thermodynamics -** ன் அடிப்படையில் விளக்கம் கொடுத்து, அது சாத்தியமற்றது என்று எவ்வளவோ எடுத்து விளக்கியும் அவர்கள் நம்பவில்லை. அது மின்சார மோட்டாரினால் இயக்கப்படுகிறது என்று சொல்லியும் அவர்கள் நம்பவில்லை.




ஞாயிற்றுக் கிழமைகளில் அப்பகுதியில் கரண்ட் கட் ஆகும் என்று அறிந்து கொண்ட ஆசிரியர்; ஒரு ஞாயிற்றுக்கிழமையன்று அந்த ஹோட்டலுக்குப் போய் பார்க்கும்படி மாணவர்களை அனுப்பினார். அவர்கள் போய் பார்த்தபோது இயந்திரம் நிறுத்தப்பட்டு, மூடப்பட்டிருந்தது. வெட்கத்துடன் அவர்கள் திரும்ப நேர்ந்தது, என்றாலும் உண்மை என்னவென்பதை அறிந்து கொண்டதில் ஒரு பரிபூரணமான திருப்தி உண்டாயிருந்தது. அதற்குப் பிறகு அவர்களை யாராலும் ஏமாற்ற முடியவில்லை.

இக்காலத்தில் சுயமாக முயற்சி செய்து பாவத்தில் இருந்து தங்களை முடிந்தவரை காப்பாற்றிக் கொள்ளும் நியாயப்பிரமாண முறைமையில் தான் விசுவாசிகளுக்கு அதிக நம்பிக்கை இருக்கிறது. காரணம் சபையில் அப்படித்தான் போதிக்கப்படுகிறது; தங்களுக்குப் போதிக்கப்படுவதை அவர்கள் முயற்சிக்கிறார்கள். நியாயப்பிரமாண 10 கட்டளைகளையும் முயற்சிக்கிறார்கள். 9 கட்டளையை ஓரளவுக்கு, சிலர் முழுவதுமாக நிறைவேற்றி விடுகிறார்கள். ஆனால் இச்சியாதே என்ற பாவத்தை மட்டும் செய்யாமல் யாராலும் தப்பித்துக்கொள்ள முடிவதில்லை. ஏனென்றால் இது வெளியரங்கமான பாவம் அல்ல, இரகசியமாக மனதில் செய்யப்படும் பாவம். சிந்தனை சார்ந்த இந்தப் பாவம் வெளியே தெரியாததினால் இவர்களைப் பார்ப்பவர்கள் மிக எளிதாக ஏமாந்து விடுகிறார்கள். இவர்களும் மற்றவர்களை சுலபமாக ஏமாற்றியபடி வாழ்ந்து வருகிறார்கள்.

அது பாவமல்ல, அது இயல்பானது, இயற்கையானது என்று தங்களையே சமாளித்துக் கொண்டு வாழ்கிறார்கள். ஆனால் வேதம் மனதளவில் செய்யப்படும் இந்த பாவத்தையும் கணக்கில் சேர்க்கிறது, அதனால் தப்பிக்க முடியாது. *“... இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிருப்பேனே. ரோமர். 7:7”* அது மட்டுமல்ல, இந்த ஒரு தவறை செய்தாலே மற்ற ஒன்பது கட்டளையை நிறைவேற்றியிருந்தாலும் அது செல்லாததாகிவிடுகிறது. அதாவது ஒரு பாடத்தில் பெயிலானாலும் எல்லா பாடத்திலும் பெயில் தான் என்ற நிலைமை! *“... ஒருவன் நியாயப்பிரமாணம் முழுவதையும் கைக்கொண்டிருந்தும், ஒன்றிலே தவறினால் எல்லாவற்றிலும் குற்றவாளியாயிருப்பான். யாக். 2:10* மிக மிக பரிதபிக்கப்பட வேண்டிய நிலைமை இது.”

இக்காலங்களில் சபைகளில் வாலிபர்களுக்காக பல ஜெபக்கூடுகைகள், ஆலோசனைக் கூட்டங்கள் நடத்தப்படுகின்றன, அந்தரங்க ஆலோசனைகள் **(counseling - help with personal and psychological problems)** கொடுக்கப்படுகின்றன. முதலில் வாலிபர்களின் பலவீனங்கள், வெளியரங்க பாவங்கள், அந்தரங்க பாவங்கள் இதில் பட்டியலிடப்படுகின்றன. இவைகளெல்லாம் கண்களின் இச்சை என்ற பாவத்தின் கர்ப்பப்பிறப்புகள்தான். பிறகு அந்த பாவங்களை விட்டு விலக வேண்டும் என்று கண்டிக்கப்படுகிறார்கள். அப்படிப்பட்ட பாவங்களிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்ள சில வழிகளையும் சொல்லிக் கொடுக்கிறார்கள் தான். என்றாலும் அவைகள் சுயமான கிரியை முயற்சிகளாகத்தான் இருக்கிறது.

தன்னம்பிக்கை **(Self-confidence)**, தன்னடக்கம் **(Self-control)**, தன்னைத்தானே காத்துக் கொள்ளுதல் **(Self-defence)**, தன்னையே திருத்திக் கொள்ளுதல் **(Self-discipline)**, போன்ற முறைகள்தான் இங்கே போதிக்கப்படுகின்றன. நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இப்படிப்பட்ட போதனைகள் கொடுக்கப்படுகின்றன. ஆனால் உண்மையில் இவர்களுக்கு கொடுக்கப்படுவது வெறும் **scan report, x-ray report**-கள் தான். நோயாளியை பரிசோதிக்கிறார் ஒரு மருத்துவர். பரிசோதனைகள் முடிந்ததும் அந்த வியாதியைப் பற்றிய ஒரு அறிக்கையை கையில் கொடுக்கிறார். அதில் அந்த வியாதியின் பெயர், வியாதி வருவதற்கான காரணம், கிருமியின் பெயர், வியாதி வந்து எந்தனை நாளாயிற்று, எந்த நிலைமையில் இருக்கிறது என்பதெல்லாம் இருக்கிறது. நோயாளியும் அதை வாங்கிக்கொண்டு வந்த வழியே திரும்பப் போய்விடுகிறார்!

இப்படிப்பட்ட விசித்திரமான டாக்டரையும், பேஷண்டையும் எங்கேயாவது பார்த்திருக்கிறீர்களா?

புரிந்திருக்கும் இப்போது! சபையில் இப்படிப்பட்ட காரியங்கள் தான் நடக்கின்றன. வியாதிக்கான மருந்தைக் கொடுக்காவிட்டால், மருத்துவம் பார்க்காவிட்டால் நிச்சயமாக வியாதி குணமாகப்போவதில்லை. பத்துகட்டளைகளின் அடிப்படையிலான – பாவத்தைக் கண்டித்து உணர்த்தும் பிரசங்கங்களினால் வாலிபர்கள் குற்ற உணர்வுகளுக்குள்ளாகிறார்கள், தங்களின் இரகசிய பாவத்தை உணர்ந்து வெட்கப்படுகிறார்கள், வேதனைப் படுகிறார்கள், கண்ணீர் விட்டு கதறி தேவனிடம் மன்னிப்புக்காக மன்றாடுகிறார்கள். கொஞ்சம் சமாதானம் கிடைக்கிறது. வெளியே போய் அந்த பாவங்களிலிருந்து விடுபட வேண்டும் என்று முடிவெடுக்கிறார்கள், சில முயற்சிகளையும் எடுக்கிறார்கள். பலருக்கு அது முடியாமல் போகிறது, குறிப்பிட்ட காலக்கட்டத்திற்குள் மீண்டும் அதே பாவ வட்டத்திற்குள் வந்துவிடுகிறார்கள். சிலருக்கு முடிகிறது, என்றாலும் அந்த பாவத்தின் நினைவுகள் சிந்தனைப் பகுதிக்குள் வட்டமடித்தபடியே இருக்கிறது. சிந்தனையில் தானே? அதனால் என்ன? அது வெளியே தெரியவா போகிறது? என்று சமாளிக்க முடியாது.

*"... மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் ... 1 சாமு. 16:7"*

*"... உள்ளந்திரியங்களையும் இருதயத்தையும் பார்க்கிற சேனைகளின் கர்த்தாவே, ... எரே. 20:12."* மனதில் செய்யும் பாவத்தையும் தேவன் பார்க்கிறார். நாம் தேவனுக்குத்தான் கணக்கு ஒப்புவிக்க வேண்டும். மனிதர்கள் முன்பாக நாடகமாடுவதினால் நம் தலைமேல் அவர்கள் கிரீடம் வைக்கப் போவதில்லை. நாடகத்தால் பாவத்தை கொஞ்ச காலத்துக்கு மறைக்கலாம், ஆனால் அழிக்க முடியாது. அது மட்டுமல்ல, வெளியே தெரியாத இச்சை என்கிற இந்த பாவம் தான் மற்ற பாவங்களைவிட பெரிய பாவமாக கணக்கில் வருகிறது.

இது முகத்தை சுளிக்க வைக்கும் பாவம்! *"... சீயென்றிகழப்படத்தக்கதும் அருவருக்கப்படத்தக்கதுமான தங்கள் இருதயத்தின் இச்சையிலே ... எசே. 11:21"*

இந்த பாவம் தன்னோடு செய்யாத இன்னொரு பாவத்தையும் மூட்டைகட்டி இழுத்துக் கொண்டு வருகிறது! *"... ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் தன் இருதயத்தில் அவளோடே விபசாரஞ் செய்தாயிற்று. மத். 5:28"*

தேவனுடைய வார்த்தைகளை இருதயத்தில் பதியன் போட முடியாதபடி செய்து விடுகிறது. *"வசனத்தைக் கேட்டும், ... இச்சைகளும் உட்பிரவேசித்து, வசனத்தை நெருக்கிப்போட, அதினாலே பலனற்றுப் போகிறார்கள். மாற். 4:18."*

இந்த இச்சை சாத்தானிடமிருந்து வருகிறது. *"... உங்கள் பிதாவினுடைய (சாத்தானுடைய) இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; ... யோவா. 8:44"*

மனிதன் தங்கியிருக்கிற கூடாரமாகிய சரீரம் மிகவும் மட்டரகமான ரீதியில் தாக்கப்பட்டு பாதிக்கப்படுகிறது, நோயினால் பாதிக்கப்பட்டு மனிதன் தங்கியிருக்க முடியாதபடி அழிந்தும் போகிறது. இயற்கைக்கு புறம்பான, எதிர்மறை ரீதியிலான பாலியல் பழக்க வழக்கங்களில் சிக்கிக் கொள்ளும்படி செய்கிறது. மரண கனிகளை பழுக்க வைக்கிறது (ஆவியின் கனிகளுக்கு எதிரிடையான சகல பாவங்களும்). சோதனைகளுக்குள்ளாக **(Temptation - disire for something bad –** தவறான ஆசைகள்) இழுத்துக் கொண்டுப் போகிறது.

ஜெபத்திற்கு தேவனால் பதில் கொடுக்க முடியாமல் போகிறது. காரணம் இருதயத்திற்குள் இருக்கும் இச்சை மனிதனை தவறான நோக்கத்தில் ஜெபிக்கத் தூண்டுகிறது. அவனுடைய விண்ணப்பங்கள் தேவனுடைய சித்தத்திற்கு எதிரிடையானதாக இருக்கிறது, மட்டுமல்லாமல் அவைகள் சாத்தானுக்கு அனுகூலமாகவும் இருக்கிறது. அதனால் இச்சை நிறைந்த இருதயத்திலிருந்து எழும்புகிற ஜெபத்தை பரலோகம் ஜெபமாகவே அங்கீகரிப்பதில்லை. அதனால் அதற்குரிய பதில் **monitor-** ல் **display** ஆவதில்லை, **download** செய்யவும் முடிவதில்லை. **Print out**-ல் வெற்றுப் பேப்பர் வருகிறது!

*"நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி*

*செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள். யாக். 4:3"*

இச்சை என்ற மனதின் இரகசிய பாவத்தில் இருந்து மனிதனை விடுதலையாக்க நியாயப்பிரமாணத்தினால் முடியவில்லை. அதனால் இந்த இரகசிய பாவத்திலிருந்து விடுதலையாக்க வேறு ஒரு பிரமாணத்தைத் தேவன் இயேசுவின் மூலமாக ஏற்படுத்தினார். சிலுவையில் இந்த புதிய பிரமாணத்தை பிரகடனப்படுத்தினார். அதற்கு முன்னதாக பழைய பிரமாணத்துக்கு முடிவு கட்டினார். இயேசு சிலுவையில் செயலிழக்க வைத்த பிரமாணத்தை பிரயோஜனப்படுத்தி நீங்கள் எதை செய்ய முயற்சித்தாலும் அது வெற்றியடையாது. "... எழுதினவைகளையே எழுதுவது எனக்கு வருத்தமல்ல, அது உங்களுக்கு நலமாயிருக்கும். பிலி. 3:1"

மனிதனால் நிறைவேற்ற முடியாமல் போன மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு மாற்றாக தேவன் இயேசுவின் மூலமாக புதிய விசுவாசப் பிரமாணத்தை சிலுவையில் ஏற்படுத்தினார் என்று பார்த்தோம். இந்த விசுவாசத்தைக் குறித்து நாம் அதிகம் அறிந்து கொள்ள வேண்டியது மிக அவசியமாயிருக்கிறது. ஏனென்றால் புதிய பிரமாணத்தின் சாராம்சமே (essence) விசுவாசம் தான். இது இல்லாவிட்டால் புதிய பிரமாணமே இயங்காது. புதிய பிரமாணம் இயங்காவிட்டால் என்ன ஆகும்? புவி ஈர்ப்பு விசை என்கிற பிரமாணம் இயங்காவிட்டால் பூமியின் மேல் இருக்கும் காரியங்களுக்கு என்ன நடக்கும்? ஒரு நிமிடம் யோசனை பண்ணுவோம். புவி ஈர்ப்பு விசை என்பது இயற்கையின் ஒரு சட்டம். இந்த சட்டத்தின் அடிப்படையில் தான் பூமி மீது காணப்படுகிற சகல காரியங்களும் (மனிதர்கள், ஜீவராசிகள், தாவரவினங்கள், கடல், மலை, இன்னும் காணப்படுகிற சகல வஸ்துக்களும் ... ) பூமியின் மீது தொடர்பு கொண்டு, ஒட்டியபடி இருக்கிறது. இந்த புவியீர்ப்பு சட்டம் (பிரமாணம்) செயல்படாவிட்டால் ... எல்லாமே பூமியை விட்டு தூக்கி எறியப்பட்டு, முழு உலகமும் தூசி மண்டலமாக (collapse) மாறிவிடும்.

## பிழைக்க கற்றுக் கொள்ளுங்கள்:

விசுவாசம் தான் புதிய சிலுவை பிரமாணத்தின் உயிர் மூச்சு! இந்த விசுவாசத்தை பற்றி நிறைய பார்த்திருக்கிறோம், இன்னும் கொஞ்சம் பார்ப்போம். கண்களால் காணக்கூடியதை நம்புவதற்கு விசுவாசம் தேவையில்லை. *... காணப்படுகிறதை நம்புகிறது நம்பிக்கையல்ல; ஒருவன் தான் காண்கிறதை நம்பவேண்டுவதென்ன? ரோமர். 8:24.* விசுவாசம் என்பது ஆவிக்குரிய காரியம், கண்களால் காண முடியாதவற்றை நம்புவதற்காகவே அது நமக்கு அளிக்கப்பட்டிருக்கிறது. நாம் விசுவாசித்து தான் பிழைக்க வேண்டும்; இதைத் தவிர வேறு வழியில்லை, தேவன் இப்படித்தான் மனிதனின் வாழ்க்கையை நிர்மாணித்திருக்கிறார். வேறு வழியோ, குறுக்கு வழியோ கிடையாது. விசுவாசிக்க முடியாவிட்டால் பிழைப்பே இல்லை, பிழைப்பு கெட்டுப் போகும்!

விசுவாசிக்க திராணியில்லாமல் பிழைப்பைக் கெடுத்துக் கொண்ட தேவ பிள்ளைகள் கோடானுகோடி! அவர்களுக்கு வாழ்வு கொடுக்கவே இந்த விசுவாச போதனைகள் வந்து கொண்டிருக்கின்றன. இந்த விசுவாசத்திற்கும் நாக்கிற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. எப்படியென்றால் நம்முடைய விசுவாசத்தை வார்த்தைகளின் மூலமாகத்தான் வெளிப்படுத்தியாக வேண்டும். வார்த்தையாக மாறாத விசுவாசத்தால் எந்த விதமான பிரயோஜனமும் இல்லை. நம் சிந்தனை பகுதியில் என்ன இருக்கிறதோ; அதை நம் வாய் பேசிவிடும். இந்த ரீதியில்தான் தேவன் நம்மை உருவாக்கியிருக்கிறார். விசுவாசம் நம் இருதயத்தில் (சிந்தனைகள் தோன்றும் மனம்) தோன்றுகிறது; அதை நம் வாய் பேசுகிறது.

*நல்ல மனுஷன் தன் இருதயமாகிய நல்ல பொக்கிஷத்திலிருந்து நல்லதை எடுத்துக் காட்டுகிறான்; பொல்லாத மனுஷன் தன் இருதயமாகிய பொல்லாத பொக்கிஷத்திலிருந்து பொல்லாததை எடுத்துக் காட்டுகிறான்; இருதயத்தின் நிறைவினால் அவனவன் வாய் பேசும். லூக். 6:45.* வீட்டின் மேல் இருக்கும் தண்ணீர் தொட்டியில் (overhead tank) தண்ணீர் நிரம்பியவுடன் அது வழிந்து கொட்ட ஆரம்பித்து விடும். இருதயத்தில் இருப்பதை வாய் வெளியேற்றியே தீரும். இருதயம் விசுவாசத்தால் நிறைந்திருக்கும் போது; நாம் விசுவாசிக்கும் காரியங்கள் வார்த்தைகளாக வாயின் வழியாக

வெளியேறுகிறது. இந்தக் காரியம் நிகழ்ந்தேறுவதில் நாக்குக்கு மிக முக்கிய பங்கு இருக்கிறது. நாம் பேசிய காரியங்கள் நம் வாழ்க்கையில் நடக்க ஆரம்பிக்கிறது.

நல்லதை பேசினால் நல்லது நடக்கும், கெட்டதைப் பேசினால் கெட்டது நடக்கும். *மரணமும் ஜீவனும் நாவின் அதிகாரத்திலிருக்கும்; ... நீதி. 18:21* **(Death and life are in the power of the tongue; ...)** நம் பேச்சுதான் நம் வாழ்க்கையை தீர்மானிக்கிறது. நம்முடைய வார்த்தைகளின்படி நம் வாழ்க்கை அமைகிறது. நாம் பேசும் வார்த்தைகளைப் பொறுத்து நம் வாழ்க்கை ஆசீர்வாதமாகவோ, சாபமாகவோ அமைகிறது. ஆசீர்வாதமான வாழ்க்கை ஜீவனையும், சாபமான வாழ்க்கை மரணத்தையும் கொண்டு வருகிறது. தீக்குச்சி இல்லாமலேயே நெருப்பை பற்ற வைக்கும் ஆற்றல் மிகுந்தது நாக்கு! ஒரே ஒரு வார்த்தை ... தெரியாமல் வாய் உளறி சொல்லித் தொலைத்துவிட்டேன்; அது இவ்வளவு பெரிய பிரச்சனையாயிடுச்சே! என்பதான அங்கலாய்ப்புகளை அடிக்கடி கேட்டிருப்போம். விஷயமே அதுதாங்க! காட்டுவழியாகப் போய்க்கொண்டிருந்த ஒருவன் சிகரெட்டை பற்ற வைத்துவிட்டு, தீக்குச்சியை அணைக்காமல் போட்டுவிட்டான். அடுத்த நாள் செய்தித்தாளில் வந்தது செய்தி: களக்காடு மலைப்பகுதியில் காட்டுத்தீ! மூன்று நாட்களாக தீயணைப்பு படையினர் நெருப்பை அணைத்தும் முடியாமல் தீ வேகமாக பரவிக் கொண்டிருக்கிறது. இதனால் நூற்றுக்கணக்கில் காட்டு விலங்களும், பறவைகளும், அரியவகை தாவரங்களும் நெருப்பில் கருகிப் போயின. மலையோரத்தில் வசிக்கும் கிராம மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்! என்று வந்தது. தீயை அணைக்கும் ரசாயனக் கலவைத் தண்ணீரை ஹெலிகாப்ஃடர் மூலமாக பீய்ச்சியடிப்பதை தொலைக்காட்சி செய்தியில் பார்க்க முடிந்தது. இது தொடர்பான செய்தி ஏறக்குறைய ஒரு மாதம் வரை செய்தித்தாளில் வந்தது. அந்த பகுதி மக்கள் ஒரு வருடமாகியும் இந்த பேச்சை விட்டபாடில்லை.

ஒரே ஒரு தீக்குச்சிதான்! பெரிய விஷயம் இல்லைதான், ஆனாலும் என்ன செய்வது, நெருப்பின் தன்மையே அதுதான், அது தன் நியமத்தின்படி இயங்குகிறது. *"நாவும் நெருப்புத்தான், அது அநீதி நிறைந்த உலகம்; நம்முடைய அவயவங்களில் நாவானது முழுச்சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தை கொளுத்திவிடுகிறதாயும், நரக அக்கினியினால் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது! யாக். 3:6"* அதனால் பேசும்போது மிக ஜாக்கிரதையாக இருக்க வேண்டியதாயிருக்கிறது. வாயில் வருகிறதையெல்லாம் பேசுவது பழக்கமாகிவிட்டது, காரணம் அப்படித்தான் நம்மை பழக்கியிருக்கிறார்கள். நாம் பேசுகிறவைகள் தான் இந்த பூமியில் நடக்கிறது என்று சொன்னால் அது கிண்டலாகத் தெரிகிறது, பலர் கேலியாகக் கூடப் பார்க்கிறார்கள். மனிதனுடைய மனக்கண்கள் (உள்ளான மனிதனின் ஆவிக்குரிய கண்கள்) குருடாக்கப்பட்டதால் தெரியாமல் போன ஆயிரக்கணக்கான வேத சத்தியங்களில் இதுவும் ஒன்று.

வார்த்தைகள் விதையைப் போல் செயல்படுகிறது. ஒரு அவரை விதையை எடுத்து நிலத்தில் ஊன்றினேன். சில மாதங்களில் ஒரு முட்களால் நிறைந்த காட்டுச்செடி ஓங்கி வளர்ந்து தோட்டத்தையே அடைத்தபடி நின்றது! பிறகுதான் தெரிந்தது நான் விதைத்தது அவரை விதையல்ல, ஒரு காட்டு முள்செடியின் விதை என்று! நான் தெரியாமல்தான் விதைத்தேன், தெரிந்தே வேண்டுமென்று முட்செடியை விதைக்கவில்லை. என்றாலும் அது முளைத்துவிட்டதே எப்படி? பூமியின் மீது இருக்கும் சகல காரியங்களும் அதனதன் நியமத்தின்படி இயங்குகின்றன, அதை மாற்ற முடியாது. புவியீர்ப்பு சக்தியும் அதில் ஒன்று. தேவன் பூமியையும் அதன் நிறைவையும் உருவாக்கி; ஒரு நியமத்தின் அடிப்படையில் அவற்றை இயங்கும்படி விட்டுவிட்டார். அந்த நியமம் பூமி மனிதனின் ஆளுகைக்குள் இருக்கும் வரைக்கும் பிரச்சனையில்லாமல் சரியானபடி வேலை செய்தது. பூமி மனிதனிடமிருந்து சாத்தானுக்கு கைமாறிய பிறகு எதிர்மறையாக வேலை செய்ய ஆரம்பித்தது. பிறகு அதையும் அப்படியே விட்டுவிட வேண்டியதாகிவிட்டது.

நாம் பேசியதுதான் நடக்கும் என்ற நியமத்தின் அடிப்படையில் நம் வார்த்தைகளும் வேலை செய்வதால்; கண்டிப்பாக நம் வார்த்தைகளை ஜாக்கிரதையாகப் பேச வேண்டிய கட்டாயத்திலிருக்கிறோம். இல்லாவிட்டால் அது நம் வாழ்க்கையையே சூறையாடிவிடும். அதெப்படி நாம் சொன்னபடியெல்லாம் எப்படி நடக்கும் என்று விதண்டாவாதம் செய்பவர்களுக்கு: அது அப்படித்தாங்க, சொன்னது தான் நடக்கும். ஒரு நிமிஷம் நின்று பின்னால் திரும்பி உங்கள் கடந்த

கால வாழ்க்கையை பாருங்கள். அவற்றின் அடிச்சுவடுகளை சேகரியுங்கள்... நீங்கள் பேசியதுதான் உங்கள் வாழ்க்கையில் இதுவரை நடந்திருக்கிறதென்பது தானாகவே புரிந்து விடும். உங்கள் நல்ல நேரம், சில காரியங்களை நல்லதாகப் பேசினீர்கள், நல்லது நடந்தது. எக்குத்தப்பாக பலவேளைகளில் மோசமானதைப் பேசினீர்கள், அதுவும் நடந்திருக்கிறது! கெட்ட வார்த்தைகளெல்லாம் நல்ல வார்த்தைகளை மேற்கொண்டு, அவற்றை அழித்துப் போட்டது! (ஒரு கேள்விக்குத் தவறாக பதில் எழுதினால்; ஏற்கெனவே சரியாக எழுதப்பட்ட பதிலுக்கான மதிப்பெண் கழிக்கப்படுவதைப் போல!). சிறு வயதில் நான் விளையாடிய பாம்புக்கட்டம் என்ற விளையாட்டு ஞாபகத்திற்கு வருகிறது.

1 முதல் 100 வரையிலான எண்கள் அடங்கிய கட்டங்கள் பத்து வரிசையில் இருக்கும். அவற்றின் மேல் சில பாம்புகள் ஊர்வதைப் போல் படம் வரையப்பட்டிருக்கும், சில ஏணிகளும் வரையப்பட்டிருக்கும். தாயம் குலுக்கிப் போடப்படும்போது விழும் எண்களுக்கு ஈடாக நம்முடைய அடையாள குறியீடு கட்டங்களின் மேல் நகர்ந்து கொண்டே இருக்கும். ஏணி இருக்கும் கட்டத்திற்குள் குறியீடு நின்றால் மேலே ஏறிவிடலாம். பாம்பின் வாய்ப்பகுதியில் குறியீடு நின்று விட்டால் கீழே இறங்க வேண்டியது தான். இப்படியாக முன்னேற்றம் பாம்பினால் தடை செய்யப்படுகிறது. இதையும் தாண்டி 100 வது கட்டத்தை அடைபவர்களும் உண்டு. நாம் வாழ்க்கையில் முன்னேறுவதோ அல்லது வந்த வழியிலேயே திரும்பப் போவதோ **(backslide)** நம் வாயில் தான் இருக்கிறது. வாழ்க்கை என்ற கணக்கைச் சரியாகப் போட்டு சரியான விடையை கொண்டு வருவதற்கான **formula**-வை நம் வாயில் வைத்து படைத்து விட்டார் தேவன். தேவன் நியமித்த இந்த நியமத்தின்படிதான் வாழ்ந்தாக வேண்டும், வேறு வழியில்லை. இந்த முறை கஷ்டமாக இருக்கிறது என்று நீங்கள் வேறு சூத்திரத்தை எழுதினால்; கணக்கு சரியாக வராது.

பிரச்சனை எதுவானாலும் சரி; அதைத் தாக்கி அழிக்கும் சக்தி நமக்கு உண்டு. அதெப்படி தேவனால்தான் அது முடியும், நாம் சாதாரண மனிதர்கள் தானே என்று நினைத்துக்கொண்டு பிரச்சனைகளோடேயே மல்லுக்கட்டிக் கொண்டிருப்பவர்களைத்தான் உலகமுழுவதும் பார்க்க முடிகிறது. நாம் சாதாரண மனிதர்களே அல்ல, அசாதாரணமானவர்கள்! தேவன் நம்மை அப்படித்தான் உருவாக்கினார். **நாம் பேசுகிறது எதுவோ அதுதான் நம் வாழ்க்கையில் நடக்கிறது என்றால்; நாம் எப்படி சாதாரணமானவர்களாக இருக்க முடியும்? நம் வாழ்க்கையை தீர்மானிக்கும், உருவாக்கும் சக்தி நம் வார்த்தையிலேயே இருப்பதை வைத்தே நாம் அசாதாரணமானவர்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடியும்!** ஆதாமின் மீறுதலால் மகிமையிழந்த மனுக்குலம் சாதாரணமானவர்களாக ஆக்கப்பட்டதென்னவோ உண்மைதான். ஆனால் இயேசு சிலுவையில் இழந்துபோன மகிமையை மீட்டுக்கொடுத்து; மீண்டுமாக நம்மை அசாதாரணமானவர்களாக்கியிருக்கிறார்!

நம்முடைய வார்த்தைகளின் மூலமாக பிரச்சனைகளைத் தாக்கி அழிக்கும் சக்தி நம்மிலிருந்து கடந்து வருகிறது. பிரச்சனை கண்களால் காணக்கூடியதாக இருக்கிறது. அதை அழிக்கும் ஆற்றல் பெற்ற வார்த்தையோ கண்களால் காணக்கூடாத ரீதியில் இருக்கிறது. கண்களால் காணக்கூடியவைகளை விட கண்களால் பார்க்க முடியாதவைகள் தான் அதிகம் சக்தி வாய்ந்தவை என்பதை முன்னதாகவே பார்த்துவிட்டோம். காணப்படுகிற வியாதியை, காணப்படாத வார்த்தைகளால் தாக்கி அழிக்கலாம். அதாவது இயேசுவின் தழும்புகளால் குணமானேன், அவரே என் பரிகாரியான கர்த்தர், வியாதியை என்னிலிருந்து விலக்குகிறவர், என் வியாதிப்படுக்கையை மாற்றினவர், என் பிராணனை அழிவுக்கு விலக்கியவர், நான் சாகாமல் பிழைக்கும்படி செய்தவர் ... இப்படி கண்களால் காணமுடியாத வார்த்தைகளைப் பேசிப் பேசியே வியாதியை அடித்து நொறுக்க வேண்டும்.

## *வாயுள்ள பிள்ளை பிழைக்கும்!:*

வாயிருந்தால் மட்டும் பிழைத்துக் கொள்ளலாம் என்று அர்த்தம் அல்ல, அந்த வாயினால் பேசத் தெரிய வேண்டும். கண்டதையும் அல்ல, நல்லவற்றை பேச வேண்டும். நல்லவை என்றால் தேவனுடைய மனவிருப்பத்தை அதாவது தேவனுடைய சித்தத்தைப் பேச வேண்டும். தேவனுடைய சித்தம் என்னவென்பதை வேத வசனங்களை வாசித்து, ஆராய்ந்து கண்டுபிடித்து எடுக்க வேண்டும். அவற்றை பேசும்போது நாம் பேசும் வார்த்தைகள் நம் இருதயத்தில் ஒரு படத்தை உருவாக்குகிறது.

உதாரணமாக வெள்ளைப் பூனை என்று சொல்லும் போது; அந்த வார்த்தை உடனடியாக நம் உள்ளத்தில் ஒரு வெள்ளைப் பூனையின் படத்தை உருவாக்குகிறது. அந்த வார்த்தையில் வரும் எழுத்துக்கள் நம் உள்ளத்தில் தோன்றுவதில்லை, அதாவது வெ – ள் – ளை – ப் – பூ – னை என்று எழுத்துக்கள் நம் மனதில் பதிவாவதில்லை, அதற்குப் பதிலாக ஒரு வெள்ளைப் பூனையின் உருவத்தை மனது பதிவு செய்கிறது!

நாம் பேசுகின்ற எல்லா வார்த்தைகளுமே இப்படி படங்களாக மாறி நம் உள்ளத்தை நிரப்பிக் கொண்டே இருக்கிறது; இதை எல்லோருமே அனுபவப் பூர்வமாக உணர்ந்திருப்போம். உள்ளத்தின் நிறைவினால் வாய் பேசும் என்ற வசனத்தின்படி மனதின் படத்தை வார்த்தையாக்கி பேச ஆரம்பிக்கிறோம். பேச பேச நாளடைவில் நம் வார்த்தைகள் உள்ளத்தில் பதிவு செய்த படத்தை நிஜமானதாக உருவாக்க ஆரம்பிக்கிறது. இதை வாசித்துக்கொண்டிருக்கிற நீங்கள் அது யாராக இருந்தாலும் சரி; தற்போதைய உங்களுடைய வாழ்க்கை, சூழ்நிலை, நிகழ்வுகள் எல்லாமே முன்பே நீங்கள் பேசிப்பேசி படங்களாக மாற்றிய விஷயங்கள்தான்! நிச்சயமாக இதை மறுக்க முடியாது; அப்படியே மறுக்க முயற்சி செய்தாலும் உங்கள் மனசாட்சி (அதுதான் நம்முடைய ஆவி – அதாவது **inner man**) உங்களை பார்க்கும் பார்வையிலிருந்து, அது சிரிக்கும் கிண்டல் சிரிப்பிலிருந்து உங்களால் தப்பிக்க முடியாது!)

உங்களுடைய பிரச்சனைகளுக்கு, தோல்விகளுக்கு காரணம் இதுவரை நீங்கள் குற்றம் சாட்டிக்கொண்டிருந்த யார் யாரோ அல்ல, நீங்களே தான்! உங்களுடைய சந்தோஷத்திற்கு, வெற்றிக்குக் காரணம், நீங்கள் தலையின்மேல் தூக்கி வைத்து, பாராட்டி, ஐஸ் ஒத்தடம் வைத்து, கூஜாவைத் தூக்கிக்கொண்டு பின்னாலேயே போய்கொண்டிருக்கிற யார் யாரோ அல்ல, அதுவும் நீங்களே தான்! ஏன் இப்படி நடக்கிறது? இது எப்படி சாத்தியமாகிறது? நாம் தேவனைப் போலவே படைக்கப்பட்டிருக்கிறோம்; வேதம் நம்மை தேவர்கள் என்றே அழைக்கிறது! மட்டுமல்ல தேவன் அவரைப்போலவே படைப்பாற்றலையும் நமக்குள் வைத்தே நம்மை உருவமைத்தார். அதனால் தான் நாம் விரும்பிய வாழ்க்கையை நாமே உருவாக்கிக்கொள்ள நம்மால் முடிகிறது.

தேவனை அறியாத உலக மனிதர்கள் ஒரு முக்கியமான விஷயத்தை தெரிந்து வைத்திருக்கிறார்கள். *"நீ உன் மனதில் எதை நினைக்கிறாயோ அதுவாகவே ஆகிறாய்"* என்பதே அந்த தத்துவம்! உலக ஞானிகள் இந்த தத்துவத்தைதான் தன் வாழ்க்கையாக்கி இருக்கிறார்கள். இந்தியாவைச் சேர்ந்த, உலகப்புகழ்பெற்ற அரசியல் தலைவர் + விஞ்ஞானி + எழுத்தாளர் + தத்துவ மேதை + முன்னாள் ஜனாதிபதியான டாக்டர். அப்துல்கலாம் இந்த ரீதியில் வாழ்ந்து சிகரத்தை தொட்டவர் தான். இதை அவர் தன் வாழ்க்கை வரலாற்றுப் புத்தகத்தில் எழுதியிருக்கிறார். அவருடைய புத்தகத்தின் இரத்தினச்சுருக்கம் *"கனவு காணுங்கள்"* என்பதுதான்! வேதம் இல்லாத, தேவனற்ற உலகத்தார் தங்களுடைய அனுபவத்தினால் இந்த உண்மையைக் கண்டுபிடித்து, அதைச் செயல்படுத்தி, வெற்றி பெறுகிறார்கள். அவர்களுக்கு உண்மையான தேவன் யார் என்று தெரியாவிட்டாலும்; அவர் செயல்படுத்திய இந்த இயற்கை விதி **(principle - law)** தங்களுடைய வாழ்க்கையில் செயல்பாட்டில் இருப்பதை அவர்கள் கவனிக்கிறார்கள்! அதனால்தான் இயேசு சொன்னார்:

*"... ஒளியின் பிள்ளைகளைப் பார்க்கிலும் இந்த பிரபஞ்சத்தின் பிள்ளைகள் தங்கள் சந்ததியில் அதிக புத்திமான்களாயிருக்கிறார்கள். (wise - knowing much from experience - sensible) லூக்கா. 16:8"* அதாவது தேவனை அறிந்த மக்களை விட இவர்கள் அதிகப்படியான அனுபவசாலிகளாக, அறிவுப்பூர்வமானவர்களாக, அதிகப்படியான சித்தனையாளர்களாக, உலகத்தின் நிகழ்வுகளை அதிகப்படியாக கிரகிக்கும் ஆற்றலுள்ளவர்களாயும் இருக்கிறார்கள். ஏன் இப்படி? எனக்குத் தோன்றியதைச் சொல்கிறேன்: இவர்கள் சாத்தானின் இராஜ்ஜியத்திற்குள் இருப்பதால் (நாமும் முன்பு அங்கேதான் இருந்தோம்; இப்போது கிருபையால் அங்கேயிருந்து விடுதலை பெற்று தேவனுடைய இராஜ்ஜியத்திற்குள் வந்திருக்கிறோம்.) சாத்தான் இவர்களை அதிகப்படியாக **disturb** செய்வதில்லை. அதனால் அவர்களுக்கு இது சாத்தியமாகிறது. அப்படியானால் நாமும் கூட சாத்தானுடைய இராஜ்ஜியத்திற்குள்ளேயே இருந்துவிட்டால் நமக்கும் அவர்களைப் போல வெற்றி கிடைக்குமே என்று எண்ணி போய்விடக் கூடாது.

சொல்லப்போவதை கவனியுங்கள்: உலகத்தார் தேவனுடைய பிள்ளைகளைப் பார்க்கிலும் எல்லா ரீதியிலும் அதிகப்படியான வெற்றியை பெற்றிருந்தாலும், ஜெயித்திருந்தாலும், செழித்திருந்தாலும் அவர்களால் தேவனுடைய இராஜ்ஜியத்தை பூமியில் நிலைநாட்ட முடியாது. ஏனென்றால் அவர்கள் பிசாசின் இராஜ்ஜியத்திற்குள்ளாக இருக்கிறார்களே! தன்னை ஆளுகை செய்து கொண்டிருக்கிற ராஜாவுக்கு அவர்களால் துரோகம் செய்ய முடியாதே! அதனால் தான் அவர்கள் எவ்வளவு நல்லவர்களாக இருந்தாலும் இயேசு என்ற பெயரை தன் நாவினால் உச்சரிக்க மாட்டார்கள், அவரை தேவன் என்று சொல்லிக் கொள்ளவும் மாட்டார்கள், அவர்களால் தேவனுடைய **project** ஐ இந்த பூமியின் மீது நிலைநாட்ட எந்த ரீதியிலும் அனுசரணையாக, உதவியாக இருக்க முடியாது.

சுருக்கமாகச் சொல்லப்போனால் தன்னுடைய ஆளுகைக்குள் இல்லாமல்; வேறொருவனுடைய (பிசாசினுடைய – அதாவது தன்னுடைய எதிரியுடைய!) ஆளுகைக்குள் இருப்பவனை வைத்து தன்னுடைய சித்தத்தை பூமியில் நிறைவேற்ற தேவனால் முடிவதில்லை. தன்னை அறியாத உலகத்தார் எவ்வளவுதான் நல்லவர்களாக இருந்தாலும், பூமியின் சகல ஐசுவரியங்களையும் தங்கள் கைக்குள் வைத்திருந்தாலும், வார்த்தையின் வல்லமையை அறிந்தவர்களாக இருந்தாலும் அவர்களை தேவன் பிரயோஜனப்படுத்தி இந்த பூலோகத்தை பரலோகத்தைப் போல மாற்ற முடியாது, அதில் ஏதேனை வட்டணிக்க முடியாது, ஜீவ விருட்சத்தை முளைக்க வைக்கவும் முடியாது. அதனால் தான் எல்லா ரீதியிலும் குறைவுபட்டு காய்ந்து போன குச்சில் **(hut - small rural house)** போலிருக்கிற, ஓலைக்குடிசையைப் **(Temporary accomodation, e.g. vacation home)** போலிருக்கிற, ஜெயிலுக்குள் **(surround place with army)** இருக்கிற தன்னுடைய பிள்ளைகளையே தேவன் தன் ஐசுவரியமான, செல்வச் செழிப்பான, ஒரு நன்மையும் குறைவுபடாத இராஜ்ஜியத்தை உருவாக்க, தேவன் பிரயோஜனப்படுத்துகிறார். (காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு! அப்படியிருக்க நம் தேவனுக்கு நாம் கண்மணிகளல்லவா?) *"சீயோன் குமாரத்தி திராட்சத்தோட்டத்திலுள்ள ஒரு குச்சுபோலவும், வெள்ளரித் தோட்டத்திலுள்ள ஒரு குடிசை போலவும், முற்றிக்கை போடப்பட்ட ஒரு பட்டணம் போலவும் மீந்திருக்கிறாள். ஏசாயா. 1:8"*

ஆனால் வெறுங்கையுடன் இருக்கிற தன்னுடைய பிள்ளைகளை வைத்து தேவனால் தன்னுடைய திட்டத்தை முடிக்க முடியாது என்பதால் நாம் சகல ஆசீர்வாதங்களையும் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். ஆசீர்வாதங்கள் என்பது புதிதாக முளைத்த ஒரு காரியமல்ல, அது ஆரம்பத்தில் ஏதேனில் இருந்தது. ஆசீர்வாதமான பிரலோகத்திலிருந்து, அந்த பரலோகத்தின் விரிவாக்கமான பூலோகத்தை தேவன் உருவாக்கினார். பரலோக ஆசீர்வாதங்களை உபயோகித்தே அதை உருவாக்கினார் என்பதால் ஆரம்ப கட்ட பூலோகம் ஆசீர்வாதங்களினால் நிரம்பி எழில் பூத்து வழிந்தது. ஆதாம் அதை பிசாசிடம் கடத்தி விட்டபோது **(handover)** அதன் ஆசீர்வாதங்களும் அழகும் அழிந்தது. அதிலிருந்து சாபமும், பாவமும், வியாதியும், தரித்திரமும், கண்களின் இச்சையும், அதிலிருந்து விளைந்த கண்ட கண்ட கண்றாவிகளும் முளைத்து எழும்பி பூமியை நிரப்பின! பூமி கூவம் நதி போல மாறி நாற்றமெடுத்தது! ஏதேனின் ஆசீர்வாதங்களெல்லாம் கனவாகி, மடிந்து, புதைந்து மறைபொருளாகிப் போனது. ஏதேனின் வாசலைத் தேடித் தேடி, தடவி தடவித் தவியாய் தவித்தார்கள் நியாயப்பிரமாணத்திற்குட்பட்டிருந்த பழைய ஏற்பாட்டின் மக்கள்! ஊகூம் ... பாதையைக் கண்டுபிடிக்க முடியவில்லை, கனவுகளுடனேயே செத்து மடிந்தார்கள்.

சாத்தான் எதையும் உருவாக்கவில்லை, அது அவனால் முடியவும் முடியாது. தேவன் நியமித்திருந்த நியமங்களை **anti - clockwise order** ல் ஓட வைத்துவிட்டான்; அவ்வளவுதான்! இதற்கு சாத்தான் உபயோகித்தது தன்னுடைய வார்த்தைகளைத்தான். தன் ஆளுகைக்குட்பட்டிருக்கிற மனிதர்களை உபயோகித்து தன் வார்த்தைகளைப் பேச வைக்கிறான், அவ்வளவுதான் தன்னிச்சையாக நியமம் தன் வேலையை செய்கிறது. ஏதேனில் ஏவாளை ஏமாற்றிய அதே முறையில்தான் இன்றளவும் செயல்படுகிறாரன். இச்சையை உருவாக்கக்கூடிய ஏதோ ஒன்றை பலவிதமான உலக ரீதிகளில் கண்ணினால் பார்க்கும்படி செய்கிறான். (உ.ம். இச்சையைத் தூண்டும் ஆபாச திரைப்படங்கள்) திரைப்பட தொழில் நுட்பத்தையே தவறு என்று ஒதுக்கிவிட முடியாது. சாத்தானின் செயல்பாடுகளின் திணிப்பு இல்லாத, கேட்டை உருவாக்காத, நல்ல திரைப்படங்களை நிச்சயமாக வரவேற்கலாம். தேவனுடைய கோட்பாடுகள் அதிலே வெளிப்படுமானால் இன்னும் நல்லது. ஆனால் துரதிஷ்டவசமாக

அப்படிப்பட்ட திரைப்படங்கள் 99% வெளிவருவதில்லை என்பது ஒரு சோகமயமான உண்மை. பூமியின் மீது மனிதர்களின் புதிய அறிவியல் கண்டுபிடிப்புகள், நாகரீக கண்டுபிடிப்புகள் எதுவானாலும் சரி; அதை முதலில் சாத்தான் கைப்பற்ற விட்டு விடும் தேவபிள்ளைகளின் அறியாமையினால்தான் இது நடக்கிறது. "உலகம் கெட்டுக் கெடக்குதப்பா" என்று அங்கலாய்க்கிறார்களே! உண்மைதான், ஆனால் அதற்குக் காரணம் உலக மனிதர்கள் அல்ல, சத்தியம் தெரியாத தேவப்பிள்ளைகள்தான்!

கையில் வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அலைகிறார்கள். உலக மனிதர்களோ அந்த நெய்யை எடுத்து உருக்கிக் கொண்டார்கள். இன்று அவர்களின் காட்டில் மழை... அவர்களுக்கு தலைவாழை இலைமீது சுடச்சுட சம்பா அரிசிச்சாதம் மணக்க மணக்க பரிமாறப்படுகிறது; அதற்கு மேலே வாசம் கமகமக்கும் நெய் ஊற்றப்படுகிறது. தேவபிள்ளைகளின் வீட்டில் ...? கண்ணீர் உப்பிட்டு, காவேரி நீரிட்டு, கலையங்கள் ஆடுது சோறின்றி... இதயங்கள் ஏங்குது வாழ்வின்றி! வசனங்களைக் கவனியுங்கள்:

*"உன் நடுவிலிருக்கிற அந்நியன் (தேவனை அறியாதவன் – சாத்தானுடைய தூதர்களை சேவிக்கும் மதஸ்தர்கள்) உனக்கு மேற்பட்டு மேன்மேலும் உயர்ந்திருப்பான்; நீ மிகவும் தாழ்த்தப்பட்டுப்போவாய். அவன் உன்னிடத்தில் கடன்படான், நீ அவனிடத்தில் கடன்படுவாய்; அவன் தலையாயிருப்பான்; நீ வாலாயிருப்பாய். (?!) உபா. 28: 43, 44"*

இப்படி நடக்க காரணம் என்ன? சாபம்தான். சாபம் எதனால் வருகிறது?

*"... அவர் சத்தத்திற்குச் செவிகொடாதேபோவாயாகில், இப்பொழுது சொல்லப்படும் சாபங்களெல்லாம் உன்மேல் வந்து, உனக்குப் பலிக்கும். உபா. 28:15"*

சரி, நாம் செய்ய வேண்டியது என்ன? தேவன் தன்னுடைய **assignment (project)** பூமியில் முடிக்க நம் உதவியை எதிர்பார்க்கிறார். அவரோடு ஒத்துழைப்போமானால் வேலை சீக்கிரம் முடியும். தேவன் தரும் பரலோக சாத்தியக்கூறுகளை முதலில் நம் கைக்குள் கொண்டுவர வேண்டும். **(உதாரணமாக திரைப்படத் தொழில் நுட்பம் முதன் முதலில் சுவிசேஷம் அறிவிப்பதற்காகத்தான் கண்டுபிடிக்கப்பட்டு கொண்டுவரப்பட்டது. இந்தியாவில் முதன்முதலாக திரையிடப்பட்ட மவுனப்படம் இயேசுவின் வாழ்க்கை. இது 1896ல் பிரான்ஸ் நாட்டிலிருந்து இந்தியாவிற்கு வந்தது.)** வஞ்சக சாத்தான் அதைத் தட்டிப்பறித்து விட்டான். இந்த தொழில்நுட்பத்தை 99% கைப்பற்றிய சாத்தான்; அதன் மூலமாக தன்னுடைய திட்டத்தை வெற்றியாக முழுவீச்சில் செய்து வருகிறான். இதுபோல் எண்ணிக்கையிலடங்காத அறிவியல், நாகரீக தொழில் நுட்பங்கள் அவன் கைக்குள் போய்விட்டன. அப்போதெல்லாம் தேவ பிள்ளைகள் என்ன செய்துகொண்டிருந்தார்கள்? சாத்தான் கொடுத்த தூக்கமாத்திரையினால் குறட்டைவிட்டுக் கொண்டிருந்தார்கள்!

அதனால் பழைய ஏற்பாட்டை மாற்றி, புதிய ஏற்பாட்டை நமக்கு இயேசுவின் மூலமாக ஏற்படுத்தினார் தேவன். ஏதேனின் வாசலைக் கண்டுபிடிக்க முடியாதபடி முட்டுக்கட்டைப் போட்டுக்கொண்டிருந்த நியாயப்பிரமாணத்தை சிலுவையில் ஆணியடித்து அழித்து விதையாக்கி; அதிலிருந்து ஒரு புதிய பிரமாணத்தை முளைத்தெழும்பப் பண்ணினார். அதைத்தான் நாங்கள் உங்களுக்கு இப்போது சுவிசேஷமாக அறிவித்து வருகிறோம். *சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் ... யோவான். 8:32* என்று இயேசு சொன்ன வார்த்தைகள் அவருடைய புதிய பிரமாணத்தைத்தான் குறிக்கிறது. புதிய, கிறிஸ்துவின், சத்திய பிரமாணத்தை அறிந்து கொள்ளுங்கள், அது உங்களை விடுதலையாக்கும்.

தேவனுடைய பிள்ளைகள் ஏதேனின் ஆசீர்வாதங்களை மீண்டுமாகக் கைப்பற்ற தேவன் ஒரு திட்டம் வகுத்தார். ஏதேனின் ஆசீர்வாதங்களை சுமார் 7000 வாக்குத்தத்தங்களாக மாற்றினார். வார்த்தையுருவத்தில் ஏதேனின் ஆசீர்வாதங்கள் அனைத்தையும் அதற்குள் வைத்தார். நாம் நம் தேவைக்கேற்ப, சூழ்நிலைக்கேற்ப வாக்குத்தத்த வசனங்களைத் தேடி கண்டுபிடிக்கும்படி செய்தார். இந்தத் தேடலுக்கு பரிசுத்தாவியானவர் முழுப்பொறுப்பெடுத்து நமக்கு உதவி செய்கிறார். அப்படி தேடிக் கண்டுபிடித்த ஆசீர்வாதங்களை விசுவாசித்து அதை இருதயத்தில் பதிக்கும்படி செய்கிறார். அந்த வசனங்களை பேசி – சொல்லி – உச்சரித்து நம் இருதயத்தில் பதிக்க வைக்கிறார். உள்ளத்தின்

நிறைவினால் நம் வாய் பேசிக்கொண்டே இருக்கிறது; நாம் பேசுகிற காரியங்கள் (ஏதேனின் ஆசீர்வாதங்கள்) ஒன்றன் பின் ஒன்றாக நமக்குள் வந்துகொண்டே இருக்கின்றன.

ஏதேனுக்குள் இருந்த ஆசீர்வாதங்கள் என்னவெல்லாம் என்பதை நீங்கள் ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களை ஆராய்ச்சி பண்ணினால் தெரிந்துவிடும். நாம் எவற்றையெல்லாம் இழந்துவிட்டோம் என்பதும் புரிந்துவிடும். அவற்றில் சிலவற்றைப் பார்ப்போம், ஏனென்றால் அவற்றை நாம் பெற்றுக்கொண்டால்தான் இழந்த ஏதேனை மீண்டுமாக உருவாக்க முடியும்.

1. வெளிச்சம்: இந்த வெளிச்சம் சூரியன் சந்திரனிலிருந்து வருகின்ற வெளிச்சம் அல்ல. அவற்றையெல்லாம் தேவன் 4ஆம் நாளில் தான் உருவாக்கினார். ஆனால் வெளிச்சத்தை முதலாம் நாளிலேயே உருவாக்கி விடுகிறார். ஆதி. 1:3

2. பகல், இரவு: சூரியனை உருவாக்குவதற்கு முன்னதாகவே பகலையும், இரவையும் ஏற்படுத்தினார். ஆதி. 1: 4, 5

3. ஜலத்திரை (water canopy) இருந்தது. நோவா காலத்தில் பூமியெங்கும் வெள்ளம் வந்தபோது இந்த ஜலத்திரையில் வைக்கப்பட்டிருந்த தண்ணீர் மொத்தமும் பூமியின் மேல் கொட்டப்பட்டது. அதனால் பூமி நிலைகுலைந்து இருபத்தி மூன்றரை டிகிரி சாய்ந்தது. இந்த ஜலத்திரை இருந்திருந்தால் ஓசோன் படலத்தில் ஓட்டைகள் விழுந்திருக்காது. இந்த ஜலத்திரை பூமிக்கு ஒரு கூரை (Ceiling) போல இருந்தது, சூரியனின் தாக்கத்திலிருந்து பூமியைப் பாதுகாத்தது. இதனால் பூமி சூடாகாமல் இருந்தது. கடலின் நீரும் உப்புத் தன்மையில்லாத நல்ல தண்ணீராக இருந்திருக்க வேண்டும். ஜலத்திரை இல்லாமல் போன பிறகு சூரியனின் வெப்பம் பூமியை நேரிடையாகத் தாக்குவதால் கடல் நீர் நீராவியாகப் போய்விடும் ஆபத்து இருக்கிறது. இதைத் தவிர்க்கவே பூமி கடல் நீரை உப்பாக மாற்றி தன்னை அதற்கேற்ப தகவமைத்துக் கொண்டது.

சூழ்நிலைக்கேற்றவாறு தன்னைத் தகவமைத்துக் கொள்ளும் (மாற்றங்கள்) ஆற்றல் இயற்கையிடம் மிகவும் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் அமைந்திருக்கிறது. பூமியையும், அதன் மீதான இயற்கையையும் வடிவமைத்த அதன் சிருஷ்டிகர் தன் வார்த்தைகளால் அதற்கு இந்த வல்லமையைக் கொடுத்திருக்கிறார். (இயற்கையிடம் காணப்படும் இந்த தன்மை பரிணாமவாதிகளுக்கு வரப்பிரசாதமாகப் போய்விட்டது. அவர்களுக்கு ஓரளவுக்கு இந்த உண்மை தெரிந்திருக்கிறதுதான். என்றாலும் இந்த தகவமைப்புத் தன்மைக்கான ஆரம்பக் காரணம் தெரியாததினால் சாத்தானோடு சேர்ந்து விட்டார்கள், தேவனே கிடையாது என்கிறார்கள். தன்னை உருவாக்கிய தேவனையே இல்லையென்று இவர்களைக் கொண்டு அறிக்கையிட வைத்த கெட்ட, புத்திசாலியான சாத்தான்!)

4. தேவன் உருவாக்கிய எல்லா தாவரங்களும் இப்போது இல்லை என்பது விஞ்ஞான உலகம் நமக்கு அறிவித்திருக்கும் உண்மை. அதைப் போலவே பூமியின் ஜீவராசிகளும் பெருமளவில் அழிந்து ஒழிந்தன... தனது சுவடுகளை மட்டும் விட்டுச் சென்றன... ஆராய்ச்சிக்காக!

5. சூரியனின் நோக்கம் மாற்றப்பட்டது, பகலை ஆளுகை செய்வதற்காகவும், பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உணடாக்கவும் தான் அது படைக்கப்பட்டது. ஆனால் இன்றோ சூரியன் பூமியை போட்டு வறுத்து எடுக்கிறது! ஏன்? சூரியன் சாபத்திற்குள்ளாகவில்லை, அது நல்லதாகவே தான் இருந்து வருகிறது. என்றாலும் பூமியின் மீது இயங்கிவரும் சாப நியமம் அதற்கு இடையூறாக (disturbance) இருக்கிறது. அது மட்டுமல்ல நல்ல சூரியனின் நல்ல கதிர்களை நல்ல விதமாக கிரகித்துக் கொள்ள (absorbtion) பூமிக்குத் திராணியில்லாமல் போனது!

6. தேவனுடைய சாயல்: தேவனுடைய சாயல் பறிபோனது. தேவனுடைய வார்த்தைகள் செயல்பட்டுக்கொண்டிருந்த இடத்தில் சாத்தானுடைய வார்த்தைகள் ஊடுருவியதால் இந்தப் பிரச்சனை வந்தது. பேயே, பிசாசே, குட்டிச்சாத்தானே, கொள்ளிவாய்ப்பிசாசே, இரத்தக் காட்டேரியே என்று மனிதனே தன்னுடைய சக மனிதனை திட்டும்படி செய்து; தன்னுடைய சாயலை மனிதன் மீது பதிய வைத்து விட்டான் சாத்தான்! இதைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்ற அவசியமுமில்லை!

7. ஆளுகை: ராஜாதி ராஜாவாக இருக்கும் நம் தேவன்; அவரைப் போலவே மனிதனையும் ராஜாவாகவே உருவாக்கினார், ஆளுகையையும் கொடுத்தார். ஆளுகை பறிபோனது, பூமியின் காரியங்கள், சாபங்கள், பாவ சந்தோஷங்கள், வியாதிகள், தரித்திரம் மனிதனை ஆளுகை செய்ய ஆரம்பித்தன. அவைகளெல்லாம் ராஜாவாக மாறி, மனிதனை உருவழியச் செய்து, உண்டு இல்லையென்று ஆக்கிவிட்டன!

8. உணவு: தேவன் தந்த சைவ சாப்பாட்டு முறை அசைவமாக மாற்றப்பட்டபோது; பூமியின் ஜீவராசிகள் யாவும் பரிதவித்தன. ஏதேனில் மனிதனோடு உலாவி, அவனை மகிழ்விக்க வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு படைக்கப்பட்ட ஜீவராசிகள் வேதனையோடு செத்து மடிந்தன! மனிதனின் சரீரம் தேவ மகிமையை இழந்தபோது; இப்படிப்பட்ட மாற்றத்திற்குத் தன்னை உட்படுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயம் வந்தது.

9. ஓய்வு: தேவன் நியமித்த ஓய்வும் பறிபோனது. வழிந்தோடும் வியர்வைத் துளிகள் அதற்கு சாட்சியாயிருக்கின்றன!

10. மூடுபனி: முதலில் விவசாயத்திற்கு தேவன் மூடுபனியைதான் பயன்படுத்தினார்; மழை அவசியமில்லாதிருந்தது. ஜலத்திரையினால் பூமி மறைக்கப்பட்டிருந்ததினால்; சூரிய வெப்பத்தால் கடல் நீர் ஆவியாகவில்லை. அதனால் வானத்தில் மழை மேகங்கள் உருவாகவில்லை.

11. ஏதேன்: இந்த தோட்டம் இருந்த இடம் கேள்விக்குறிகள் மத்தியில் ஆராயப்பட்டு வருகிறது. ஆஸ்திரேலியா கண்டத்தினருகில் கடலின் ஆழத்தில் இந்த பகுதி புதைந்திருப்பதாக நம்பப்படுகிறது.

12. ஜீவ விருட்சம்: என்றென்றுமாக மனிதனை உயிருடன் இருக்கச் செய்யும் இலைகளையுடைய இந்த மூலிகை மரம் பறிபோனது.

13. மழை இல்லாமலேயே உருவாகும் ஆறுகள்: பறிபோனது, மழைபெய்தும் இன்று தண்ணீரில்லாத ஆறுகளையே பெரும்பாலும் பார்க்க முடிகிறது.

14. பொன், விலையுயர்ந்த இரத்தினக் கற்கள்: தேவபிள்ளைகள் இதைப் புறக்கணித்து விட்டார்கள். தேவனற்ற உலக மனிதர்களின் கைவசம் சிக்கிக்கொண்ட தங்கத்தின் மேலேயே உலக பொருளாதாரம் கட்டப்பட்டிருக்கிறது. அந்தப் பணம் மனிதனைப் பாடாய்படுத்துகிறது.

15. ஏற்ற துணை: மனைவி மட்டும்தான். ஆனால் இன்று அந்த இடத்திற்கு யாராரோ வந்துவிட்டதால் குடும்பத்துக்கு குடும்பம் குழப்பம் தான். இது என்ன வீடா அல்லது பொள்ளாச்சி சந்தையா என்று சந்தேகம் வரும் அளவுக்கு இரைச்சல்!

16. அயர்ந்த நித்திரை: பறிபோனது, தூக்க மாத்திரை பாட்டில்கள் தலைமாட்டில் தூங்குகிறது.

17. வஸ்திரம் தேவையில்லாத ரீதியிலான மகிமையான சரீர அமைப்பு: பறிபோனதால் விதவிதமான வஸ்திரங்கள்... அலங்கார உடைகளின் அணிவகுப்புகள்... நாகரீக ஆடைகள் ... அதைத் தொடர்ந்து வருகிற இச்சையின் ஒரு கர்ப்பப்பிறப்பாகிய ஆபாசம் ... மொத்தத்தில் உலகமே கேட்டுக்குள் தள்ளப்பட்டுப் போனது.

18. சுதந்திரம்: பறிபோனதால் ஒவ்வொரு தனிப்பட்ட மனிதனின் வாழ்க்கையிலும் எல்லைக்குறிகள் தோன்றின. அதைச்சுற்றி முள்வேலிகள் போடப்பட்டன.

19. பாவமில்லாத சூழ்நிலை: பறிபோய் இப்போது பாவமே சூழ்நிலை என்றாகிவிட்டது!

20. பிரகாசமுள்ள மனக்கண்கள்: பறிபோனதால் ஆவிக்குரிய உள்ளான மனிதன் வேதத்தை வாசிப்பதை நிறுத்திக் கொண்டான்; வெளி மனிதன் (சரீரம்) தன் மாம்சீக கண்களினால் மூளையறிவை உபயோகித்து வேதத்தை வாசிக்க ஆரம்பித்தான்; அங்கே தான் பிரச்சனையே ஆரம்பமானது. (மூளையறிவை உபயோகித்து வாசிக்க வேதம் தினத்தந்தியோ, ஆனந்தவிகடனோ, குமுதமோ அல்ல)

21. பகலில் குளிர்ச்சி (வெயில், வெப்பம் கிடையாது). பகலில் குளிர்ச்சி இருக்கட்டும்.

இரவிலேயே தாங்க முடியாத உஷ்ணம். பணக்கார வீட்டு நாய்க்குட்டி கூட ஏசி. கேட்கிறது!

22. தைரியம்: இது பறிபோனதால் மனிதனின் விசுவாசம் கேள்விக்குறியானது. அதனால் மனிதனின் வாழ்க்கையே கேள்விக்குறியாகிப் போனது. விசுவாசித்து பிழைப்பு நடத்த வேண்டிய முறையில் தான் மனிதன் உருவாக்கப்பட்டிருக்கிறான். ஏனென்றால் மனிதன் கண்ணுக்குத் தெரியாத ஆவி ரூபத்தில் இருப்பவன். நாம் கண்களால் பார்ப்பது மனிதனை அல்ல, அவன் தங்கியிருக்கும் கூடாரத்தைத்தான். கண்ணுக்குப் புலப்படாத ஆவி மனிதன், அதே விதமாக கண்ணுக்குப் புலப்படாத காரியங்களைத்தான் நம்ப வேண்டியதாயிருக்கிறது. கண்ணுக்குத் தெரிகிற விதத்தில் இருக்கிற சரீரத்திற்குள் இருந்து கொண்டு; கண்ணுக்குத் தெரியாததை நம்புவது கஷ்டம், அது முடியாத காரியம். அதற்கு வசதியாகத்தான் விசுவாசம் என்ற ஆவிக்குரிய நியமம் மனிதனுக்கு கொடுக்கப்பட்டது. அந்த விசுவாசம் மனிதனின் வீழ்ச்சியால் பயமாக மாற்றப்பட்டுப் போனது. பயம் என்பது விசுவாசத்தின் நேர் எதிர்மறை நியமம் ஆகும். அதாவது பயம் கண்களால் பார்க்க முடிகிறவற்றை மட்டுமே நம்புகிறது. ஆவி ரீதியிலான மனிதன் கண்களால் பார்க்கக்கூடியவற்றை வைத்து எதையும் முடிவு செய்ய முடியாது; அதன்படி வாழவும் முடியாது. ஒட்டுமொத்த மனுக்குலமே எதையாவது நினைத்து கதி கலங்கி நிற்பதற்கு இந்த பயம்தான் காரணம்.

23. சர்ப்பம் என்று அழைக்கப்படுகிற ஒரு நல்ல விலங்கினம் (பாம்பு போன்ற தோற்றமுடைய – **serpent)** சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு கெடுக்கப்படுகிறது. அதாவது எந்தவித கொடூரமான சுபாவமும் இல்லாமல் நல்லதாக படைக்கப்பட்ட ஜீவராசிகளின் குணாதிசயங்கள் கொடூரமானதாக மாற்றப்பட்டது. (உ.ம். சிங்கம், புலி, கரடி, ஓணான், திமிங்கலம், குளவி, எறும்பு, கொசு ... )

24. கர்ப்ப வேதனையில்லாமல் மனிதனை பூமியில் பிறக்க வைக்கிற ஒரு முறைமை: மனிதன் பாவம் செய்வதற்கு முன்பு இருந்த மகிமையான சரீரத்தில் அது சாத்தியமாக இருந்தது; ஆனால் இப்போது இல்லை.

25. ஆண் = பெண் என்ற முறைமை: இது மாற்றப்பட்டு ஆண் > பெண் என்றாகிவிட்டது. பூமியை ஆளுகை செய்வதற்காக படைக்கப்பட்ட மனிதனின் நிலைமை மிகவும் கீழிறங்கிப் போனது; பெண்ணை ஆளுகை செய்யும் நிலைமையாகிப் போனது. பெண்ணின் நிலைமையும் அப்படியே ஆகிப்போனது. பூமியை ஆளுகை செய்வதற்குப் பதிலாக மனிதனின் ஆளுகைக்குக் கீழ் இயங்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. ஆணாதிக்கம், பெண் அடிமைத்தனம் என்ற பிரச்சனை இன்றளவும் மனுக்குலத்தை ஆட்டிப்படைக்கும் பிரச்சனைகளில் ஒன்றாகிப்போனது. இந்தியாவில் இது கலாச்சாரம் சார்ந்ததாகவும், தமிழ்நாட்டில் இது தெய்வீகம் சார்ந்த ஒன்றாகவும் காணப்படுகிறது. இந்த சாபக்கேடு சாத்தானின் கைவசமாகி சக்கைப்போடு போட்டு வருகிறது.

26. ஆசீர்வாத நியமம்: மாற்றப்பட்டு சாப நியமம் இயங்க ஆரம்பித்தது. மனிதன் தன்னைக் குறித்ததான தேவனுடைய திட்டத்தை மறந்து போனான்; சாத்தானின் கைக்கூலியாக மாறிப்போனான்.

27. பூமியின் நல் விளைச்சல்: மாற்றத்திற்குள்ளாகி பூமி முட்களையுடைய தாவர இனங்களை தானாக, தாராளமாக, ஏராளமாக முளைப்பித்தது. தேவையில்லாத இப்படிப்பட்ட தாவரங்கள் விதைக்காமல், பராமரிக்கப்படாமல், கேட்பாரற்று அமோகமாக விளைந்து வளர்கின்றன. பார்த்துப் பார்த்து பழகிவிட்டதால் இதைப்பற்றி யாரும் யோசிப்பதில்லை. எங்கள் வீட்டின் கொல்லைப்புறத்தில் ஒரு பப்பாளி கன்றை நட்டோம். மண்வெட்டியால் பள்ளம் தோண்டி; உரம் போட்டு, அதற்குள்ளே நட்டு, தினமும் தண்ணீர் பாய்ச்சினோம். இலைகளை வியாதியிலிருந்து காப்பாற்ற விசேஷமான தெளிப்பு மருந்துகள் வரவழைக்கப்பட்டன. விலங்குகளிடமிருந்து காப்பாற்ற வேலி போடப்பட்டது. செப்படி வித்தைக்காரன் தோற்றான் போங்கள்; அந்த அளவுக்கு தலைகீழாக நின்று கவனித்தும் ... ஒரு அடி உயரம் வளர்ந்திருக்கும் அந்த மரத்தின் (இல்லையில்லை அது கொண்டு வரும் போதே ஒரு அடி உயரம் தான் இருந்தது.) நுனியில் ஒரே ஒரு இலை ஒட்டியிருந்து ஆறுதல் சொன்னது! இப்படி ஏன் நடக்கிறது என்றும் யாரும் யோசிப்பதில்லை, ஏனென்றால் இதுவும் பார்த்துப் பார்த்து பழகிப்போன ஒன்றாகிவிட்டது.

**28.** வியர்வையில்லாத வேலை: ஆரம்பத்தில் தேவன் ஆதாமுக்கு வேலையை கொடுத்ததற்கு காரணம் தனக்குள் இருக்கும் தெய்வீக ஆற்றலை வெளிப்படுத்தவும், அதில் சந்தோஷப்படவும், அதைப் பிரயோஜனப்படுத்தி தேவனுடைய திட்டத்தை பூமியின் மீது செய்து முடிப்பதற்கும் தான். ஆனால் சாப நியமம் ஆரம்பித்த பிறகு; வேலைக்கும் வயிற்றுப்பிழைப்புக்கும் தொடர்பு ஏற்பட்டுவிட்டது. வியர்வை வழிய வேலை செய்தால் தான் சோறு என்ற நிலைமைக்கு மனிதன் தள்ளப்பட்டான். இதனால் தேவனுடைய திட்டத்தை முடிப்பதில் மனிதனுக்கு இருந்த கவனம் திசை திரும்பி; வயிற்றுப்பிழைப்பு என்றாகிப் போனது.

**29.** சாகாமல் உயிரோடிருக்கும் தன்மை, அதற்கேற்ற உடல் அமைப்பு: மகிமையை இழந்த மனிதனுடைய சரீரத்தில் சாவுக்கேதுவான காரியங்கள் தோன்றின. வியாதிகள், பாவம் செய்வதினால் ஏற்படும் தாக்கங்கள், பலவீனங்கள், வயோதிகம்... இப்படியாக பல ரீதியில் பாதிக்கப்பட்ட உடல் சாவை நோக்கி சென்றது. காத்திருந்த மரணம் மகிமையிழந்த சரீரத்தை அணைத்துக் கொண்டது.

இப்படியே ஆதாம் இழந்த காரியங்களை அடுக்கடுக்காகச் சொல்லிக்கொண்டே போகலாம். அவன் தன்னுடைய அறியாமையினால் ஏமாளித்தனமாக சாத்தானிடம் இழந்ததை மீட்டு, நம்மிடம் கொடுக்கவே இயேசு வந்தார்.

## *ஆசீர்வாதம் ... அது Compulsory:*

ஏதேனில் இழந்த ஆசீர்வாதங்களை நாம் திரும்பப் பெற்றுக் கொள்வதற்காக தேவன் சில காரியங்களைச் செய்தார்; அவற்றைப் பார்ப்போம். ஏதேனின் ஆசீர்வாதங்களை ஆபிரகாமின் ஆசீர்வாதங்கள் என்ற **package** க்குள் வைத்து பத்திரப்படுத்தினார். ஆபிரகாம் என்ற மனிதனை தெரிவு செய்து; அவனை ஆசீர்வதித்து நமக்கு உதாரணமாக்கினார் **(role model).** அந்த ஆசீர்வாத பொட்டலத்தை **(parcel)** நமக்கு அனுப்பினார். வாக்குத்தத்தங்கள் மூலமாகவும் ஆசீர்வாதங்களை நமக்கு பரிந்துரை செய்தார். ஆபிரகாமுக்கும் அவனுடைய சந்ததிக்கும் வாக்குத்தத்தங்கள் பண்ணப்பட்டன, ... கலா. 3:16. வாக்கு + தத்தம் = வாக்குத்தத்தம்! அதாவது வாக்கு கொடுப்பது **(promise)** என்று அர்த்தம்.

மனிதர்கள் ஒருவருக்கொருவர் வாக்கு கொடுப்பதுண்டு. சத்தியமா நான் பார்த்துக்கொள்கிறேன், நிச்சயமாக நான் சொன்னதை செய்வேன், கவலைப்படாதே, நான் இருக்கிறேன், உன்னை கைவிட மாட்டேன், நிச்சயமாக செய்து தருகிறேன், என்னை நீ தாராளமாக நம்பலாம், நான் பேச்சு மாற மாட்டேன், என் தலைமேலே ஆணையாக ... இப்படி நீளும் வாக்குறுதிகளுக்கு முடிவில்லை. வாக்கு கொடுத்தவர்கள் எல்லோரும் சொன்னபடி எதையுமே செய்வதில்லை என்று சொல்ல முடியாது. சிலர் சொன்னபடி செய்கிறார்கள்; என்றாலும் கொஞ்ச காலத்துக்குத்தான், பிறகு அவர்களால் முடியாமல் போகிறது. சிலர் சொன்னதில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை நிறைவேற்றித் தருகிறார்கள். சிலர் சொன்னபடி செய்வதில்லை, சாக்குப்போக்கு, நொண்டி சமாதானம் சொல்லுகிறார்கள். சிலர் சொன்னபடி செய்யாமல் தலைமறைவாகி விடுகிறார்கள். சிலர் நான் அப்படி சொல்லவே இல்லையே என்று பிளேட்டையே திருப்பிப் போட்டு விடுகிறார்கள். இன்னும் சிலர் நீ யார் என்றே எனக்குத் தெரியவில்லை என்று சொல்லி கரண்ட் இல்லாமலேயே ஷாக் அடிக்க வைப்பார்கள்!

ஆனால் இங்கே நமக்கு வாக்குத்தத்தங்களைத் தந்தவர் மனிதனல்ல, தேவன் என்று பார்க்கிறோம். பொய் சொல்ல தேவன் ஒரு மனிதன் அல்ல; மனம்மாற அவர் ஒரு மனுபுத்திரனும் அல்ல; அவர் சொல்லியும் செய்யாதிருப்பாரா? அவர் வசனித்தும் நிறைவேற்றாதிருப்பாரா? எண். 23:19 கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் மனிதனுக்கு இருக்கிற பிரச்சனைகள் எதுவும் தேவனுக்கு இல்லை என்பது மட்டும் நிச்சயம்.

ஏன் அப்படி என்று பார்ப்போம். மனிதன் தேவனால் அவரைப் போலவே படைக்கப்பட்டவன் தான். ஆனால் முதல் மனிதன் பாவம் செய்தபோது அவனுடைய தெய்வத்துவ தன்மையில் ஓட்டை விழுந்தது. அதனால் தேவனுடன் அவனுக்கிருந்த தொடர்பு பிரச்சனைக்குள்ளானது. மனிதன் தேவனிடமிருந்து துண்டிக்கப்பட்டான். அதனால் மனிதன் தேவனைப் போலவே படைக்கப்பட்டிருந்தும்;

தேவனுடனிருந்த தொடர்பு துண்டிக்கப்பட்டதால் தேவனைப் போல செயல்பட முடியாமல் போனது. தேவனைப்போல செயல்பட முடியவில்லை என்பதைவிட அவன், தேவனுக்கு எதிரிடையாக செயல் பட ஆரம்பித்தான் என்பது தான் பேரதிர்ச்சியான விஷயம்.

தாம் பூமியில் மனுஷனை உண்டாக்கினதற்காகக் கர்த்தர் மனஸ்தாபப்பட்டார்; அது அவர் இருதயத்துக்கு விசனமாயிருந்தது. ஆதி. 6:6 **(... it repented the Lord ... it grieved him...).** மனிதன் தன்னுடைய தெய்வத்துவத்தை இழந்துபோவதற்கு முன்னதாக அவன் எல்லா ரீதியிலும் தேவனைப் போலவே இருந்தான், செயல்பட்டான். கொடுத்த வாக்கை காப்பாற்றும் வல்லமையும் அப்பொழுது அவனிடத்தில் இருந்தது. அவனிடமிருந்த தெய்வத்தன்மை பறிபோனபோது; இந்த வல்லமையும் பறிபோனது. மனிதன் சூழ்நிலையால் தடம்மாறிப் போனாலும்; அவனை உருவாக்கிய தேவன் தடம்மாறி விடவில்லை. *"நான் கர்த்தர், நான் மாறாதவர்; ... மல். 3:6"* என்ற வார்த்தையின்படி அவர் எந்த ரீதியிலும் மாறிவிடவில்லை. வாக்குக்கொடுத்துவிட்டால் அதை மாற்றாமலிருக்கும் வல்லமையோடுதான் அவர் இன்றைக்கும் இருக்கிறார்.

அதுமட்டுமல்ல, சாப நியமம் இயங்கிக்கொண்டிருக்கிற பூலோகத்தில் மனிதன் இருக்கிறான்; ஆனால் தேவனோ ஆசீர்வாத நியமம் இயங்கிக்கொண்டிருக்கிற பரலோகத்தில் இருக்கிறார். அதனால் எந்த விதத்திலும் அவர் மனிதனைப் போல இயங்குவதில்லை, அதற்கு அவசியமுமில்லை, அது அவரால் முடியவும் முடியாது. அதுபோலவே சாபம் சூழப்பட்ட பூமியில் மனிதனாலும் தேவனைப் போல இயங்கமுடியாமல் போனது. அவனுடைய முயற்சிகள் தோல்வியிலேயே முடிந்தன. அதனால் தான் *"நாசியிலே சுவாசமுள்ள முனுஷனை நம்புவதை விட்டு விடுங்கள்; எண்ணப்படுவதற்கு அவன் எம்மாத்திரம் ஏசாயா. 2:22"* என்றார் ஏசாயா தீர்க்கதரிசி. இதை வைத்து மனிதனை மிகவும் கேவலமானவனாக, கீழ்த்தரமானவனாக கணக்குப் போட்டு விடக்கூடாது. இந்த பூமி சபிக்கப்படாமல் இருந்திருந்தால் மனிதனும் வாக்குமாறாதவனாகத்தான் இருந்திருப்பான்.

சூழ்நிலைக் கைதியான மனிதனின் வாக்குகளை நம்பி நம்பி ஏமாந்துபோய், சோர்ந்துபோய், நம்பிக்கையிழந்து, வாழ்க்கையையே இழந்து போனவர்களுக்கு தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மிகவும் ஆறுதலான விஷயம். ஏனென்றால் அவைகள் வாக்குமாறாத தேவனால் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்பதே.

வாக்குத்தத்தங்கள் எல்லாமே நாம் ஏதேனின் நன்மைகளை திரும்பவுமாக பெற்று; நன்றாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் கொடுக்கப்பட்டிருக்கின்றன. நாம் நன்றாக இருந்தால் தான் தேவனுடைய **assignment** ஐ முடிக்கமுடியும். அதனால் நாம் நன்றாக இருந்து தான் ஆக வேண்டும் என்பது கட்டாயம்! இதென்ன வம்பாய் போச்சி? எங்களுக்கு இந்த ஆசீர்வாத உபதேசமெல்லாம் வேண்டாம்; நாங்க இப்படியே இருந்துவிட்டுப் போகிறோம், ஆளை விடுங்கள் என்று ஓடப்பார்த்தால்? அது தான் நடக்காது!

நீங்கள் தேவனுடைய ஆசீர்வாத உபதேசத்திற்குள் வராவிட்டால்? ஏன்? வராவிட்டால் என்ன? என்ன நடந்துவிடப்போகிறது? இப்படியே இருந்துவிட்டுப் போகிறோம்! இப்படியெல்லாம் சொல்லி தப்பித்துக் கொள்ள முடியாது. தேவன் தன் பிள்ளை இயேசுவின் மூலமாக நமக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிற இந்த ஆசீர்வாத நியமத்திற்குள் நீங்கள் நுழையாவிட்டால் ... ? இந்த நியமத்திற்கு வெளியே கிரியை செய்துக்கொண்டிருக்கிற சாப நியமத்திற்குள்ளேயே இருப்பீர்கள். சரி, பரவாயில்லை சாப நியமத்திற்குள்ளேயே இருந்துவிட்டுப் போகிறேன். எப்படியும் செத்தால் பரலோகம் போய்விடுவேனே, பிறகென்ன? இது தான் இன்றைக்கு அநேகருடைய பாட்டாக இருக்கிறது.

இந்த பூமியில் இயங்கிக் கொண்டிருக்கும் சாப நியமத்தால் மனிதனுக்கு என்னவெல்லாம் நடந்து கொண்டிருக்கிறது என்பதை தெரிந்துக் கொள்ளுங்கள். தெரிந்து கொண்டால் நிச்சயமாக இப்படிப் பேச மாட்டீர்கள். உபா. 28: 15–68 வரையிலான வசனங்களை வாசித்துப் பாருங்கள். பூமியின்மீது இயங்கும் சாப நியமம் உற்பத்தி **(output)** செய்யும் காரியங்கள் தான் இவை. சுருக்கமாக பார்ப்போம், பூமியில் பிறக்கும் மனிதர்கள் எல்லோருமே இந்த சாபங்களுடன் ஒத்துழைத்தபடிதான் **(yielding)** வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். நிதானித்துப் பாருங்கள்... உங்களுக்கே புரியும்.

1) எந்தக் காரியத்தை செய்தாலும் அது உருப்படாமல் போவதை தோல்வியில் முடிவதை பார்க்க முடியும். 2) வாழ்வாதாரங்கள் பாதிப்புக்குள்ளாகி இருக்கும், தரித்திரம் தாண்டவமாடும், உணவு—உடை—இருப்பிடத்திற்கு கெஜ கர்ணம் போட வேண்டியதாயிருக்கும். 3) மனதில் சஞ்சலம், **(vexation)** பயம் எப்போதும் இருக்கும். 4) வியாதிகள் **(serious infectious disease)** 5) மழையில்லாமல் வறட்சி, அதனால் விவசாயம் பாதிக்கப்பட்டு பஞ்சம், விலைவாசி உயர்வு, பட்டினி, சாவு போன்றவை. 6) நிலையான குடியிருப்பு இல்லாமல் அலைந்து திரிய வேண்டிய சூழ்நிலை. குடியிருக்கும் வீட்டையும், ஊரையும் மாற்றிக்கொண்டே இருக்க வேண்டிய சூழ்நிலை. 7) மனநிலை பாதிப்படைதல், பைத்தியமாக அலைந்து திரிவது 8) உதவி செய்ய யாருமே இல்லாத நிர்ப்பந்த நிலைமை 9) பொருளாதார சீர்குலைவு, பணநஷ்டம் 10) பணம் சம்பாதிப்பதற்காக, பெற்ற பிள்ளைகளை தூரதேசங்களுக்கு அனுப்பிவிட்டு; அவர்களைப் பார்க்கக்கூட முடியாத ஏக்கத்தில் கண்கள் பூத்துப்போகும் நிலைமை! பூமியின் சாப நியமத்தால் நடக்கும் கேடுகள் என்னவெல்லாம் என்பதை இத்தனை தெளிவாக இதுவரைக்கும் யாரும் உங்களுக்குச் சொல்லியிருக்க மாட்டார்கள். இப்படிப்பட்ட மோசமான நியமத்திற்குள் தான் நாம் வாழ வேண்டுமா? தேவையா? எங்கேடோ கெட்டுப்போங்கள் என்று நான் யாரையும் விட்டுவிடப் போவதில்லை. என் அப்பாவின் பூமி இது, இதன் நிறைவு அவருடையது. எங்கப்பா சொத்து சுகங்களெல்லாம் எனக்கு எழுதி வைத்திருக்கிறார். பூமியையே நம்மை ஆளுகை செய்யச் சொல்லிக் கொடுத்திருக்கிறார். பூமியின் மனிதர்கள் எக்கேடோ கெட்டுப்போனால் யாருக்கு நஷ்டம்? அது என் பிதாவாகிய தேவனுக்கல்லவா? நஷ்டம் அவருடைய பிள்ளையான, சுதந்தரவாளியான எனக்கும் சேர்த்துதானே? அதனால் யாரையும் நாங்கள் சாப நியமத்திற்குள் விடப்போவதில்லை. முடிவு வரை போராடுவோம்... விடியும் வரை போராடுவோம்!

தேவன் யார், அவர் எப்படிப்பட்டவர்? அவர் மனிதனை உருவாக்கியதன் நோக்கம் என்ன? மனிதன் யார்? அவர் எப்படிப்பட்டவன்? அவனைக் குறித்த தேவனுடைய திட்டம் என்ன? அந்த திட்டம் எப்படி, ஏன் கெடுக்கப்பட்டது? அதைக் கெடுத்தது யார்? அதற்குப்பிறகு பூமியின் நிலைமை என்ன? மனிதனின் நிலைமை என்னவானது? இப்படிப்பட்டக் கேள்விகள் உங்கள் மனதில் தோன்றினதுண்டா? தோன்றினாலும் அதற்கு விடை காண முயற்சிப்பதில்லை. அதனால் தான் சாபத்திலிருந்து இவர்கள் வெளியே வருவதில்லை. கேள்விக்குறியான மனுக்குலத்திற்கு மீண்டும் வாழ்வு கொடுக்க தேவன் என்ன செய்தார்? சிலுவையில் இயேசு ஏன் மரித்தார்? அதனால் மனுவர்க்கத்துக்கு என்ன பிரயோஜனம்? இப்போது நம்முடைய நிலைமை என்ன? இனிவரும் காலங்களில் நாம் எப்படி இருக்கப்போகிறோம்? இந்தக் கேள்விகளுக்கும் பதிலைத் தேடியதில்லை. சாபத்துடன் சேர்ந்து **Three leg at race** ல் ஓடுகிறார்கள். நிச்சயமாக இவர்கள் ஜெயிக்கப்போவதில்லை. ஏனென்றால் சாபம் சிலுவையில் தோற்கடிக்கப்பட்டு விட்டது. தோற்றுப்போன சாபத்துடன் சேர்ந்து கால்களை கட்டிக்கொண்டு ஓடினால் எப்படி ஜெயிக்க முடியும்?

கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷ ஒளி உலகம் முழுவதும் பிரகாசித்தாலும்; அதைப் பார்க்காமல் இன்னமும் நியாயப்பிரமாண கிரியைகள் மூலமாகவே சாப வெள்ளத்தில் எதிர் நீச்சல் போடுகிறார்கள். நியாயப்பிரமாண கிரியைக்காரர்கள் இன்னமும் சாபத்திற்குள்ளாகத்தான் இருக்கிறார்கள் என்று வேதம் வெளிப்படையாக அறிவித்திருந்தும் அதைப் பார்க்க முடியாதபடி குருட்டுக் கண்களுடன் இருக்கிறார்கள். நியாயப்பிரமாணத்தை இயேசு கிறிஸ்து சிலுவையில் முடித்து விட்டுத்தான் விசுவாச பிரமாணத்தை துவக்கி வைத்தார் என்பதை வேதம் தெளிவாக தெரிவித்திருந்தும் அதைப் பிடித்துக்கொண்டு தொங்குகிறார்கள். இப்படியெல்லாம் செய்வது தேவனையே எதிர்த்து நிற்பது போலாகாதா? தேவனை எதிர்க்க முடியுமா உங்களால்? கொஞ்சம் யோசனை பண்ணிப் பாருங்களேன்.

எதையுமே யோசிக்காமல் எடுத்தோம், கவிழ்த்தோம், இது செழிப்பின் உபதேசம் என்று சொல்லி **file** ஐ மூடாதீர்கள். ஜனங்களெல்லோரும் செழிப்பின் உபதேசத்திற்குள் போய்விட்டால் தன்னுடைய கதை முடிந்துவிடும் **(chapter close)** என்பது சாத்தானுக்குத் தெரியுமே. தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காகவும், தொடர்ந்து பூமியின் ஜனங்களை மோசம் போக்கிக்கொண்டே இருக்க வேண்டும் என்பதற்காகவும் தேவனுடையத் திட்டங்களை கெடுக்க வேண்டும் என்பதற்காகவும் சாத்தான் போட்ட திட்டம் தான் இது. கிறிஸ்துவின் மகிமையான சுவிசேஷத்திற்கு செழிப்பின் உபதேசம் என்று பெயர் சூட்டிவிட்டான். செழிப்பின் உபதேசத்திற்குள் போகாதீர்கள் என்று நோட்டீஸ் அடித்து சபைக்குள்

அனுப்பி விட்டான். இப்போது அந்த நோட்டீஸ் தன் வேலையைக் காட்டி வருகிறது. சபை விசுவாசிகள் துண்டைக் காணோம், துணியைக் காணோம் என்று ஓடிக்கொண்டிருக்கிறார்கள். செழிப்பின் உபதேசம் என்றாலே பணம் ... அதைச் சார்ந்த ஆடம்பர வாழ்க்கை ... ஆடம்பர வாழ்க்கையுடன் சேர்ந்த பாவங்கள் என்ற படத்தை மனதிற்குள் மாட்டிவிட்டான். செழிப்பு என்றால் பணம் என்பதல்ல அர்த்தம்; நன்றாக இருப்பது என்று தான் அர்த்தம். மனிதனை, தேவன் தன்னைப் போலவே படைத்திருப்பதால்; அவன் தன்னைப் போலவே நன்றாக, ஒரு குறைவும் இல்லாமல், சந்தோஷமாக, சுகமாக, ஐசுவரியத்துடன், பரிசுத்தமாக வாழ வேண்டும் என்று விரும்புகிறார். இதில் தவறு எதுவும் இருக்க முடியாது. நம் பிள்ளைகள் எல்லா விதத்திலும் ஒரு குறைவுமில்லாமல் நன்றாக வாழ்ந்து சுகித்திருக்க வேண்டும் என்று நாமே நினைக்கும்போது; தேவாதி தேவன் தன்னுடைய சிருஷ்டிப்பின் சிகரமாகிய மனிதன் மேலே இப்படிப்பட்ட உயர்ந்த நோக்கம் வைத்திருப்பாரானால் நிச்சயம் அது வரவேற்கத்தக்கதே.

இந்தப் பூமியில் பிறக்கிற ஒவ்வொரு மனிதனும் சாப நியமத்திற்குள்ளாகத்தான் பிறக்கிறான், வாழ்கிறான். ஆதாம் தேவனுக்குக் கீழ்படிந்து; அவர் வார்த்தைக்கேற்றபடி நடந்துக்கொண்டிருந்த காலக்கட்டம் வரையிலும் பூமியில் ஆசீர்வாத நியமம் தான் வேலை செய்து கொண்டிருந்தது. ஆதாம் என்றைக்கு சாத்தானின் வார்த்தையைக் கேட்டு, அதன்படி நடக்க ஆரம்பித்தானோ அந்த வினாடியிலேயே பூமியின் மீது இயங்கிக்கொண்டிருந்த ஆசீர்வாத நியமத்தின் மேல் வெடிப்பு விழுந்தது. அதன் வழியாக பூமியின் ஐசுவரியங்களெல்லாம் வழிந்து வீணாக ஆரம்பித்தது. **Principle**-ல் பிரச்சனை ஏற்பட்டபோது; அதைச் சார்ந்து இயங்கும் காரியங்களிலும் பிரச்சனைகள் தோன்றின. உலகமே நாசமாகிப் **(collapse)** போனது. அதற்குப் பிறகு, இந்தப் பூமி சாத்தானின் வார்த்தையினால் கெடுக்கப்பட்ட **Principle**-படி தான் இயங்கி வருகிறது. ஏனென்றால் வேறு வழி இல்லை. **No!** இந்த பயங்கர நியதிக்குட்பட்டு என்னால் இனிமேல் வாழ முடியாது. நான் வெளியே வந்தாக வேண்டும், எனக்கு விடுதலை தேவை... அதற்கு என்ன செய்வது?

## *என்ன செய்வது?:*

அதைத்தான் இங்கே பார்க்கப் போகிறோம். எந்தவொரு கிரியையானாலும் சரி அதற்கென்று நியமிக்கப்பட்டிருக்கிற நியமத்தின்படிதான் அது இயங்கியாக வேண்டும்; இது ஒரு பௌதிக விதி. அதாவது சாபம் என்பது ஒரு பிரமாணம் **(law, principle)**. இயற்கையில் நாம் எத்தனையோ விதமான விதிகளைப் பார்க்கிறோம். தூக்கியெறியப்பட்ட ஒரு கல் கீழ் நோக்கித் தான் வருகிறது; இது புவியீர்ப்புவிசை என்ற ஒரு பௌதிக விதி. இந்த விதி மாறுவதில்லை. கண்டிப்பாக மாற்றித்தான் ஆக வேண்டுமென்றால் புவியீர்ப்பு விசைக்கு எதிரிடையான ஒரு விசையை இயங்க வைக்க வேண்டும். ஆகாய விமானம், இவ்விதமாகத்தான் இயங்குகிறது.

அதைப்போலவே பூமியின் சாப நியமம் நம்மைத் தொடாதபடி, நமக்கென்று தேவனால் சிலுவையில் ஏற்படுத்தப்பட்ட ஆசீர்வாத நியமத்தின்படி நம்மால் வாழ முடியும் என்பதே இந்த நற்செய்தி. இது நாள் வரை நீங்கள் கேட்டுக்கேட்டு அலுத்துப் போன, சலித்துப்போன, புளித்துப்போன, பிரசங்க குறிப்பேடுகளிலும் உள்ள அந்த செய்திகளைப் பற்றி விமரிசனம் செய்து கொண்டிருப்பதால் ஆகப்போவது ஒன்றுமில்லை. அவைகளெல்லாம் நம்முடைய தேடல்கள்! மட்டுமே. பூர்வ பாதைகளை கண்டுபிடிக்க நாம் கடந்து வந்த பாதையின் மைல் கற்கள்! நாம் மீண்டும் ஆசீர்வாத நியதிக்குள்ளாக வாழ்வதற்கான வேலைகளைத்தான் இயேசு சிலுவையில் செய்து முடித்தார் தன் இரத்தத்தை சிந்தி. சாப நியம பூமியில் நாம் ஆசீர்வாத நியமப்படி வாழ முடியும், தாமரையிலையும் குளமும் போல. அழுக்கடைந்த குளத்தில் வளர்ந்திருக்கும் தாமரையில் குளத்தின் தண்ணீர் ஒட்டுவதில்லை. நீர் மட்டம் உயர்ந்தாலும் ஒட்டாது; ஸ்பிரிங் போல சுருண்டிருக்கும் தாமரையின் தண்டுப்பகுதி நீர்மட்டத்திற்கேற்ப உயர்ந்து விடும்.

ஆனால் கோடானுகோடி தேவபிள்ளைகள் சிலுவையில் என்ன நடந்தது என்பதையே புரிந்து கொள்ளாமல், இன்னும் சாப நியமத்தின்படியே ஓடிக்கொண்டிருக்கிறார்கள், வாழ்க்கை ஓட்டத்தையும் முடிக்கிறார்கள். வாழ்க்கையில் பாடுகள் இருந்தால் என்ன? செத்தால் பரலோகம் போய் விடுகிறோமே, அது போதாதா? என்று திருப்தியடைந்து விடுகிறார்கள். சபை விசுவாசிகளின் இந்த மனப்பாங்கு

(mindsetting) தான் சாத்தான் புகுந்து விளையாட வாசல்களைத் திறந்து போடுகிறது. இயேசுகிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு, இரட்சிக்கப்பட்டிருக்கிறேன் என்று சொல்லிக்கொண்டு, ஞானஸ்நானம் பெற்றுக்கொண்டு, பரிசுத்தாவியின் அபிஷேகம், அந்நியபாஷை ... இது போதும் என்று திருப்தியோடு வாழ்ந்து முடித்து விடுகிறார்கள்.

இப்படிப்பட்டவர்கள் சாகும் வரையிலும் நியாயப்பிரமாணத்தைவிட்டு வெளியே வருவதில்லை. நியாயப்பிரமாண கிரியைகளை செய்து, கெஜகர்ணம் போட்டு வாழ்க்கையை உருட்டுகிறார்கள். இவர்களுக்காக பவுல் ஜெபிக்கிறார்: *தாம் கிறிஸ்துவை மரித்தோரிலிருந்து எழுப்பி, அவரிடத்தில் நடப்பித்த தமது பலத்த சத்துவத்தின் வல்லமைப்படியே விசுவாசிக்கிறவர்களாகிய நம்மிடத்திலே காண்பிக்கும் தம்முடைய வல்லமையின் மகா மேன்மையான மகத்துவம் இன்னதென்றும், நீங்கள் அறியும்படிக்கு, அவர் உங்களுக்கு பிரகாசமுள்ள மனக்கண்களைக் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொள்கிறேன். எபே. 1:19*

நாம் நன்றாக இருக்க வேண்டும் என்பதற்காக தன் பிள்ளையையே நம் பாவம் போக்கும் பலியாக தந்தார். பாவத்தை மட்டுமல்ல, சாபம், வியாதி, தரித்திரம், இன்னும் இச்சையினால் இந்த பூமியின் மேல் தோன்றின சகல நாச மோசங்கள், கேடுகளிலிருந்தும் நாம் விடுதலையாக வேண்டுமென்றே இயேசுவை பிதாவாகிய தேவன் பூமிக்கு அனுப்பினார். பிதாவின் விருப்பப்படியே நாம் அவைகளிலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். கவனியுங்கள்: நாம் பாவத்திலிருந்து "விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம்". என்றைக்கு நாம் இரட்சிப்பின் சுவிசேஷம் கேட்டு இயேசுவை சொந்த இரட்சகராக இருதயத்தில் ஏற்றுக்கொண்டோமோ அன்றே நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு விட்டோம் என்பதைத் திட்டவட்டமாக வேதம் அறிவிக்கிறது. விடுதலையாகலாம் என்றல்ல, விடுதலையாகிக்கொண்டே இருக்கிறோம் என்றும் அல்ல, விடுதலையாகலாம், முயற்சி செய்யலாம், விடாப்பிடியாக உபவாசம் இருந்து அழுது அழுது ஜெபித்துக்கொண்டே இருந்தால் விடுதலையாகலாம், இந்த கதையெல்லாம் இங்கே செல்லுபடியாகாது. வேதம் ஒரே வார்த்தையில் அடித்துச் சொல்லுகிறது விடுதலையாக்கப்பட்டுவிட்டோம் என்று. நன்றாய் கவனியுங்கள்...

*பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். ரோமர். 6:18.* நாம் இயேசுவை ஏற்றுக் கொள்வதற்கு முன்னதாக பாவத்திலிருந்து விடுதலையாக்கப்படாமல் இருந்தோம். அதனால் பாவம் செய்யாமல் தப்பித்துச் செல்ல நம்மால் முடியாமல் போனது. கதவைத் திறந்து உள்ளே விட்டோம்; அது (பாவம்) உள்ளே நுழைந்து நம்மை ஆளுகை செய்தது, தலையில் ஏறி உட்கார்ந்து மசாலை அரைத்தது, நம்மை ஒரு வழியாக்கியது. ஆனால் இன்றோ... நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு விட்டோம்; அப்படியிருந்தும் இன்னமும் பாவம் செய்கிறீர்கள் என்றால் ... ? சத்தியம் தெரியவில்லை என்று அர்த்தம். உயிர்த்தெழுந்த இயேசு நமக்குள் வந்தபோது நமக்குள் என்ன நடந்திருக்கிறது என்பது தெரியாமல் போனது. சாத்தான் அதை இரகசியமாக்கி விட்டான்; நமக்கே தெரியாமல். சாத்தானின் கில்லாடித்தனங்களைக் கவனித்து குறிப்பெடுத்துக்கொண்டே வாருங்கள். அவனையும் அவனுடைய கிரியைகளையும் அழிக்க அது உதவியாக இருக்கும்.

நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு விட்டோம் என்பது இப்போது தெரிந்து விட்டதால்; இனி மேல் பாவம் ஒரு பிரச்சனையாக இருக்காது. பாவம் நம்மை மேற்கொண்டு ஜெயிக்காதபடி நம்மை நாம் பாதுகாத்துக் கொள்ள முடியும். அதாவது பாவம் செய்யாமல் வாழ முடியும், பரிசுத்த ஜீவியம் செய்ய முடியும். பரிசுத்த ஜீவியத்தை பற்றி செய்யப்பட்ட எத்தனையோ பிரசங்கங்கள்; இந்த சத்தியத்தைச் சொல்லாத காரணத்தினால் விழலுக்கு இரைத்த நீராய் போய்விட்டன.

## பாவம் செய்யாமல் வாழ முடியுமா?:

முடியும் என்பது தேவனுடைய ஆவியானவரின் திட்டவட்டமான பதில். முடியாது என்று சொல்வோமானால் பாவப் பரிகாரியான இயேசு பூமியில் வந்து பிறந்து, மரித்து உயிர்த்தெழுந்ததற்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமே? முதல் ஆதாமின் பாவத்தினால் மனுக்குலத்திற்கு நேரிட்ட அநீதியை

அநியாயத்தை துடைத்து விட்டுத்தான் இயேசு பரலோகத்திற்குப் போனார். பிதாவின் திட்டத்தை நிறைவேற்றிவிட்டுத்தான் போனார். பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலை நமக்குள் ஏற்படுத்திவிட்டுதான் போனார். இந்த இரகசியம் தெரியாமல் போனதால், மனிதனால் பாவம் செய்யாமல் இருக்க முடியாது என்று தவறாக நினைத்துக் கொண்டோம். அந்த நினைப்பை நமக்கு உதவியாக வைத்துக் கொண்டு பாவம் செய்தோம், பாவம் செய்துகொண்டே இருக்கிறோம். இனி மேல் அப்படியெல்லாம் சாக்குப்போக்குச் சொல்ல முடியாது. பாவம் செய்யாமல் இருக்கக்கூடிய ஆற்றல் நமக்குள் இருக்கிறது என்ற இரகசியத்தை அறிந்து கொண்டால்; அதற்குப் பிறகு பாவம் நம்மை மேற்கொள்ளாது **(overcome)**; அதாவது பாவத்தால், நம்மைத் தோற்கடிக்க முடியாது.

*அறியாமையுள்ள காலங்களைத் (சத்தியம் தெரியாமலிருந்த காலகட்டம் – நியாயப்பிரமாணத்திற்குட்பட்ட கால கட்டம்) தேவன் காணாதவர் போலிருந்தார்; இப்பொழுதோ (சத்தியம் தெரிந்த பிறகு – சிலுவையில் நமக்காக என்னென்ன செய்யப்பட்டது என்ற இரகசியம் தெரிந்த பிறகு) மனந்திரும்ப வேண்டுமென்று எங்குமுள்ள மனுஷரெல்லாருக்கும் கட்டளையிடுகிறார். அப். 17:30.* இக்காலம் அறியாமையுள்ள காலம் அல்ல, அறிவுள்ள காலம்! *... முடிவு கால மட்டும் இந்த வார்த்தைகளைப் புதைபொருளாக வைத்து, ... முத்திரை போடு: அப்பொழுது அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள், அறிவும் பெருகிப்போம் என்றான். தானி. 12:4*

நமக்கு சத்தியம் வெளிப்பட்டுவிட்ட இந்த அறிவுள்ள காலகட்டத்தில், தேவன் காணாதவர் போல் இருப்பதில்லை. அதனால் நாம் மனம் திரும்பித்தான் ஆகவேண்டும், நமக்குள் இருக்கிற பாவம் செய்யாமலிருக்கக்கூடிய ஆற்றலை இயக்கித்தான் ஆக வேண்டும். நாம் என்ன சாதாரண மனுஷங்கதானே? மாம்ச பலவீனம், வயசுக்கோளாறு, சாத்தான் என்னை இழுத்துப் போட்டுவிட்டான் ... இந்த சாக்குப் போக்குகளை சாக்குக்குள் போட்டு தைத்து கடலுக்குள் அமிழ்த்திவிடுங்கள். (முடியாதவர்கள் தூத்துக்குடிக்கு வாங்க, நாங்கள் உதவி செய்கிறோம் (?) கடலுக்குள் உருட்டி விடத்தான்!).

பாவம் சந்தர்ப்பத்துக்காக காத்திருக்கிறது; பூமியின் சாப நியமம் பாவங்களை பிரசவித்துக் கொண்டே இருக்கிறது. நம்மை நெருக்கி நிற்கும் பாவங்கள் நம்முடைய சிந்தனை வழியாக கடந்து போகிறது. நாம் அனுமதிக்காத பட்சத்தில் நம்மை அது மேற்கொள்வதில்லை. எனக்கே தெரியாது, எப்படி இது நடந்தது என்றெல்லாம் சொல்லி காதில் பூ சுற்ற முடியாது. தேவனை அறியாத உலக மனிதர்கள் இப்படிச் சொன்னால் பரவாயில்லை, அதை ஏற்றுக் கொள்ளலாம். ஏனென்றால் அவன் உண்மையைத்தான் சொல்லுகிறான்! அவன் இயேசுவை ஏற்றுக் கொள்ளாமல் இருப்பதால் பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலை பெற்றுக் கொள்ளாமல் இருக்கிறான். அவனைப் போலவே நாமும் சாக்குப்போக்கு சொல்லிக்கொண்டிருப்போமென்றால் கிறிஸ்து மரித்தது வீணாயிருக்குமே! பிதாவாகிய தேவன் ஏதோ வேலையில்லாமல் தன்னுடைய பிள்ளையை நேரப்போக்குக்காக அனுப்பவில்லை, நம்முடைய தேவன் திருவிளையாடல்களை நடத்துபவரும் அல்ல! அந்த விளையாட்டுகளுக்கெல்லாம் சொந்தக்காரன் ஒருவன் இருக்கிறான்; அவன் யார் என்று தான் உங்களுக்குத் தெரியுமே!

## நமக்குள் இருக்கிற பாவம் செய்யாமலிருக்கக்கூடிய ஆற்றலை இயக்குவது எப்படி?:

இந்த இரகசியத்தை தெரிந்து கொண்டதுமே அது நமக்குள் வேலை செய்ய ஆரம்பிக்கிறது. *சத்தியத்தை அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்... யோவான். 8:32.* நமக்குள் கிறிஸ்துவின் சிலுவைப் பாடுகளின் மூலம் என்ன நடந்திருக்கிறது என்ற உண்மையை அறிந்து கொண்டாலே போதும்; அதற்குப் பிறகு பாவத்தால் நம்முடைய தலை மேல் ஏற முடியாது; பாய்ச்சா காட்ட முடியாது.

இரட்சிக்கப்பட்டு, பரிசுத்தாவியானவரின் அபிஷேகம் பெற்று, ஞானஸ்நானம் எடுத்து, அந்நிய பாஷை பேசி, வரங்கள் செயல்பட, ஊழியமும் செய்து கொண்டிருக்கும் தேவபிள்ளைகள் இன்னமும் பாவத்திலேயே வாழ்ந்து கொண்டிருப்பதன் இரகசியம் என்ன? அது ஒன்றும் பெரிய சிதம்பர இரகசியம்

அல்ல, அவர்கள் தேவ இரகசியத்தை அறிந்து கொள்ளாததினால் தான். நாம் யார்? நமக்கு சிலுவையின் மூலம் என்னவெல்லாம் கொடுக்கப்பட்டிருக்கிறது? அதை வைத்து நாம் என்னவெல்லாம் செய்ய முடியும் என்ற அறிவு நமக்குள் வந்து விடுமானால்; நிச்சயமாக நாம் பாவம் செய்ய மாட்டோம், செய்ய முடியாது, பாவம் செய்யக் கூடிய சூழ்நிலை வந்தாலும் அதிலிருந்து தப்பித்து ஓடி வந்து விடுவோம்.

இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, அவர் நம் இருதயத்திற்குள் வந்த பிறகும் பாவம் செய்யாமல் இருக்க முடியவில்லையே என்று இரகசியமாக கவலைப்பட்டுக் கொண்டு இருப்பவர்களுக்கு: (இந்தக் கவலையை இரகசியமாகத்தான் வைக்க வேண்டியதாக இருக்கிறது. வெளிப்படையாகக் கவலைப்பட்டால் சுற்றியிருப்பவர்களுக்கு விஷயம் தெரிந்து விடுமே!) பிரசங்க மயக்கம் (பிரசங்க போதை) இதற்கு ஒரு முக்கிய காரணமாக இருக்கிறது. பிரசங்கிக்கிறவர் யாராக இருந்தாலும் சரி, அவர் எதைப் பிரசங்கித்தாலும் சரி, அது வேதத்தினடிப்படையில் சரியானது தானா என்று பரிசீலனை செய்யாமல் **(check –** தணிக்கை செய்யாமல்) அப்படியே ஏற்றுக் கொண்டு விடுவது. இது பெரும்பாலும் சபைகளில் நடந்து வருகிற ஒரு காரியம் தான். பிரசங்கியார் மிக நன்றாக, அழகான வார்த்தைகளின் கோர்வையோடு, கேட்டுக்கொண்டே இருக்கலாம் என்று தோன்றும் அளவுக்கு, நாற்காலியின் நுனிப்பகுதிக்கு உடலை நகர்த்திக்கொள்ளும் அளவுக்கு பிரசங்கம் செய்கிறார், நல்லது தான். ஆனால் சத்தியம் முழுமையாக வெளிப்படாத, அல்லது சத்தியம் மறைக்கப்பட்ட, எதுகை மோனையோடு கூடிய பிரசங்கங்களால் யாருக்கு என்ன பிரயோஜனம்? இது விசுவாசிகளைக் களைப்படைய செய்துவிடுகிறது.

*"... நீங்களும், உங்களைப் பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாகவும் எண்ணிக் கொள்ளுங்கள்* ***(consider, think seriously about...)*** *ரோமர். 6:11."* நாம் பாவத்திற்கு மரித்துவிட்டோம் என்ற சத்தியத்தை மனதிற்குள் போட்டு அசை போட வேண்டும், அதைப் பற்றியே யோசிக்க வேண்டும். இப்போதே யோசிக்கத் துவங்குங்கள். முன்பு, நாம் பாவத்திற்கு மரித்திருக்கிறோம் என்ற சத்தியம் தெரியாத காலங்களில் இதைப் பற்றி யோசித்ததில்லை, யோசிக்கவும் முடியாது. அதாவது நம்முடைய ஆவி செத்துப் போன நிலைமையில் இருந்தது. அதாவது நம்முடைய உள்ளான மனிதன் பிரேதமாக இருந்தான்! செத்த பிரேதத்தினால் எந்த விதமான கிரியைகளையும் நடப்பிக்க முடியாது.

இரட்சிக்கப்பட்ட பிறகும் சத்தியம் தெரியாததினால், ஆவிக்குரிய ரீதியில் செத்த நிலைமையில் இருக்கும் ஒரு மனிதனிடம் பரிசுத்தத்தை எதிர்பார்ப்பது ஒரு முட்டாள்தனமான காரியம். எவ்வளவுதான் அவனுக்கு புத்திமதிகளைச் சொன்னாலும், வேத வசனத்தின் அடிப்படையில் பிரசங்கங்களைப் பண்ணினாலும் அது அவனுடைய ஆவி மனிதனின் காதுகளில் ஏறப்போவதில்லை. *"ஜென்ம சுபாவமான மனுஷனோ தேவனுடைய ஆவிக்குரியவைகளை ஏற்றுக்கொள்ளான்; அவைகள் அவனுக்கு பைத்தியமாகத் தோன்றும்; அவைகள் ஆவிக்கேற்ற பிரகாரமாய் ஆராய்ந்து நிதானிக்கப்படுகிறவைகளானதால், அவைகளை அறியவுமாட்டான். (1 கொரி. 2:14)"* ஏனென்றால் செத்த மனிதனுக்கு காது கேட்காது! ஆனால் ஒன்று நடக்கிறது; பிரசங்கம் சரீரத்தில் இருக்கும் மாம்சீக காதுகள் மூலமாக மூளையைச் சென்று அடைகிறது. மூளை கிரகிக்கும் காரியங்களை வைத்து ஐம்புலன்களின் அடிப்படையில் பாவம் செய்யாமல் இருக்க முயற்சிகள் எடுக்கிறான். அதாவது நியாயப்பிரமாணம் சார்ந்து கிரியைகளினால் நீதிமானாக முயற்சிக்கிறான். அது முடியாது என்பதால் பாவங்களை இரகசியமாக்கி விடுகிறான்! அதாவது மனதிற்குள் அசைபோடுகிறான், அல்லது திரைமறைவில் யாருக்கும் தெரியாமல் பாவங்களைச் செய்கிறான்! *"இப்படிப்பட்ட ஞானம் பரத்திலிருந்து இறங்கி வருகிற ஞானமாயிராமல், லௌகிக சம்பந்தமானதும், ஜென்மசுபாவத்துக்குரியதும், பேய்த்தனத்துக்கடுத்ததுமாயிருக்கிறது. யாக். 3:15"*

தான் யார்? தனக்கு என்னென்ன கொடுக்கப்பட்டிருக்கிறது? அதை எப்படி எடுக்கலாம்? அதை வைத்து என்னென்ன செய்யலாம்? என்பதைத் தெரிந்து கொண்டாலே போதும்... பாவம் செய்ய மாட்டோம்? செய்யவும் முடியாது. ஒரு ஐசுவரியவானுடைய குழந்தையை சில சமூக விரோதிகள் கடத்திச் சென்று விடுகிறார்கள். அந்தக் குழந்தையை வளர்ந்து தங்களுடைய

குலத்தொழிலுக்கு அவனை பழக்கப்படுத்துகிறார்கள். அந்த குலத்தொழில்? பிச்சை எடுப்பது தான்! தான் யார் என்று தெரியாததினால் அந்த சிறுவன் பிச்சை எடுத்துத் தெருவில் திரிந்தான். ஒரு நாள் அவன்மேல் அக்கறையுள்ள ஒருவர் **(well-wisher)** மூலமாக அவனுடைய பிறப்பைப் பற்றிய ரகசிய தகவல் வருகிறது. அந்தத் தகவல் உண்மைதானா என்பதை பல வழிகளில் தீர விசாரிக்கிறான் **(searching)** நிச்சயமான, உறுதியான, உண்மையான தகவல்கள் அவனுக்கு கிடைக்கின்றன. அவன் கேள்விப்பட்டது 100 % உண்மைதான் என்ற அறிந்தவுடன் அதிர்ச்சி + சந்தோஷம் + பரவசம் அடைகிறான். இதுவரையில் சோகத்துக்கு மட்டும் துணைபோய்க் கொண்டிருந்த கண்ணீர் ஆனந்தப்பெருக்கெடுத்தது! அவனுக்கு தான் யார் என்று தெரியும் வரையில் பிச்சையெடுப்பது அவனுக்குப் பிரச்சனையாக இல்லை, அதற்காக அவன் வெட்கப்படவோ, வேதனைப்படவோ இல்லை. தினமும் அது ஒரு வழக்கமான வேலையாக **(customery)** இருந்தது. ஆனால் தான் யார் என்று அறிந்து கொண்ட பிறகு ... ? தன்னுடைய அழுக்கடைந்த கந்தல் உடையையும், துர்நாற்றத்தையும், திருவோட்டையும் பார்க்கும் போதே அவனுக்கு குமட்டிக்கொண்டு வந்தது. அந்த நிமிஷம் முதல் அவன் பிச்சையெடுக்கவில்லை, அவனால் பிச்சையெடுக்க முடியவில்லை. தாங்கமுடியாத பசி, என்றாலும் பிச்சை எடுக்கவில்லை. வழக்கமான நபர்கள் அவன் கேட்காமலேயே அவனுக்கு பைசா கொடுத்த போதிலும் அவன் வாங்கவில்லை, வேண்டாம் என்று சொல்லி மறுப்புத் தெரிவித்துவிட்டு வேகமாக நடையைக் கட்டினான். அதற்குப் பிறகு அவன் வழக்கமாக பிச்சையெடுக்கும் தெருக்கள் பக்கம் அவன் வரவேயில்லை! அந்த திசைபக்கமே தலைவைத்துப் படுக்கவில்லை.

அதுமுதற்கொண்டு தன்னுடைய ஐசுவரியவானாகிய தகப்பனாரைத் தேடிக் கண்டுபிடித்து; அவருடைய சொத்துக்களுக்கு வாரிசுரிமை பெறுவதையே தன்னுடைய நோக்கமாக்கிக் கொண்டான். தகப்பனை தேடிக்கண்டுபிடிப்பதில் எத்தனையோ சிரமங்கள், தடைகள் வந்தது தான். என்றாலும் பொறுமையாக, விடாப்பிடியாக முயற்சி செய்தான். தான் யார் என்ற இரகசியம் எந்த சூழ்நிலையிலும் மீண்டும் அவன் பிச்சையெடுத்துவிடாதபடி அவனைப் பாதுகாத்தது. மட்டுமல்ல அவனுடைய தகப்பனை அடைந்து, அவரிடமிருந்து சொத்துரிமையை பெற்றுக் கொள்வதற்கேதுவாக அவனை உந்தித் தள்ளியது. முடிவில் தன்னுடைய குறிக்கோளில் வெற்றி பெற்றான், தன்னுடைய தகப்பனை கண்டுபிடித்தான், தானும் ஐசுவரியவானானான், அநேகரை ஐசுவரியவான்களாக்கினான்!

நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்ற சத்தியத்தை அறிந்து கொண்ட தேவபிள்ளையால் (இரட்சிக்கப்பட்ட நபர்) நிச்சயமாக பாவம் செய்ய முடியாது. நம்மை பரிசுத்தவான்கள் என்று வேதம் அழைக்கும்போது; நாம் பாவம் செய்வது எப்படி? என்னை நீதிமான் என்று வேதம் சொல்ல, நான் எப்படி அநீதிக்குத் துணை போக முடியும்? பாவத்திலிருந்து மாத்திரமல்ல நாம் வியாதியிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம், தரித்திரத்திலிருந்தும் விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். முதல் மனிதனின் பாவத்தால் சாபத்துக்குள்ளான பூமியின் சகல சாபக்கேடு களிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். இச்சையினால் பூமியின் மீது உண்டான சகல கண்றாவிகளிலிருந்தும் விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம். முடிவாகச் சொல்லப்போனால் நாம் விடுதலையாகாத எந்த விஷயமும் இந்த பூமியில் இல்லை. இல்லவே இல்லை... சகலமும் நம் கால்களுக்குக் கீழ்ப்பட்டு தான் இருக்கிறது! (நாம் நடக்கும்போது பூமி நம் கால்களுக்கு கீழ் தான் இருக்கிறது; நம் தலை பூமியை தொடுவதில்லை!) இந்த சத்தியத்தை நாம் தெளிவாக உணர்ந்து கொள்வோமானால் பாவம் செய்ய மாட்டோம் என்பதே இங்கு அடித்துக் கூறப்படும் வேத சத்தியம்!

இங்கிலாந்து நாட்டைச் சேர்ந்த 47 வயதான "சைமன் கான்சிக்" என்பவர் ஒரு நிறுவனத்தில் கணக்காளராக இருக்கிறார். வானிலை ஆராய்ச்சி நிலையம் அளிக்கும் வானிலை அறிக்கையை இவர் தினமும் கேட்பது வழக்கம். ஒரு நாள் கூட வானிலை ஆராய்ச்சி நிலையம் அறிவிப்பதைப் போல பெரும்பாலும் நடப்பது கிடையாது! இன்று பனி கொட்டும் என்று அறிவிக்கும் நாளில் வெயிலடிக்கும். வெயில் என்று அறிவிக்கும் நாட்களில் மழை கொட்டும்! மழை கொட்டும் என்று அறிவிக்கும் நாட்களில் வெயில் கொளுத்தோ கொளுத்து என்று கொளுத்தும்... இப்படிப்பட்ட தவறான வானிலை அறிக்கைகளினால் மனம் வெறுத்து போன கான்சிக் ஒரு வானிலை ஆராய்ச்சி நிலையத்தையே தனக்குச் சொந்தமாக வாங்கிவிட்டார்!

தன் வீட்டுக் கூரை மீது வெப்பமானியை வைத்து; அதைக் கம்ப்யூட்டருடன் இணைத்து விட்டார். தினமும் 3 நிமிடத்திற்கு ஒரு முறை வானிலை நிலவரத்தை தயார் செய்து அதை அறிவித்து வந்தார். அந்த அறிக்கை மிக துல்லியமாக இருந்தது! இதனால் **North Yarkshire** விவசாயிகள் வானிலை ஆராய்ச்சி நிலையம் தரும் அறிக்கைகளைக் கேட்பதையே நிறுத்தி விட்டார்கள். அதற்குப் பதிலாக கான்சிக்கின் வானிலை அறிக்கையைக் கேட்டு அதன்படி நடந்து வருகிறார்கள். இதனால் வானியல் சூழ்நிலைக்கேற்றபடி விவசாய நடவடிக்கைகளை எடுக்க இவர்களால் முடிகிறது. மனஅழுத்தம், அலைச்சல், அவசரம், பரபரப்பு, காலவிரயம், பணவிரயம் போன்றவை அந்தப் பகுதியில் வெகுவாகக் குறைந்து போனது.

**Attention please!** இயேசுகிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, முழுகி ஞானஸ்நானம் எடுத்து, பரிசுத்தாவியானவரின் அபிஷேகத்துடன், அந்நியபாஷை அடையாளத்துடன், வரங்களுடன் ஊழியம் செய்கிறோம் தான். மறுக்கவில்லை, அது மிகவும் நல்லது. கண்டிப்பாகச் செய்ய வேண்டும். என்றாலும் இன்றளவும் பாவம் செய்கிறோம், செய்யாமல் இருக்க முடியவில்லை, அதனால் இரகசியமாகச் செய்கிறோம்; யாருக்கும் தெரிந்துவிடக்கூடாது என்பதற்காக! சபை விசுவாசிகளின் வாழ்க்கையில் அன்றிலிருந்து இன்று வரையிலும் இது ஒரு தீர்வு செய்யப்படாத பிரச்சனையாகவே இருந்து வருகிறது.

இன்றைக்கு சபையில் செய்யப்படுகிற பிரசங்கங்களும், கேட்கப்படுகிற பிரசங்கங்களும் தவறான வானிலை அறிக்கையின் ரீதியில் தான் இருக்கின்றன. சபையில் போதிக்கப்படுகிற நியாயப்பிரமாணம் சார்ந்த பிரசங்கங்கள் சபை விசுவாசிகளின் பிரச்சனைகளை தீர்க்கும் வல்லமையை இழந்தவைகள். கேட்பதற்கு நன்றாகத்தான் இருக்கும்; ஆனால் நான் நடைமுறைக்குக் கொண்டு வர முடியாது. ஏன்? எதற்கு? எப்போது? எப்படி? என்ற கேள்விகளுக்கு அவைகளால் பதிலைக் கொண்டு வர முடியாது. மழை என்பார்கள்... வெயிலடிக்கும், உஷ்ணம் என்பார்கள், பனி இறங்கும்! அது அப்படித்தான்; இயேசு சிலுவையில் செயலிழக்க வைத்த பிரமாணத்தை **(Law)** மீண்டும் இயக்க முயற்சித்தால்... அது அப்படித்தான் இருக்கும்!

*... தீர்க்கதரிசிகள் என் நாமத்தைக் கொண்டு பொய்யாய்த் தீர்க்கதரிசனஞ் சொல்லுகிறார்கள். நான் அவர்களை அனுப்பினதுமில்லை, அவர்களுக்கு கற்பித்ததுமில்லை, அவர்களோடே பேசினதுமில்லை அவர்கள் கள்ளத் தரிசனத்தையும், கள்ள சகுனத்தையும், இல்லாத விசேஷத்தையும், தங்கள் இருதயத்தின் கபடத்தையும், உங்களுக்கு தீர்க்கதரிசனமாய்ச் சொல்லுகிறார்கள். எரே. 14:14.*

***a false vision and divination, and a thing of nought, and the deceit of their heart.***

அதாவது செயலிழந்த பேட்டரியை (தீய்ந்து போனதை) போட்டு டார்ச் லைட்டை எரிய வைக்க முடியாது, ரேடியோவை பாட வைக்க முடியாது, கைக்கடிகாரத்தை ஓட வைக்க முடியாது! நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் தீர்க்கதரிசனம் சொல்லி ஜனங்களுக்கு வாழ்வைக் கொடுக்க முடியாது, அவர்கள் ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ள வழி வகை செய்யவும் முடியாது. காரணம் அந்த பழைய பிரமாணம் செயலிழந்து விட்டது. இயேசு சிலுவையில் அதை செயலிழக்க வைத்தார்.

*புது உடன்படிக்கை என்று அவர் சொல்லுகிறதினாலே முந்தினதைப்* (பழைய உடன்படிக்கை – நியாயப்பிரமாணம்) *பழமையாக்கினார்; பழமையானதும் நாள்பட்டதுமாயிருக்கிறது உருவழிந்துபோகக்* **(become zero)** *காலம் சமீபித்திருக்கிறது. எபி. 8:13. ... மாம்சத்தினாலே பலவீனமாயிருந்த நியாயப்பிரமாணம் செய்யக்கூடாததைத் தேவனே செய்யும்படிக்கு, தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், பாவத்தை போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார். ரோமர். 8:3*

புது பேட்டரி **(power source)** போட்டால் நிச்சயமாக லைட் எரியும்! எல்லாவிதமான மின்சாதனங்களையும் இயங்க வைக்க முடியும். இதுகூட தெரியாத மெத்த படித்த மேதாவிகள் கூட தீய்ந்தபோன **battery**-களையே உபயோகிக்கிறார்கள்! மகாபெரிய கடல் இருக்க, ஒரு குவளை தண்ணீருக்காக காடுமேடுகளெல்லாம் அலைகிறார்கள். மகாபெரிய சூரியன் அனலை கக்கிக்

கொண்டிருக்க, ஒரு சிறு ஒளிக்கதிருக்காக கண்கள் பூக்கக் காத்திருக்கிறார்கள்! இவர்களைப் பார்த்து பவுல் என்ன சொல்கிறார் என்பதைப் பார்ப்போம்:

புத்தியில்லாத... (சபையோரே), நீங்கள் சத்தியத்திற்கு கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் **(enchantment –** வசியப்படுத்தியது) யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்கு முன் பிரத்தியட்சமாய் **(evidently, clearly)** உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே!

இயேசு கிறிஸ்து சுவிசேஷம் அறிவிக்கும் பொறுப்பை அப்போஸ்தலர்களிடம் கொடுத்துவிட்டு பரலோகத்திற்கு போனபின்பு; அப்போஸ்தலர்கள் சபையில் புதிய உடன்படிக்கையைத்தான் போதித்து வந்தனர். உண்மையில் இது புதிதானதல்ல, ஆரம்பத்தில் ஏதேனில் இந்தப் புதிய பிரமாணம் தான் வழக்கத்தில் இருந்தது. விசுவாசத்தின் அடிப்படையில் இந்தப் பிரமாணம் இயங்கும்படி தேவன் அமைத்திருந்தார். ஆதாமின் ஏமாளித்தனத்தால் இந்த விசுவாச பிரமாணம் செயலிழந்து போனது; கால ஓட்டத்தில் உருவழிந்தும் போனது.

மனுக்குலம் இழந்து போனதையெல்லாம் மீட்டுக்கொடுப்பதற்காக வந்த இயேசு, இந்த விசுவாச பிரமாணத்தையும் மீட்டுக் கொடுத்தார். மீட்டுக் கொடுத்ததை பெற்றுக்கொள்ள கையில்லை, மனதில்லை! விசுவாசம் வந்த பின்பு நாம் உபாத்திக்குக் (நியாயப்பிரமாணத்திற்கு) கீழானவர்களல்லவே. கலா. 3:25. விடுதலை வாங்கிக் கொடுத்த பிறகும் ஜெயிலுக்குப் போக விரும்புகிற சிறைக் கைதிகள்! கதவை உடைத்து மீண்டுமாக ஜெயிலுக்குள் போய்விட்ட விசித்திர விநோத ஜெயில் கைதிகள்! (சிறைக் கதவை உடைத்து தப்பித்து வெளியே ஓடிய கைதிகளை பற்றித்தான் கேள்விப்பட்டிருக்கிறோம்)... *நீங்கள் மறுபடியும் அடிமைத்தனத்தின் நுகத்துக்குட்படாமல், கிறிஸ்து நமக்கு உண்டாக்கின சுயாதீன நிலைமையிலே நிலை கொண்டிருங்கள். கலா. 5:1* இது செழிப்பின் உபதேசம், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டது என்று பல்லவி பாடிக் கொண்டிருப்பீர்களானால்...

*... கிறிஸ்துவினால் உங்களுக்கு ஒரு பிரயோஜனமுமிராது என்று... நான் உங்களுக்குச் சொல்லுகிறேன். கலா. 5:2.* அன்று கலாத்திய சபைக்கு பவுல் சொன்னார்; இன்று பவுல் சரீரத்தில் இல்லாததினால் சரீரத்தில் இருக்கிற நான் இதை சொல்ல வேண்டியதாயிருக்கிறது. கிறிஸ்துவினால் நமக்கு சிலுவையில் ஏற்படுத்தின புதிய சுயாதீன பிரமாணத்தை புறக்கணிப்பவர்கள் அதற்கு பிறகு இயேசுகிறிஸ்துவுடன் தொடர்பு கொள்ள முடியாத சூழ்நிலை உருவாகிவிடும் என்பதை உணர்ந்து எச்சரிக்கையாயிருப்போம். *நியாயப்பிரமாணத்தினால் நீதிமான்களாக விரும்புகிற நீங்கள் யாவரும் கிறிஸ்துவைவிட்டு பிரிந்து கிருபையினின்று விழுந்தீர்கள். கலா. 5:4*

இது செழிப்பு பிரசங்கம் என்று விமரிசனம் செய்பவர்களுக்கு சொல்கிறேன்: உங்கள் சொத்துக்களை (கார், பங்களா, நகைகள், நிலங்கள், வங்கி முதலீடுகள்) ஆகியவற்றை, இல்லாத ஏழை எளியவர்களுக்கு உயில் எழுதி வைத்து விடுங்களேன்! செழிப்பு தவறானதாச்சுதே? அதனால் அது உங்களுக்கு வேண்டாமே!

செழிப்பை நாங்கள் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யவில்லை, வேதத்திலிருந்து தான் இறக்குமதி செய்தோம். வேதத்தில் செழிப்பு என்ற வார்த்தை பணத்தை, பொருளாதாரத்தை மாத்திரம் குறிப்பிடவில்லை. ஒரு மனிதன் பூமியில் எந்த குறைவுமின்றி நன்றாக வாழ்ந்திருக்க என்னவெல்லாம் தேவையோ அவையெல்லாமே செழிப்பு தான். சில வசனங்களை பார்ப்போம்:

*தேவரீர் பூமியை விசாரித்து அதற்கு நீர்ப்பாய்ச்சுகிறீர்; தண்ணீர் நிறைந்த தேவ நதியினால் அதை மிகவும் செழிப்பாக்குகிறீர்; **(enriching - improve the quality of earth)** இப்படி நீர் அதைத் திருத்தி, அவர்களுக்கு தானியத்தை விளைவிக்கிறீர். ... சங். 65:9* பூமியில் மழையை பெய்யப்பண்ணுகிறார். அதனால் பூமி தானியங்களை விளையச் செய்கிறது, ஜனங்கள் சாப்பிட்டு திருப்தியடைகிறார்கள். செழிப்பின் உபதேசத்திற்குள் போயிட்டீங்களே என்று எங்களைப் பார்த்து வருத்தப்பட்டவர்; இந்த முறையில் விளைவிக்கப்பட்ட அரிசி சாதத்தைத் தான் சாப்பிடுகிறார்! சும்மா கண்ணை மூடிக்கொண்டு விமரிசிக்கக் கூடாது. விமரிசனம் செய்யும் முன்னதாக நீங்கள் விமரிசனம்

செய்யப்போகிற காரியத்தைக்குறித்து ஓரளவுக்காவது தெரிந்திருக்க வேண்டும்!

நான் உயர்நிலைப் பள்ளியில் **(High School)** படித்துக் கொண்டிருந்த கால கட்டத்தில்... என்னுடன் படிக்கும் தோழியின் வீட்டில் மதிய உணவு சாப்பிட்டுக் கொண்டிருந்தேன். சாதத்தின் மேல் பருப்பு ரசம் ஊற்றப்பட்டது; அதாவது நான் அப்படி நினைத்துக் கொண்டேன்; உண்மையில் அது பருப்பு ரசம் அல்ல. சாப்பிட்டுக்கொண்டே பருப்பு ரசம் ருசியாகத்தான் இருக்கு, ஆனால் காயத்தை கொஞ்சம் அதிகப்படியாகப் போட்டிருக்கிறார்கள் என்றேன். தோழியின் அசட்டுச் சிரிப்புக்கான அர்த்தத்தை நான் கண்டுபிடிப்பதற்கு முன்னதாகவே அவள் சொன்னாள்: அது பருப்பு ரசம் அல்ல, சாம்பார் என்றாள். இப்போது அசட்டுச் சிரிப்பை நான் சிரித்து வைக்க வேண்டியதாகி விட்டது.

*...தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம்; செழிப்பான இடத்தில் **(wealthy place)** எங்களை கொண்டு வந்து விட்டீர். சங். 66:12.* இந்த வசனத்தில் செல்வச் செழிப்பைக் குறித்து தான் சொல்லப்படுகிறது. ஆனால் செல்வச் செழிப்புக்குள் நடத்துபவர் கர்த்தர் தான்; அது தவறானால் தரமாட்டாரே?

*அவருடைய நாட்களில் நீதிமான் செழிப்பான்; **(flourish - grow well)** ... சங். 72:7.* சகல ரீதியிலும் நன்றாக இருப்பதைத் தான் குறிக்கிறது. அறிவிலும், கையிட்டுச் செய்யும் வேலைகளிலும், படிப்பிலும், பொருளாதார ரீதியிலும் விருத்தியடைவதைக் குறிக்கிறது. கையின் கிரியைகள் எல்லாவற்றிலும் விருத்தியைக் காண்பது நீதிமானின் ஒரு குணாதிசயம், வாக்குத்தத்தங்களில் இதுவும் ஒன்று.

*... கர்த்தரை நம்புகிறவனோ செழிப்பான். **(fat - excess - surplus - sufficient)** நீதி. 28:25*

*... என் நேசருக்கு மகா செழிப்பான மேட்டிலே **(very fruitful hill)** ஒரு திராட்சத்தோட்டம் உண்டு. ஏசா. 5:1* சபை விசுவாசிகள் எல்லா எல்லைகளிலும் நன்றாக இருக்க வேண்டும், செழித்திருக்க வேண்டுமென்பது தேவனுடைய திட்டம்.

*இன்னும் கொஞ்சக் காலத்திலல்லவோ லீபனோன் செழிப்பான வயல் **(fruitful field)** வெளியாக மாறும்; செழிப்பான வயல்வெளி காடாக எண்ணப்படும். ஏசாயா. 29:17*

*அவர் நன்மை செய்து வந்து, வானத்திலிருந்து மழைகளையும் செழிப்புள்ள காலங்களையும் **(fruitful seasons)** நமக்குத் தந்து, ... அப். 14:17*

செழிப்பு என்பது தேவனைவிட்டு பிரிக்க முடியாத ஒரு காரியம். அது பரலோகத்தில் இருந்தது; அதனால் பரலோகம் நன்றாக இருந்தது. நன்றாக இருந்த அந்தப் பரலோகத்தில் இருந்து தேவன் பூலோகத்தை உருவாக்கினார். பூலோகத்தை தேவன் திட்டமிடும் போது **(design** பண்ணும் போது) பரலோகத்தின் செழிப்பைத்தான் உபயோகித்தார். ஆதியாகம் 1, 2, அதிகாரங்களைப் பாருங்கள் ... ஏதேனின் அழகைப் பாருங்கள் ... அது உங்களுக்கே புரியும். மீண்டும் என் பழைய கவிதை வரிகளைக் கொண்டு வருகிறேன். ஏதேனில் திரும்பிய இடமெல்லாம்; எங்கெங்கும் அழகு பூத்துக் குலுங்கியது, அழகு சிரித்தது, இளமை சிரித்தது. மனிதன் பாவத்தில் விழுந்த பிறகு; அது உயிர்ப்பார்வையின்றி அழுது வடிந்தது!

பூமி உருவாகுமுன்னதாகவே அது தேவனுடைய மனதில் இருந்தது. அவருடைய மனதில் இருந்த அழகான செழிப்பான பூமியை அவர் வாயைத் திறந்து வார்த்தைகளாகப் பேசப் பேச அவைகள் உருவாகின. மனுக்குலத்தின் பிரதிநிதியாகிய முதல் மனிதனான ஆதாமின் மீறுதலினால் பூமி கொஞ்சம் கொஞ்சமாக தன் செழிப்பை இழந்தது. செழிப்பு மனிதனின் பிறப்புரிமை; அதை அவன் இழந்ததைப் போன்ற சோகக்கதை வேறு எதுவுமே இல்லை.

மனுக்குலம் இழந்த செழிப்பை மீண்டும் அவன் பெற்றுக் கொண்டே ஆக வேண்டும்; பூமி மீண்டும் செழிக்க வேண்டும். அதற்கு என்ன செய்வது? தேவன் ஒரு திட்டம் போட்டார்; அதுதான் ஆபிரகாமின் ஆசீர்வாதம் என்ற **assignment!** ஏதேனில் மனிதன் இழந்த செழிப்பை இந்த **assignment**-க்குள் கொண்டு வந்தார்.

*நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரைப் பெருமைப்படுத்துவேன்; நீ ஆசீர்வாதமாய் இருப்பாய். உன்னை ஆசீர்வதிக்கிறவர்களை ஆசீர்வதிப்பேன், உன்னை சபிக்கிறவனைச்* (சாத்தானை) *சபிப்பேன். பூமியிலுள்ள வம்சங்களெல்லாம் உனக்குள் ஆசீர்வதிக்கப்படும் என்றார். (ஆதி. 12: 2,3)* உன்னை என்ற பதத்திற்குப் பதில் அந்த இடத்தில் உங்கள் பெயரைப் போட்டு வாசியுங்கள். ஏனென்றால்:

*...விசுவாசமார்க்கத்தார்கள் எவர்களோ அவர்களே ஆபிரகாமின் பிள்ளைகளென்று அறிவீர்களாக. ... விசுவாசமார்க்கத்தார் விசுவாசமுள்ள ஆபிரகாமுடனே ஆசீர்வதிக்கப்படுகிறார்கள். (கலா. 3: 7,9)* என்று எழுதியிருக்கிறது. பிரகாசமுள்ள மனக்கண்களைப் பெற்று, சுயாதீனப்பிரமாணத்தை உற்றுப்பார்த்து, சிலுவையின் இரகசியங்களை அறிந்து கொண்டு, விசுவாசத்தினடிப்படையில் வாழ்கிற நாம் தான் விசுவாச மார்க்கத்தார்கள். அதனால் நமக்கும் அந்த வாக்குத்தத்த ஆசீர்வாதங்கள் பலிக்கும். இன்னமும் ஆவிக்குரிய கண்கள் பிரகாசிக்கப்படாமல் குருடராயிருக்கும் நியாயப்பிரமாண கிரியைக்காரர்கள் விசுவாசமார்க்கத்தாரல்ல. அவர்களும் விசுவாச மார்க்கத்தாராக வேண்டுமென்பது தான் தேவனின் விருப்பம், நிச்சயம் வருவார்கள், விசுவாசிப்போம், அவர்களுக்கும் இரசியத்தைச் சொல்லுவோம்.

ஏதேனின் செழிப்பை தேவன் வாக்குத்தத்தங்களுக்குள் வைத்து பூட்டுகிறார் (**packet** – பல பரிசுப் பொருட்கள் உள்ள பொட்டலம் போல – **gift pack**) சுமார் 7000–க்கும் மேற்பட்ட வாக்குத்தத்தங்கள் மீண்டுமாக ஆபிரகாமின் ஆசீர்வாதங்களாக நமக்கு வருகிறது. ஒவ்வொரு வாக்குத்தத்தங்களை வாசிக்கும்போதும் அதை ஆதியாகமம் 1, 2 அதிகாரங்களில் வரும் ஏதேனுடன் ஒப்பிட்டுப் பார்த்துக் கொள்ளுங்கள். நிச்சயமாக அதிலுள்ளது தான் இதிலும் இருக்கும்! உதாரணமாக ...

*... உம்முடைய வெளிச்சத்திலே வெளிச்சம் காண்கிறோம். சங். 36:9 (ஆதி. 1:3)*

*நீதிமானுக்காக வெளிச்சமும், செம்மையான இருதயத்தாருக்காக மகிழ்ச்சியும் விதைக்கப்பட்டிருக்கிறது. சங். 97:11 (ஆதி. 1: 11, 12)*

*... அவர்களை வெள்ளியோடும் பொன்னோடும் புறப்படப் பண்ணினார்; ... சங். 105:37 (ஆதி. 2: 11,12)*

மொத்தத்தில் சொல்ல வருகிறது என்னவென்றால்:

நாம் வாழ்கிற இந்த பிரமாண்டமான பூமி தேவனுடைய ஒரு செயல் திட்டம் (**project - task - assignment**) அந்த திட்டத்தை செயல்படுத்தும் பொறுப்பை மனிதனிடம் கொடுத்தார். அதை அவன் வெற்றியாக முடிக்க வேண்டும் என்பதற்காக அவனைத் தன்னைப் போலவே உண்டாக்கினார். ஆனால் மனிதனை ஏமாற்றி தேவனுடைய திட்டத்தை சாத்தான் கெடுத்துப் போட்டான். (இந்த சாத்தான் யார்? ஏன் அப்படிச் செய்தான்? அதனால் அவனுக்கென்ன லாபம்? என்பதைப் பற்றி பிறகு பார்ப்போம்.)

தேவனுடைய திட்டம் தோல்வியடைந்ததால் பூமியின் ஆசீர்வாத நியமம் பிரச்சனைக்குள்ளானது. பூமியும் அதன் நிறைவும் இப்படி இப்படி இயங்க வேண்டும் என்று தேவன் உருவாக்கி வைத்திருந்த சூத்திரம் (**principle - formula**) எதிரிடையாக இயங்க ஆரம்பித்தது. இதனால் தேவனுடைய திட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டது. சாபம் பூமியையும் அதன் நிறைவையும் (இயற்கை) மனிதனின் வாழ்க்கையையும் பட்சிக்க ஆரம்பித்தது. மனிதனின் வாழ்க்கையே பெரிய போராட்டமாகிப் போனதால் தேவனுடைய திட்டத்தைப் பற்றி யோசிக்கக்கூட அவனுக்கு நேரமில்லாமல் போனது.

வாய் – வயிறு இதுதான் வாழ்க்கை என்ற அவலம் தொடர ஆரம்பித்தது. பாவத்தால் இயக்கி வைக்கப்பட்ட சாப நியமம் மனிதனின் வாழ்க்கையில் இச்சை, வியாதிகள், மரணம், தரித்திரம், துர்க்கிரியைகள், சஞ்சலம், கேடு, நிர்மூலம், கொள்ளை நோய் (**serious infectious diease**), ஷயரோகம் (**tuberculosis**), காய்ச்சல், உஷ்ணம் (**inflammation** – கொப்பளங்கள்), எரிபந்தம் (**severe burn**), வறட்சி (**dry skin**), கருக்காய் (**explosive skin**), விஷப்பனி (**fungal appearance**), பஞ்சம் **drought**, புயல்காற்றுடன் சேர்ந்த புழுதி (**dust storm**) போன்ற காரியங்களை கொண்டு வந்தது. உபா. 28: 15

முதல் அந்த அதிகாரம் கடைசி வரையிலும் வாசித்துப் பாருங்கள். சாபத்தால் இந்தப் பூமியின் மீது உலகத் தோற்ற முதல் இன்றைய தினம் வரைக்கும் நடந்து கொண்டிருக்கும் பாழ்க்கடிப்புகளின் பட்டியலைப் பார்க்க முடியும். அதன் சாராம்சத்தை கீழே தந்திருக்கிறேன்:

சாத்தான் மனிதர்களை துரத்த ஆரம்பித்தான்; உலகத்தின் சாப நியமம் அவனுக்கு ஒத்துழைப்பைக் கொடுத்தது; ஓடிக்கொண்டே இருக்கிறார்கள், விரக்தியின் உச்சக்கட்டத்துக்கே போய்விட்டார்கள். அதுமட்டுமல்ல பூமியில் சிதறடிக்கப்பட்டுப் போகிறார்கள். பிள்ளைகள் அரேபிய தேசங்களில் தங்கி வேலை பார்க்கிறார்கள்; பெற்றோர்கள் அவர்களை எப்போது பார்ப்போம் என்று ஏங்கியபடி இந்தியாவில்! மகன் அமெரிக்காவில் படிக்கிறான்; தகப்பன் அவன் குரலுக்காக ஏங்கியபடி தொலைபேசியினருகில் தவம் இருக்கிறார்.

அகால மரணங்கள் **(crucial death)**, எரிபந்த பருக்கள், மூலவியாதி, சொறி, சிரங்கு **(itch - an irritating skin disease)**, புத்தி மயக்கம் **(psychiatric disorder, thoughtless behavior, violent anger)**, குருட்டாட்டம் – (சாத்தானால் ஆவிக்குரிய கண்கள் குருடாக்கப்பட்ட நிலைமை. இதனால் மனிதனுக்கு தான் யார் என்ற உண்மையே தெரியாமல் போகிறது. தான் குரங்கில் இருந்து வந்தவன் என்றும், காலப்போக்கில் அதி நவீன நிலைமைக்கு உயர்த்தப்பட்ட அதிக அளவு அறிவுடைய ஒரு மிருகம் என்று தன்னைக் குறித்து தவறாக நினைத்துக் கொண்டிருக்கிறான். தன்னைக் குறித்ததான இப்படிப்பட்ட தவறான கண்ணோட்டம் **view** அவனை மிருகம் போலவே வாழ வைக்கிறது.) சூழ்நிலைகளால் நாற்புறத்திலும் நெருக்கப்பட்டு என்ன செய்வது என்று தெரியாமல் திகைத்து நிற்கும் மனிதர்களைப் பார்க்கிறோம். அந்த பிரகாரம் நாம் பார்க்கிற காரியங்கள். எதைச் செய்தாலும் உருப்படாமல் போவது, உதவி செய்வார் இல்லாமல் ஒடுக்கப்பட்டு, பறிகொடுக்கிறவர்களாய் இருக்கிறார்கள். தொழிலில் லாபமில்லாமல் போவது முதலுக்கே மோசம் வருவது போன்ற காரியங்கள் சாபத்தின் **out put** ஆக வெளிப்படுகிறது. இன்னும் இருக்கிறது:

கண்களால் காண்கிற காரியங்களினால் மதிமயக்கப்பட்டு விசுவாசத்தை இழந்து போவது. தேர்தலில் ஓட்டுப்போட்டு தேவனை அறியாத மனிதர்களை ராஜாக்களாக தேர்ந்தெடுக்க வேண்டிய சூழ்நிலை. கல்லும் மண்ணுமாக விக்கிரகச் சிலைகளை வணங்குதல், பரிகாசத்துக்குள்ளாகுதல், விதைப்புக்கேற்ற பலனில்லாமல் போகும் காரியங்கள். தேவபிள்ளைகளைவிட சாத்தானின் பிள்ளைகள் உயர்நிலைகளில் காணப்படும் காரியங்கள், சாத்தானின் ஆளுகைக்குட்பட்டவர்களின் அதிகாரத்தின் கீழ் கூலி வேலைபார்க்கும் தேவபிள்ளைகள்!

முடிவில் அழிவு, மரணம், முடிவு. கதை முடிந்த பிறகும் அதைப் பற்றியே பேசிக்கொண்டிருப்பார்கள், அவமானம், நிந்தை ஒழியாமல் ... நாயாக உழைத்து ஓடாக தேய்ந்து, வருமானம் பற்றாமல் அரைகுறையாக வாழ்ந்து முடிப்பது, தேசத்திற்கு விரோதமாக தேசம் எழும்பி படையெடுத்து, தோற்கடித்து, தன் ஆளுகைக்குள்ளாகக் கொண்டு வந்து; அந்த தேசத்தின் நன்மைகளை புசித்து மக்களை அடிமைகளாக வைத்துக் கொள்வது. (இது இந்தியாவின் பழைய சோகக்கதை). வயதானபின் பெற்ற பிள்ளைகளின் பராமரிப்பில் பல அவமானங்கள் மத்தியில் வாழ்க்கையின் முடிவுப் பகுதியை கழிக்க வேண்டிய சூழ்நிலை. மனிதர்களின் சுயநலம், மருத்துவத்தால் உதவ முடியாத கொடிய வியாதிகள் **(aids)**, ஓய்வு இல்லாமல் வேலைபார்க்க வேண்டிய சூழ்நிலை, தத்தளிப்பு, சோர்வு, மனசஞ்சலம், வியாதியினால் செத்துப்போய்விடுவோமோ என்கிற பயம், அதனால் இரவில் தூக்கம் வராத சூழ்நிலை. ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு யுகம் போலத் தோன்றுகிற சூழ்நிலை. வாக்குத்தத்தங்களுக்கு நேர் எதிரிடையான காரியங்கள் நடப்பதை பார்த்து குழம்பிப் போகுதல்.

இவைகள் தான் பூமியின் சாப நியமத்தின் சாராம்சங்கள் **(production)**. பூமியின் சாப நியமத்தின்படி இந்தக் காரிங்கள் எல்லாம் அதன் வெளிப்பாடாக தன்னிச்சையாக **(automatically)** பூமியின் மீது நடந்து கொண்டே இருக்கிறது. இப்படிப்பட்ட மோசமான சூழ்நிலைகளில் சிக்கி வேதனையோடு வாழ்ந்து மனிதன் மடிந்து போவது தேவனுடைய மனதை அதிகமாக வியாகுலப்படுத்தியிருக்கும் என்று நான் சொல்லத் தேவையில்லை தான். தன்னைப் போலவே உருவாக்கிய மனிதன் நன்றாக இருக்க வேண்டும், எந்தவொரு நன்மையும் குறைவுபடாமல் சகல ரீதியிலும் பரிபூரணத்துடன் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதே தேவனுடைய இதயத் துடிப்பாக

இருந்தது.

அதற்காக தேவன் எதையும் இழக்க தயாராக இருந்தார். தன்னுடைய ஒரே சொத்தையும் இழந்து விட முடிவு செய்தார்; அவர் தான் இயேசு! தேவன் தன்னுடைய வார்த்தையின் ரூபமாகிய தன்னுடைய ஒரே குமாரனையே தன்னுடைய கிரியைகள் அனைத்திற்கும் மூலக்கருவாக வைத்திருந்தார். *"கர்த்தர் தமது கிரியைகளுக்கு முன் (before his works) பூர்வமுதல் என்னைத் தமது வழியின் ஆதியாகக் கொண்டிருந்தார் (possessed me in the beginning of his way). நீதி. 8:22"* அதாவது இயேசுவல்லாமல் தேவனால் எந்தவொரு கிரியையும் செய்ய முடியாது. ஏனென்றால் இயேசு தான் பிதாவின் வாயிலிருந்து புறப்படுகிற வார்த்தைகள்! *ஆதியிலே வார்த்தை இருந்தது, அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது. அவர் ஆதியிலே தேவனோடிருந்தார். யோவான் 1: 1, 2* வார்த்தையின்றி தேவனால் கிரியை நடப்பிக்க முடியாது! என்றாலும் தேவன் யோசிக்காமல் தன்னுடைய வார்த்தையாகிய மகனை அனுப்பினார்.

தன்னுடைய வார்த்தைக்கு மனுஷரூபத்தைக் கொடுத்து பூமிக்கு அனுப்ப பிதாவாகிய தேவன் திட்டமிட்டார். மனிதனிடம் தேவன் வைத்திருந்த அளவிட முடியாத அன்பினால் தேவன் துணிந்து செயல்பட்டார் (**risk** எடுத்தார்), தன்னுடைய வார்த்தையை (மகனை – இயேசுவை – தன்னுடைய கிரியைகளின் மூலக்கருவை, மூலக்கூறை!) அபாயத்திற்கேதுவாக்கினார் (**expose to danger**). தேவனுடைய அன்பை நிரூபிக்க வேண்டுமானால் (**demonstrate** செய்து காட்டவேண்டுமானால்); அதற்கு இந்த நிகழ்வைத் தவிர வேறெதுவும் இருக்க முடியாது. இயேசுவை பூமிக்கு அனுப்ப வேண்டுமானால்; அதற்கு பூமியின் நியமங்களின்படிதான் அனுப்பியாக வேண்டும். நாம் வாழ்கிற பூமி வார்த்தைகளினால் செய்யப்பட்ட பூமி; ஏனென்றால் அதைத் திட்டமிட்டு உருவாக்கிய தேவன் வார்த்தைகளின் தேவன்! மனிதன் எதைப் பேசுகிறானோ அது பூமியின் மீது நடக்கிறது ... இந்த ரீதியில் தான் பூமியையும், மனிதனையும் தேவன் **design** பண்ணியிருக்கிறார். இப்போது நாம் காணும் பூமி ... இது வரை வாழ்ந்த மனிதர்களின் உருப்படாத வார்த்தைகளினால் உருவாக்கப்பட்ட காரியங்களினால் (சீர்கேடுகள்) நிரம்பியிருக்கிறது.

பிதாவாகிய தேவன் தன்னுடைய தீர்க்கதரிசிகளின் மூலமாக இயேசு இந்த பூமியில் வந்து பிறப்பதற்கேதுவாக வார்த்தைகளை திரும்பத் திரும்ப உச்சரிக்க வைத்தார். பழைய ஏற்பாட்டின் ஆகமங்களில் இந்தத் தீர்க்கதரிசன வார்த்தைகளை வழிநெடுக பார்க்க முடியும். அந்த வார்த்தைகள் மாம்சமாகி பூமியில் மனிதனாக வந்து பிறந்தது (பிறந்தார்). பாவ இயல்புகள் உணர்வுகள் நிரம்பப்பெற்ற பாவ மாம்சத்தில் தேவன் இயேசு வந்து பிறந்ததை நினைக்கும்போது ... அதிர்ச்சியோடு வேதனைக் கண்ணீர் ஒரு பக்கம்; சந்தோஷத்தோடு ஆனந்த கண்ணீர் மறுபக்கம்!

... என்னிடத்தில், (பவுலிடத்தில் ... மனிதனிடத்தில்) அதாவது என் மாம்சத்தில், *நன்மை வாசமாயிருக்கிறதில்லையென்று நான் அறிந்திருக்கிறேன். ரோமர். 7:18 ... தம்முடைய குமாரனைப் பாவமாம்சத்தின் சாயலாகவும், (sinful flesh) பாவத்தைப் போக்கும் பலியாகவும் அனுப்பி, மாம்சத்திலே பாவத்தை ஆக்கினைக்குள்ளாகத் தீர்த்தார் (condemned sin in the flesh) ரோமர். 8:3.* அதாவது பாவத்தை கண்டனம் செய்தார்; பாவத்துக்குத் தண்டனை விதித்தார், முடிவு கட்டினார்.

இயேசுக்கு இருதயக் கதவைத் திறந்து கொடுக்கிறவர்கள்; அது யாராக இருந்தாலும் சரி பிரச்சனையில்லை, இயேசு உள்ளே நுழைந்து விடுகிறார். பாவத்துக்கு முடிவு கட்டின இயேசு மனிதனின் இதயத்திற்குள் வரும்போது; பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றலும் மனிதனுக்கு வருகிறது. பாவம் மனிதனின் அனுமதிக்காகக் காத்திருக்கிறது; மனிதனின் சிந்தனைப் பகுதியை கடந்து செல்கிறது. அப்படி கடந்து செல்லும்போதே அதற்கு **No!** சொல்லி விட வேண்டும். வேண்டாம் என்று நிராகரிப்பது சாத்தியமாகுமா என்று கேட்டால் நிச்சயமாக சாத்தியமாகுமென்று தான் நான் சொல்வேன். ஏனென்றால் நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருப்பதால், பாவம் செய்யாமலிருக்கும் ஆற்றல் நமக்குள் வந்திருப்பதால் அது சாத்தியம்தான்!

அது உண்மையானால் இரட்சிக்கப்பட்ட நபர்கள் தொடர்ச்சியாக பாவத்திலேயே வாழ்வது ஏன்? என்ற கேள்வி வருகிறது. பதில் சொல்லப்பட வேண்டிய மிகவும் அவசியமான கேள்வி இது.

இயேசுவை ஏற்றுக் கொண்ட ஒரு நபருக்கு, தான் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டிருக்கிறோம் என்ற இரகசியம் தெரியாமல் போவதால் தான் பெரும்பாலும் இது நடக்கிறது. தான் இன்னுமாக பாவத்திலிருந்து விடுதலையாகவில்லையென்றுதான் அவர் நினைத்துக் கொண்டிருக்கிறார். அவரைப் பற்றிய அவருடைய தவறான கணிப்பே, மீண்டுமாக அவரைப் பாவத்திற்குள் இழுத்துப் போடுகிறது.

பத்து வருஷங்களுக்கு முன்பாக எங்கள் வீட்டில் வளர்த்த நாயை எப்போதும் ஒரு கம்பில் சங்கிலியால் கட்டியே போட்டிருப்போம். வீட்டைச் சுற்றி சுவர் இல்லாத காரணத்தினால்; நாயின் பாதுகாப்பு கருதி அவ்விதமாக கட்டி வைத்திருந்தோம். அது அந்த கம்பை சுற்றி சுற்றி ஓடிக்கொண்டே இருக்கும். இவ்விதமாக சில மாதங்கள், வருடங்கள் கழிந்தன. வீட்டை சுற்றிலும் **compound wall** கட்டப்பட்டது. அதனால் நாயின் கழுத்திலிருந்த சங்கிலியை அவிழ்த்து; அதை விடுதலையாக்கி, அது **free** யாக சுற்றிவருவதற்கு வசதியாக விட்டு விட்டோம். என்றாலும் அந்த நாய் பல நேரங்களில் அந்த கம்பைச் சுற்றி சுற்றி ஓடிக்கொண்டே இருந்தது! அது மிகவும் வேடிக்கையாக இருந்ததால் சிரிப்புத்தான் வந்தது; என்றாலும் அந்த நாயின் முட்டாள்தனத்தை நினைத்து பாவமாகவும் இருந்தது!

விடுதலையாக்கப்பட்ட பிறகும், தன் நிலைமை தெரியாமல் இன்னுமாக கம்பைச் சுற்றி ஓடிக்கொண்டே இருக்கும் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகள்! இரட்சிக்கப்பட்டு தன்னைத் தேவனுடைய பிள்ளைகள் என்று பெருமையடித்துக் கொண்டிருக்கும் சபை விசுவாசிகள்... ஒரு காரியம் மட்டும் புரியாத புதிராகவே இருக்கிறது. இன்னமும் ஏன் இரட்சிக்கப்படாத உலக மனிதர்களைப் போலவே பாவம் செய்கிறோம்? ஏன் இச்சை மேற்கொள்கிறது? ஏன் அசுத்தமான நினைவுகள் தோன்றுகின்றது? ஏன் அடுத்தவர்களுக்குச் சொந்தமானதை இச்சையோடு பார்க்கிறேன்? என்ற இரகசியக் கேள்விகளால் வேதனைப்பட்டு துவண்டுப் போகிறார்கள்.

இரட்சிக்கப்பட்டவர்களே, தேவ பிள்ளைகளே! நீங்கள் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு விட்டீர்கள், இனி அது உங்களை **overtake** செய்யாது, **overlook** செய்யாது என்று உங்களுக்கு அறிவிக்கிறோம். இதுதான் பூரண சுவிசேஷம், இதுதான் சத்தியம். சத்தியத்தை அறிந்து கொள்ளுங்கள், அது உங்களை விடுதலையாக்கும். எதிலிருந்து? பாவத்திலிருந்து, சாபத்திலிருந்து, வியாதியிலிருந்து, தரித்திரத்திலிருந்து! இன்னும் சொல்லப்போனால் எல்லாவற்றிலிருந்தும் விடுதலை. *தேவனால் பிறந்த எவனும் பாவஞ்செய்யானென்று அறிந்திருக்கிறோம்; தேவனால் பிறந்தவன் தன்னைக் காக்கிறான், பொல்லாங்கள் அவனைத் தொடான் 1 யோவான். 5:18 பாவத்தினின்று நீங்கள் விடுதலையாக்கப்பட்டு, நீதிக்கு அடிமைகளானீர்கள். ரோமர். 6:18 இப்பொழுது நீங்கள் பாவத்தினின்று விடுதலையாக்கப்பட்டு, தேவனுக்கு அடிமைகளானதினால், பரிசுத்தமாகுதல் உங்களுக்கு கிடைக்கும் பலன், முடிவோ நித்திய ஜீவன். ரோமர். 6:22*

நாம் யார்? நாம் எங்கேயிருந்து வந்தோம்? நமக்கு என்ன கொடுக்கப்பட்டிருக்கிறது? அதை எப்படி எடுக்க வேண்டும்? அதை உபயோகித்து என்னவெல்லாம் செய்ய வேண்டும்? இந்த கேள்விக்கெல்லாம் விடை சொல்வதில் தான் பூரண சுவிசேஷத்தின் வெற்றி அடங்கியிருக்கிறது.

## எப்படி சுவிசேஷம் சொல்லக்கூடாது?:

இயேசுவே ஆண்டவர், அவர் மாத்திரம் தான் தேவன், நீங்கள் கும்பிடுகிற சாமிகளெல்லாம் கடவுளல்ல, அது பிசாசு, அவற்றை விட்டு விடுங்கள், இயேசுவிடம் ஓடி வாருங்கள், அவர் உங்கள் பாவங்களை மன்னிப்பார், பரலோகம் சேர்ப்பார். இப்படியாக தொடக்கமும் இல்லாமல் முடிவுமில்லாமல் மொட்டைக்கட்டையாக சுவிசேஷம் சொல்லப்பட்டுக் கொண்டே இருப்பதால்தான் அது தோல்வியை சந்திக்கிறது. சரியான காரண காரியங்களைச் சொல்லாமல் ஒரு மனிதனை இயேசுவை ஏற்றுக் கொள்ளச் சொல்லி கட்டாயப்படுத்தும்போது; அவன் எதிர்த்து வரத்தான் செய்வான்.

சுவிசேஷம் என்றால்; கேட்கும் போது மனிதில் கொஞ்சம் கூட தயக்கமோ, சந்தேகமோ எழும்பாமல்; முழுமனதோடு, நிச்சயத்தோடு ஏற்றுக்கொள்ளும் **(believed to be absolutely and unquestionably true)** அளவில் இருக்க வேண்டும். சுவிசேஷம் என்றால் நற்செய்திகளடங்கியதாக இருக்க வேண்டும். ... தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார்.

**... லூக். 8:1.** வாழ்நாளெல்லாம் சஞ்சலத்தோடும் தவிப்போடும் ஏக்கத்தோடும் எதிர்பார்ப்போடும் ஏமாற்றத்தோடும் சாபம் துரத்த ஓடிக்கொண்டிருக்கும் மனிதனின் தாகத்தை போக்கும் குளிர்ந்த நீரோடையைப் போல சுவிசேஷம் இருக்க வேண்டும். மாறாக நெருப்புத் தணலை வாரிக் கொட்டினால் **... ?** சிலுவையின் அடிவாரத்தில் வரும் ஒரு மனிதனின் முதுகிலிருக்கும் பெரிய மூட்டை கீழே விழுந்து உருண்டு ஓடுவதாக மோட்சப் பிரயாணம் புத்தகத்தில் சித்தரிக்கப்பட்டுள்ளது. ஆனால் இந்த சத்தியம் சபையில் பிரசங்கிக்கப்படுகிறதா என்றால் அதுதான் இல்லை. மாறாக, நடந்து வந்து கொண்டிருக்கும் மனிதன் சிலுவையின் அடிவாரத்திற்கு வந்தவுடன் அவன் முதுகில் மிகப்பெரிய பாரமான மூட்டை ஏற்றப்படுகிறது! மனுஷன் துண்டைக் காணோம், துணியைக் காணோமென்று ஓடத்தான் செய்வான்!

சிலுவையினடியில் பாவமூட்டை உருண்டோடுவதற்கேதுவான பிரசங்கங்கள் தேவை. சுமையை ஏற்ற அல்ல இறக்கவே இயேசு வந்தார். ஆதி மகிமையை இழந்த இந்த பூமிக்கு மீண்டுமாக அந்த மகிமையை கொடுக்கவும், மனிதனின் மகிமையை மீட்டுத் தரவும் வந்தார். மனிதன் சாத்தானிடம் தொலைத்த **formula** வை திரும்பவுமாக எழுதிக் கொடுத்தார். அந்த சூத்திரத்தை வைத்து கணக்குப் போட்டு சரியான விடையைக் கொண்டுவருவதற்கு பரிசுத்தாவியானவர் கற்றுத் தந்து கொண்டிருக்கிறார்.

நம்மால் முடியுமா? என்றால்... ஏன் முடியாது? என்கிறார் தேவன். *... நீ விசுவாசிக்கக்கூடுமானால் ஆகும், விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும் **(all things are possible)** என்றார். மாற்கு. 9:23.* கண்களால் காணக்கூடாத ஆவி மனிதர்களாகிய நாம் எதையாவது செய்ய வேண்டுமானால் அதற்கு கண்களால் காணக்கூடாமலிருக்கிற ஒன்றைத்தான் உபயோகிக்க வேண்டியதாயிருக்கிறது. அதுதான் விசுவாசம்! விசுவாசம் என்பது ஒரு ஆவி ரீதியிலான பிரமாணம். நம் மாம்ச கண்களால் பார்க்க முடியாமலிருக்கிற காரியங்களை, இருப்பதைப் போலவே நம்புவதற்கேதுவாக இந்த விசுவாசம் தேவனால் உருவாக்கப்பட்டிருக்கிறது. இது ஒரு **Principle (law).** இந்த விசுவாச பிரமாணத்தை நாம் இயக்கும்போது (அதாவது விசுவாசிக்கும் போது) மீண்டுமாக ஆரம்பத்தில் இருந்த அந்த மகிமையான பூமியையும், மனிதனையும், ஏதேனின் செழிப்பையும் கொண்டு வர முடியும்! இது தான் தேவனுடைய திட்டத்தின் சாராம்சம்.

இப்படிப்பட்ட பேராற்றலுள்ள விசுவாசத்தை எப்படி பெற்றுக் கொள்வது? *மிக எளிதானது; ... விசுவாசம் கேள்வியினாலே வரும்; கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும். (ரோமர். 10:17)* வேத வசனம் சார்ந்த விசுவாச போதனைகளை (பிரசங்கங்களை) கேட்பதினாலே விசுவாசம் வரும் என்று பார்க்கிறோம். வேத வசனம் சாராத கண்ட கதைகளையும் விடும் பிரசங்களைக் கேட்பதினால் அவிசுவாசம் வரும் என்பதையும் பார்க்க வேண்டும், எச்சரிக்கையாக இருக்க வேண்டும். விசுவாசம் மாத்திரமல்ல அவிசுவாசமும் கேள்வியினால் தான் வரும்! நாம் எதைக் கேட்கிறோமோ; அது நம் சிந்தனைப் பகுதியில் பதிவாகிறது. அதனால் விசுவாசிப்பதற்கேதுவான பிரசங்கங்களை கேட்பது மிக மிக அவசியம்.

பிரசங்கத்தை கேட்கும்போதே இவற்றைக் கண்டுபிடிக்க முடியும். கர்த்தர் நல்லவர் என்பதை மறைத்து அவரை பயங்கரமானவராக சித்தரித்து, பூச்சாண்டி காட்டி, உருட்டி மிரட்டி குலை நடுங்க வைக்கும் பிரசங்கங்களை கேட்காமல் இருப்பது நல்லது. கூட்டம் நடந்து கொண்டிருந்தால்; பாதியில் நைசாக உருவிக்கொண்டு எழும்பி வீட்டுக்குப் போய்விடலாம். டிவியில் பார்த்துக்கொண்டிருக்கிறீர்களா? இருக்கவே இருக்கிறது **Remote control**! அல்லது **Switch Off** செய்துவிடலாம்! இப்படி எதையாவது செய்து இருக்கிற விசுவாசத்தையாவது காப்பாற்றிக் கொள்ளப் பாருங்கள். இல்லாவிட்டால் பொழைப்புக் கெட்டுப் போகும்! ஏனென்றால் *விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் ... ரோமர். 1:17* என்று எழுதியிருக்கிறதே! அவிசுவாசத்தால் நீதிமான் செத்துப்போவான் என்று எழுதியிருக்கவில்லைதான்; என்றாலும் இந்த வசனத்தின் **Negative view** அப்படித்தான் இருக்கிறது.

அவிசுவாசத்தையும், பயத்தையும், கலக்கத்தையும் உண்டாக்குகிற பிரசங்கங்களைக் கேட்கிற

விசுவாசிகள் அடிவயிற்றில் நெருப்பைக் கட்டிக்கொண்ட கதையாய் திரும்புகிறார்கள். இரத்தத்தை உறைய வைக்கிற திகில் படம் பார்த்துவிட்டு திரும்புகிறவனுடைய வெளிறிய முகத்தைத் தான் பார்க்க முடிகிறது. நம்முடைய பிரச்சனை எதுவானாலும் அதற்கு முடிவு கட்டக்கூடிய தேவன் தான் நமக்கு இருக்கிறார். அதற்கேற்ற வாக்குத்தத்தங்களைத்தான் வேதத்தில் எழுதிக்கொடுத்திருக்கிறார். அவற்றை விசுவாசிக்கும்போது மீண்டுமாக நாம் ஆரம்பத்தில் இழந்த மகிமையான வாழ்வுக்குள் மீண்டுமாக பிரவேசிக்க முடியும். அதாவது ஆதி. 1, 2 அதிகாரங்களில் காணப்படும் அந்த மகிமையாக ஏதேனுக்குள் செல்ல முடியும்!

இப்படிப்பட்ட விசுவாசத்தை நமக்குள் விதையாகப் போடுகிற போதனைகளைக் கேளுங்கள். ஏதேனின் செழிப்பை பிரசங்கிக்கிற பிரசங்கங்களை **miss** பண்ணிவிடாதிருங்கள். சாத்தான் ஓதுகிற தரித்திரப் பாடல்களுக்கு காதை சிக்கென்று மூடிக்கொள்ளுங்கள். நிறைய வீடுகளில் இருக்கும் கண்ணை, காதை, வாயை பொத்திக்கொண்டிருக்கும் மூன்று புத்திசாலிக் குரங்குகளை ஞாபகம் வைத்திருக்கிறீர்களா? பயத்தை கட்டி எழுப்பக்கூடிய பிரசங்கங்களை டிவியில் பார்க்காமல், கேட்காமல், அதைப்பற்றி பேசாமல் இருப்போம். நம்முடைய விசுவாசத்தை கட்டி எழுப்புவது ஒரு பக்கம் இருக்கட்டும்; இருக்கிற விசுவாசத்தை உடைத்து தரைமட்டம் ஆக்காதபடியாவது பார்த்துக் கொள்ளலாமல்லவா?

## *முடிவாக ...*

தேவன் இந்த பூமியையும், அதன் நிறைவையும் உருவாக்கின நோக்கமும், அவர் மனுஷனை சிருஷ்டித்த நோக்கமும் வெற்றியாக முடியக்கூடிய காலகட்டம் நெருங்கி விட்டது. தன்னைப் போலவே தன்னால் உருவாக்கப்பட்ட மனிதனை அவர் முழு நிச்சயமாக நம்பி பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார். மனிதன் தனக்கென்று உருவாக்கப்பட்ட பூமியைப் பண்படுத்தி, கீழ்ப்படுத்தி, பாதுகாத்து, ஆண்டு கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய திட்டம். பலுகிப் பெருகி பூமியை நிரப்ப வேண்டும் என்ற திட்டத்தை மட்டும் ஓரளவுக்கு தட்டுத் தடுமாறி செய்து முடித்துவிட்டார்கள்! மற்ற காரியங்கள் கேள்விக்குறிகளோடு உலகை சுற்றி வந்து கொண்டிருக்கிறது. அந்த கேள்விக்குறிகளை ஆச்சரியப்படவைக்கும் விதத்தில் ஆச்சரியக்குறிகள் அடங்கிய பதில்களோடு எதிர்கொண்டு போக நாம் எழும்புவோம்.

இந்த சத்தியத்தை சரியான விதத்தில் விகிதாச்சாரத்தில் கற்றுக் கொண்டு; ஒன்று சேர்ந்து, ஒருமனப்பட்டு, கைகோர்த்து எழும்பினால் தேவனுடைய திட்டம் **(task - a piece of work that somebody is given to do, usually short in duration)** நிறைவேறும். *... கர்த்தர் பூமியில் சீக்கிரமாகவே காரியத்தை நிறைவேற்றி முடிப்பார் ... ரோமர். 9:28.* அவர் தனியாக எதையும் செய்யப்போவதில்லை, நம்மை கொண்டு தான் செய்யப்போகிறார். *உன்னோடே கூட இருந்து நான் செய்யும் காரியம் பயங்கரமாயிருக்கும். யாத். 34:10.*

பூமியைக் குறித்ததான தேவனுடைய திட்டம் முடிவடையப்போகிற இந்த கடைசி காலகட்டங்களில் இருக்கிற நாம்; நம்மை நம்பிக்கொண்டிருக்கிற தேவனுக்கு எந்த அளவுக்கு உண்மையாக இருக்கிறோம்? தேவனுடைய திட்டத்தை நாம் எப்படி முடிக்க முடியும்? அதை அவர் பார்த்துக் கொள்ள மாட்டாரா? என்று நினைக்கலாம். உண்மை தான், தேவனால் கூடாத காரியம் எதுவுமில்லை. ஆனால் கண்களால் காணக்கூடிய ரீதியில் வடிவமைக்கப்பட்ட பூமியில்; கண்களால் காணக்கூடிய விதத்தில் வடிவமைக்கப்பட்ட சரீரத்தை (பூமிக்குரிய கூடாரம்) உடைய மனிதர்களை வைத்து தான் அவரால் தன்னுடைய திட்டத்தை முடிக்க முடியும். அதற்கேற்றபடி தான் அவர் பூமியையும் அதன் நிறைவையும், மனிதனையும் அவனுக்குரிய யாவற்றையும் வடிவமைத்தார்.

தன்னைப் போலவே இருக்கிற மனிதனை, தன்னைப் போலவே செயல்படக்கூடிய ஆற்றலுடைய மனிதனை தேவன் மதிக்கிறார். அவன் சுயமாக செயல்படக் கூடிய சுதந்திரத்தை கொடுத்திருக்கிறார். தன்னுடைய **assignment** பூமியின் மீது முடிப்பதற்கேதுவான சகல காரியங்களையும் தன்னுடைய குமாரனை அனுப்பி சிலுவையில் நமக்கு தந்து விட்டார். அந்தக் காரியங்கள் எல்லாம் சாப நியமத்தின் இயக்கத்தாலும், சாத்தானின் தந்திரங்களினாலும், நியாயப்பிரமாண உபதேசங்களினாலும் சிலுவைக்குப் பின்னால் இரகசியமாக்கப்பட்டது. அந்த இரகசியத்தை பரிசுத்தாவியானவர் நமக்கு இந்த கடைசிக்

காலங்களில் வெளிப்படுத்தியிருக்கிறார். இரசியங்களைப் பெற்றுக் கொண்ட தேவபிள்ளைகள் அவற்றை தெரியாதவர்களுக்கு சொல்லிக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். (நாங்களும் அதைத்தான் செய்கிறோம்.)

எல்லா தேவப்பிள்ளைகளுக்கும் இரகசியம் தெரிந்து விட்டால்; எல்லோருமாக சேர்ந்து பூமியின் மீது தேவதிட்டத்தை நிறைவேற்றி முடித்து விடுவார்கள். தேவனுடைய **project** வெற்றியாக முடிந்து விட்டால்; தலை நசுக்கப்பட்ட தன்னுடைய மிச்சமீதிக் கதையையும் முடித்து விடுவார்கள் என்பதால்; சாத்தான் இந்த உபதேசத்தை துர் உபதேசம் என்றும், வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட செழிப்பின் உபதேசம் என்றும் சொல்லி சபைக்குள் சலசலப்பை உருவாக்கி விட்டு விட்டான். ஆறடி உயரத்தில் கருப்பாக பெரிய கண்களுடன், வெளியே நீண்டிருக்கும் பற்களுடன், வௌவால் போன்ற இறக்கையுடன் வந்தால்; அவனை சாத்தான் என்று எல்லோருமே கண்டுபிடித்து விடுவார்கள்!, **alert** ஆகி விடுவார்கள்! அவனை உள்ளே விடமாட்டார்கள்; கதவை அறைந்து மூடி விடுவார்கள் என்பதால்; கையில் பைபிளுடன் வந்துகொண்டிருக்கும் ஊழியக்காரர்களுடன் சேர்ந்து உள்ளே நுழைந்து விடுகிறான்!

*எப்போதும் கற்றாலும் ஒருபோதும் சத்தியத்தை அறிந்து உணராதவர்களாயிருக்கிற பெண்பிள்ளைகளுடைய வீடுகளில் இப்படிப்பட்டவர்கள் நுழைந்து, அவர்களை வசப்படுத்திக் கொள்ளுகிறார்கள். 2 தீமோத். 3:7.* ஏனென்றால் ஒரு பெண்ணிடம் தவறான, பொய்யான ஒரு காரியத்தை உண்மையைப் போல சொல்லிவிட்டால் அதை அப்படியே நம்பி விடுவார்கள் என்ற முடிவுக்கு சாத்தான் வந்திருக்கிறான். (ஏனென்றால் ஏதேனுக்குள் அது தான் நடந்தது.) பிறகு அவர்கள் சொல்வதை வேறு வழியில்லாமல் ஆண்களும் ஏற்றுக்கொண்டு விடுவார்கள் என்றும் அவன் நிதானித்திருக்கிறான். (இதுவும் ஏதேனுக்குள்தான் நடந்தது!)

ஆதாமும் ஏவாளும் சாத்தானுடைய பேச்சை நம்பி தங்களுக்கு கையளிக்கப்பட்டிருந்த செழிப்பை இழந்து போனதுபோல, நாமும் இயேசுவால் சிலுவையில் மீட்கப்பட்ட செழிப்பை இழந்து போகாதபடி எச்சரிக்கையாயிருப்போம். **Prosperity** என்றாலே பணம், பணக்காரன், ஆடம்பரம், அதனால் வரும் பாவங்கள் இப்படியே கணக்குப் போட்டு பழகிவிட்டார்கள் தேவபிள்ளைகள். அவர்கள் மேல் தவறில்லை, சாத்தான் அப்படிப் பழக்கப்படுத்தி விட்டான். பணம் எல்லா தீமைக்கும் வேராயிருக்கிறது என்ற வேதத்தில் இல்லாத ஒரு புதிய வசனத்தையும் முன்கூட்டியே எழுதிக் கொடுத்தும் விட்டான். (நான் தேடிய வரையில் வேதத்தில் அப்படி ஒரு வசனம் இல்லை, யாராவது கண்டுபிடித்திருந்தால் எனக்கு எழுதுங்கள்.)

**Prosperity** என்றால் **Success** என்று தான் அர்த்தம் **(the condition of enjoying wealth, success, or good fortune).** எந்தவொரு குறைவுமில்லாமல், எல்லா வளமும் பெற்று நிறைவாக, சந்தோஷமாக, நன்மையான சகல காரியங்களையும் பரிபூரணமாக பெற்று அனுபவிப்பதைக் குறிக்கிறது. தேவன் ஆதாமுக்கும் ஏவாளுக்கும் ஏதேனுக்குள் அப்படிப்பட்ட ஒரு வாழ்க்கையைத்தான் கொடுத்திருந்தார். செழிப்பு தவறு என்றால் ...? தேவன் தவறு செய்தாரா? இதில் முக்கிய விஷயம் என்னவென்றால்; சொத்து சுகம், கார் பங்களா, தோட்டம், துரவு, என்று சகல சம்பத்தையும் வைத்துக்கொண்டிருப்பவர்கள்தான் செழிப்பு தவறு என்று உபதேசிக்கிறார்கள்! தான் மட்டும் நன்றாக இருக்க வேண்டும், மற்றவர்களெல்லாம் ... வேண்டாம், அதை சொல்ல விரும்பவில்லை! எப்படிப்பட்ட **Hypocrite!** (நான் சாத்தானைத்தான் சொல்லுகிறேன்) சாத்தானால் இயக்கப்படுகிற ஊழியக்காரர்களைக் குறை சொல்லி எதுவும் ஆகப்போவதில்லை. அவர்கள் தான் சாத்தானால் **Hypnotism** செய்யப்பட்டிருக்கிறார்களே!

*எதிர் பேசுகிறவர்கள் சத்தியத்தை அறியும்படி தேவன் அவர்களுக்கு மனந்திரும்புதலை அருளத்தக்கதாகவும், பிசாசானவனுடைய இச்சையின்படி **(at his will)** செய்ய அவனால் பிடிபட்டிருக்கிற அவர்கள் மறுபடியும் மயக்கந் தெளிந்து அவன் கண்ணிக்கு நீங்கத்தக்கதாகவும், சாந்தமாக அவர்களுக்கு உபதேசிக்க வேண்டும். 2 தீமோத். 2 : 25, 26 (!)* அதைத்தான் நாங்கள் செய்கிறோம். இரகசியம் வெளிப்பட்டுவிட்டது, சாத்தானின் குட்டு உடைந்தது! முன்னொரு காலத்தில் அவனுடைய ஆளுகைக்குள்ளாக அவனுடைய கையாளாக இருந்ததினால் ... இப்போது அவனுடைய வண்டவாளங்களைத் தண்டவாளத்தில் ஏற்ற வசதியாக இருக்கிறது. அவனுடைய ஆயிரக்கணக்கான

பொய்களினால் லட்சம் முறைகள் ஏமாந்து, கோடிக்கணக்கான ஆசீர்வாதங்களை இழந்தவள் நான் என்பதால் அவனுடைய வஞ்சக, தந்திர வேலைகள் எனக்கு நிறையவே தெரிந்திருக்கிறது. அவற்றை இப்போது உங்களிடம் போட்டுக் கொடுத்திருக்கிறேன்!

ஐயோ திருடன், யாராவது காப்பாற்றுங்களேன் என்று அலற வேண்டிய அவசியமில்லை, **arrest warrant** நம் கையில், உள்ளே தள்ளுவோம் அவனை! *திராட்சத்தோட்டங்களைக் கெடுக்கிற குழிநரிகளையும் சிறுநரிகளையும் (cunning person - devil) நமக்குப் பிடியுங்கள்; நம்முடைய திராட்சத்தோட்டங்கள் பூவும் பிஞ்சுமாயிருக்கிறதே. உன். 2: 15*

## *சபைகளில் தொடர்ந்து சர்ச்சைக்குள்ளாகி வருகிற தசமபாகம் பற்றி கொஞ்சம் பார்த்து முடிப்போம்:*

தேவனுடைய ஆசீர்வாதங்கள் எல்லாம் நமக்கு இலவசமாகத்தான் வந்து கிடைக்கிறது என்பது மறுக்க முடியாத உண்மை. நாம் எதையாவது ஒன்றைக் கொடுத்து தான் தேவனிடமிருந்து எதையாகிலும் வாங்க வேண்டும் என்றால் அது முடியாத காரியம். ஏனென்றால் பூமியும் அதன் நிறைவும் தேவனுடையது. சில வசனங்களைப் பார்ப்போம்:

*நான் பசியாயிருந்தால் உனக்குச் சொல்லேன்; பூமியும் அதன் நிறைவும் என்னுடையவைகளே. சங். 50:12. தனக்குப் பதில்கொடுக்கும்படி, முந்தி எனக்குக் கொடுத்தவன் யார்? வானத்தின் கீழுள்ளவைகள் எல்லாம் என்னுடையவைகள். யோபு. 41:11. தனக்கு பதில் கிடைக்கும்படிக்கு முந்தி அவருக்கு ஒன்றைக் கொடுத்தவன் யார்? சகலமும் அவராலும் அவர் மூலமாயும் அவருக்காகவும் இருக்கிறது; ... ரோமர். 11 : 35, 36*

பொதுவாக ஆவிக்குரிய சபைகளில் தசமபாகம் கொடுக்க வேண்டும் என்று போதிக்கப்படுகிறது. காரணம் பெரும்பாலான சபைகளின் போதனைகள் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் இருப்பதால்; நியாயப்பிரமாணத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடியான தசமபாகம் போதிக்கப்படுகிறது. பெரும்பாலானவர்கள் கொடுக்கிறார்கள்; சபையின் பராமரிப்புக்காக அதைச் செலவு செய்கிறார்கள், எல்லாம் சரிதான்... இருக்கட்டும்.

அப்படியானால் புதிய விசுவாச பிரமாணத்தின்படி தசமபாகம் கொடுக்க வேண்டியதில்லையா? என்ற கேள்விக்குத்தான் இப்போது பதில் சொல்ல வருகிறேன். தசமபாகம் மோசேயின் நியாயப்பிரமாணத்திற்கு பின்பாக வந்த ஒன்றல்ல, அதற்கு 400 வருடங்களுக்கு முன்னதாக வாழ்ந்த ஆபிரகாமின் காலத்திலேயே தசம பாகம் கொடுக்கும் வழக்கம் இருந்தது.

*... உன்னதமான தேவனுடைய ஆசாரியனாயிருந்த சாலேமின் ராஜாவாகிய மெல்கிசேதேக்கு அப்பமும் திராட்சரசமும் கொண்டு வந்து, அவனை ஆசீர்வதித்து: வானத்தையும் பூமியையும் உடையவராகிய உன்னதமான தேவனுடைய ஆசீர்வாதம் ஆபிரகாமுக்கு உண்டாவதாக. உன் சத்துருக்களை உன் கையில் ஒப்புக்கொடுத்த உன்னதமான தேவனுக்கு ஸ்தோத்திரம் என்று சொன்னான். இவனுக்கு ஆபிராம் (ஆபிரகாம் என்ற பெயர் மாற்றம் செய்யப்படுவதற்கு முன்பு) எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான். ஆதி. 14: 18, 19, 20*

வேதத்தில் இரண்டு விதமான தசமபாகங்களைப் பற்றி சொல்லப்பட்டிருக்கிறது. அதில் ஒன்று நியாயப்பிரமாணத்தில் பரிந்துரைக்கப்பட்ட தசமபாகம். ஆரம்பத்தில் இருந்த சுயாதீன பிரமாணத்தை மனிதர்கள் கெடுத்துப் போட்டதால்; அதன் இயக்கத்தை நிறுத்தி விட்டதால் தன் இஷ்டத்திற்கு வாழ்ந்து வந்த மனிதர்களை ஒழுங்குபடுத்துவதற்காகவே நியாயப்பிரமாணம் செயல்பாட்டுக்கு வந்தது. முன்னமே நாம் பார்த்தது போல சொன்னால் கேட்காத பொதுமக்களை போலீஸ் வைத்து லத்தியால் அடித்து, கண்ணீர் புகை உபயோகித்துத்தான் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர வேண்டியதாக இருக்கிறது. காரணம், வேறு வழியில்லை. எப்படியாவது ஒழுங்கை நிலை நாட்ட வேண்டிய கட்டாயத்தில் அரசு ஊழியர்கள் இருக்கிறார்கள், அதை அவர்கள் கண்டிப்பாக செய்தாக வேண்டும், அதற்காகவே அவர்கள் நியமிக்கப்பட்டும் இருக்கிறார்கள். இந்தக் காரியத்திற்கு ஒப்பீடாகவே நியாயப்பிரமாணமும் அதைச்சார்ந்த பத்து கட்டளைகளும், மற்றும் சில காரியங்களும் இருக்கின்றன. அதில் தசமபாகமும் வருகிறது.

தேவன் இலவசமாக வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை ஏதாவது ஒன்றைக் கொடுத்துதான் பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற சூழ்நிலை மனிதனின் கீழ்படியாமையினால், அதனால் வந்த சாபத்தினால் வந்தது. எப்படியாவது மனிதர்கள் ஐசுவரியங்களை பெற்றுக்கொண்டே ஆக வேண்டும். கீழ்ப்படியாத பிள்ளைகள் என்பதால் எக்கேடோ கெட்டுப் போகட்டும் என்று விட்டுவிட முடியாது. அவர்கள் ஆசீர்வதிக்கப்பட்டு உயிரோடு வாழ்ந்தால் தான் அவர்களுடைய சந்ததியில் இயேசுவை பிறக்க வைத்து மனுக்குலத்துக்கு இரட்சிப்பை கொண்டு வர முடியும். இல்லாவிட்டால் ஒட்டுமொத்த மனுக்குலமே அழிவைச் சந்திக்க நேரிடும். அதுமட்டுமல்ல ஒட்டு மொத்த மனுக்குலமே சாத்தானுடன் சேர்ந்து பாதாளத்துக்கு, நரகத்துக்கு போக வேண்டிய பயங்கர நிலமை ஏற்பட்டுவிடும். அதனால் கிரியையின் மூலமாகவாவது ஆசீர்வாதத்தை பெற்றுக் கொள்ளட்டும் என்று தேவன் இதை ஏற்படுத்தினார்.

தேவன் பூமியையும் அதன் நிறைவையும் உருவாக்கி; எல்லாம் அதனதன் போக்கில் இயங்குவதற்கேதுவான பிரமாணங்களை இயற்றி; அதனடிப்படையில் இயங்கும்படி விட்டுவிட்டார் என்று முன்னதாகவே பார்த்தோம். பூமியில் தன்னுடைய ஜனங்கள் ஆசீர்வதிக்கப்பட வேண்டுமானால் அதையும் தேவன் ஒரு நியமத்தின் **(law, principle - formula)** அடிப்படையில் தான் செய்ய வேண்டியதாயிருக்கிறது. பூமியை ஆளும் பொறுப்பு மனிதனிடம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதனால் மனிதன் சகல ஐசுவரியங்களையும் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் அதற்கான நியமத்தையும் அவன் தான் இயக்க வேண்டியதாயிருக்கிறது. தசமபாகம் கொடுப்பதன் மூலமாக ஆசீர்வாத சட்டத்தை இயக்கி அதன் ஐசுவரியங்களை பெற்றுக் கொள்கிறான்.

பழைய ஏற்பாட்டில், நியாயப்பிரமாணத்தில் தசமபாகம் கிரியையின் அடிப்படையில் கொடுக்கப்பட்டது. ஆனால் புதிய ஏற்பாட்டில், சுயாதீன பிரமாணத்தில் (விடுதலையின் பிரமாணம்) தசமபாகம் தேவனுடைய கிருபையின் அடிப்படையில், தேவபிள்ளைகளின் விசுவாசத்தின் அடிப்படையில் கொடுக்கப்படுகிறது. இதை விசுவாசக் கிரியை என்று வேதம் அழைக்கிறது. நியாயப்பிரமாணக்காரர்கள் கொடுக்கிற தசமபாகம் விசுவாசக் கிரியை அல்ல. அவர்கள் தங்களுடைய கிரியையை நம்பி கொடுக்கிறார்கள். கொடுத்தால் தான் தேவன் தருவார், இல்லாவிட்டால் தரமாட்டார் என்பதில் உறுதியாக இருக்கிறார்கள்.

ஒரு சிலர் கொடுக்கிறார்கள், பலர் கொடுப்பதுமில்லை. சபையின் பராமரிப்புக்காகவும், சபை போதகரின் தேவைகள் சந்திக்கப்பட வேண்டும் என்பதற்காகவும் கொடுக்கிறார்கள். அதை ஒரு வரிபோல, கடமை போல கொடுக்கிறார்கள், எப்படியோ கொடுக்கிறார்கள். இதனால் புதிய பிரமாணக்காரர்கள் கொடுக்க வேண்டியதில்லை என்று அர்த்தம் ஆகாது. நாம் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் கொடுக்காமல்; தேவன் பேரில் வைத்திருக்கும் விசுவாசத்தின் அடிப்படையில் கொடுக்கிறோம்.

நியாயப்பிரமாணம் வரும் முன்னதாகவே தசமபாகம் பூமியில் இருந்தது என்பதை அறிந்து கொடுக்கிறோம். அது ஒரு விசுவாசக்கிரியை என்பதால் கொடுக்கிறோம். (கிரியையில்லாத விசுவாசம் செத்ததாகி விடுமே). பூமியின் ஆளுநர்களாகிய நாம் தான் தேவனுடைய ஆசீர்வாத பிரமாணத்தை இயக்க வேண்டும் என்பதால் கொடுக்கிறோம். தேவன் காசு கேட்கிறாரா? இல்லை! தேவனுக்கு பணம் தேவையில்லை, பணத்தை வைத்துக் கொண்டு தேவனால் எதுவும் செய்ய முடியாது. ஏனென்றால் பரலோகத்தில் பணத்திற்கு தேவையேதும் இல்லை, பரலோகத்தில் பொருளாதாரமே கிடையாது. பூமியில் தான் **economy (financial affairs)** இருக்கிறது, அதனால் தான் பணக்காரர்கள் பணத்தை வைத்துக் கொண்டு என்ன செய்வது என்று திண்டாடுகிறார்கள். ஏழைகள் வெறுங்கைகளை வைத்துக் கொண்டு பணத்துக்கு என்ன செய்வது என்று திண்டாடுகிறார்கள்!

பணம் இருந்தால் தான் இந்தப் பூமியில் வாழ முடியும், இல்லாவிட்டால் செத்து மடிய வேண்டியதுதான் என்பது இக்கால பூமியின் அவல நிலை, இதை யாரும் மறுக்க முடியாது. பூமியின் மீது இயங்கி வரும் சாப நியமத்தின் விளைவு **output (yield)** இது! ஆனால் புதிய உடன்படிக்கைக்கு சொந்தக்காரர்களாகிய நமக்கு இது பொருந்தி வராது. ஏனென்றால் நாம் சாபத்திலிருந்து விடுதலையாக்கப் பட்டிருக்கிறோம். பூமியின் சாப நியமம் நம்மைப் பாதிக்காத அளவில் வாழக்கூடிய

உன்னத பலத்தை தேவனிடமிருந்து பெற்றிருக்கிறோம். புவியீர்ப்பு விசையை எதிர்த்து **Aeroplane** வானத்தில் பறப்பதைப் போல **(take off).**

*நியாயப்பிரமாணத்தின் கிரியைக்காரராகிய யாவரும் சாபத்திற்குட்பட்டிருக்கிறார்கள்; கலா. 3:10.* (அதாவது நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் கொடுக்கிறவர்களும்). ஏனென்றால் இப்போது பிரமாணம் சிலுவையில் மாற்றப் பட்டாயிற்று. அதனால் பழைய பிரமாணம் செல்லாது (செல்லாத காசு போல) பழைய கால ஓட்டை காலணாவை கடையில் கொண்டு போய் கொடுத்தால்; ஏச்சைத் தவிர வேறெதையும் வாங்க முடியாது!

ஆனால் புதிய பிரமாணமாகிய விசுவாச பிரமாணத்தின் அடிப்படையில் கொடுக்கிற நாம் சாபத்துக்குட்பட்டவர்களல்ல, நாம் ஆசீர்வாதத்திற்குட்பட்டவர்கள். தேவன் இலவசமாக வைத்திருக்கிற நம்முடைய ஐசுவரியங்களையும், ஆஸ்தியையும் பெற்றுக் கொள்வதற்கேதுவாக அதற்கான நியமத்தை இயக்குகிறோம். எபிரேயர் 7:1–10 வசனங்களைத் தியானித்துப் பாருங்கள். புதிய உடன்படிக்கையின் மத்தியஸ்தராகிய இயேசு பழைய ஏற்பாட்டின் காலத்திலேயே மெல்கிசேதேக்காக வருவதைப் பார்க்கிறோம். நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் கொடுக்கும் முறைமை வருவதற்கு முன்னதாகவே இவர் ஆபிரகாமிடமிருந்து தசமபாகத்தை பெற்றுக் கொள்வதைப் பார்க்கிறோம்.

அதனால் இங்கே ஆபிரகாம் கொடுத்த தசமபாகம் நியாயப்பிரமாணத்தின் அடிப்படையில் கொடுக்கப்படவில்லை என்பதை அறிந்து கொள்ளலாம். அப்படியானால் எந்த பிரமாணத்தின் அடிப்படையில் அவன் கொடுக்கிறான்? ஆரம்பத்தில் ஏதேனில் இருந்த விசுவாச பிரமாணத்தின் அடிப்படையில் தான் அவன் கொடுக்கிறான். பூமியின் மீது இயங்குகிற எந்தக் காரியமானாலும் சரி; அது ஒரு பிரமாணத்தின் அடிப்படையில் இயங்கும் படியாகவே தேவன் அமைத்திருக்கிறார். "விதைப்பும் அறுப்பும்" என்பதும் ஒரு பிரமாணம் தான்.

முதலில் தேவன் தன்னுடைய வார்த்தையை அனுப்பி அதை முளைக்க வைத்து பூமியின் மீது உள்ள எல்லாவற்றையும் உருவாக்கி விட்டார். அதற்குப் பிறகு பூமியின் ஆளுகையை செய்யும் அதிகாரத்தைப் பெற்றிருக்கிற மனிதன்தான் அந்த **Law** வை இயக்க வேண்டும். ஒவ்வொரு முறையும் தேவன் வந்து இயக்கிக் கொண்டிருக்க மாட்டார்; அது முடியவும் முடியாது. ஏனென்றால் கண்களால் காணக்கூடிய ரீதியில் மனிதனின் சரீரம் இருப்பதால்; அவனால் தான் பூமியின் மீது எதையும் இயக்க முடியும். முதலில் தேவன் எல்லாவற்றையும் ஒரு குறைவும் இல்லாத அளவில் நிறைவாக உண்டாக்கி விட்டார். இனிமேல் மனிதன் தான் அவற்றின் விதைகளை எடுத்து; நிலத்தில் ஊன்றி, முளைக்க வைத்து, அதன் பலனை எடுக்க வேண்டும். விதைகளை தேவன் தனக்காக கேட்கவில்லை, மனிதனுடைய பிரயோஜனத்திற்காகவே கேட்கிறார். நாம் விதைகளை விதைக்காமல் இருந்தால் பிரமாணம் இயங்காது. பிரமாணம் இயங்காவிட்டால் விளைச்சல் எப்படி கிடைக்கும்?

புதிய விசுவாசப்பிரமாணத்தின்படி தசமபாகம் (விதை – முதற்பலன் – வருமானத்தில் ஒரு சிறிய பகுதி) கொடுக்காதவர்கள் ஏன் தரித்திரத்திற்குட்பட்டிருக்கிறார்கள் என்பது இப்போது புரிந்திருக்கும். அவர்கள் தேவன் நியமித்திருக்கும் ஐசுவரியத்தை தரக்கூடிய பிரமாணத்தை இயக்கவில்லை, அதனால் விளைச்சலில்லை. விதைக்கப்படாத, விளைச்சலில்லாத நிலத்தில் விளைந்திருக்கும் முட்களையும், குருக்குகளையும் (களைகள், காட்டுச்செடிகள், புற்கள், விஷச்செடிகள்) பிடுங்கி அதன் பலனை சாப்பிடுகிறார்கள். ஆனால் தேவன் இதைச் செய்வதில்லை, தன்னுடைய பிள்ளைகள் குறைவுடன் வாழ்வதை அவர் விரும்பவில்லை. எல்லாம் நியமத்தின்படி தான் நடக்கிறது அவ்வளவுதான்.

பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்கள் நியாயப்பிரமாணத்தின்படி தசமபாகம் கொடுத்து; ஆசீர்வாதத்தை பெற்றுக்கொண்டார்கள். புதிய உடன்படிக்கைகாரர்களாகிய நாம், பெற்றுக் கொண்டதால் கொடுக்கிறோம். அது கிரியை சார்ந்த தசமபாகம்; இது கிருபை சார்ந்த தசமபாகம். நியாயப்பிரமாண விதைப்பிற்கும் விசுவாசத்திற்கும் சம்பந்தமில்லை, புதிய கிருபை பிரமாணத்தின்படி விசுவாசிப்பதால் விதைக்கிறோம். நியாயப்பிரமாணம் நிபந்தனைகளுக்குட்பட்டது; புதிய

பிரமாணத்தின்படி நிபந்தனைகளை இயேசு தன் பொறுப்பில் எடுத்துக் கொள்கிறார். பழைய ஏற்பாட்டில் விலை கொடுத்தார்கள், புதிய ஏற்பாட்டில் இலவசம்.

அப்படியானால் கிரியை? இதற்கு நான் ஏற்கெனவே நிறைய பதில்களை சொல்லியிருக்கிறேன். பழைய உடன்படிக்கைக்காரர்கள் கிரியைகளை நடப்பிப்பதற்கு மிகவும் சிரமப்பட்டார்கள்; பெரும்பாலும் அது முடியாமல் போனது. ஆனால் நமக்கோ அப்படியல்ல, இயேசுவின் உயிர்த்தெழுந்த வல்லமை நமக்குள் இருப்பதாலும், இயேசு மகிமையின் நம்பிக்கையாக நமக்குள் வாசம் செய்வதனாலும், இனி நாம் அல்ல, கிறிஸ்துவே நமக்குள் ஜீவிப்பதாலும் கிரியை நடப்பிக்க நாம் கஷ்டப்பட வேண்டியதில்லை. இனி மேல் கிரியை நடப்பிக்க நம்மால் முடியும்; அது தானாகவே நடந்தேறிவிடுகிறது.

அதனால் புதிய பிரமாணத்தின் அடிப்படையிலான தசமபாகம் **MUST** என்று பார்க்கிறோம். **Must? (be compelled, be necessary, be certain, indicates belief, used to make suggestions, intend, essential)** போதுமா?

நாம் யார்? நாம் ஏன் பிறந்தோம்? நமக்கு என்னென்ன கொடுக்கப்பட்டிருக்கிறது? அவைகளை நாம் எப்படி எடுக்க வேண்டும்? அதைப் பிரயோஜனப்படுத்தி என்னென்ன செய்ய வேண்டும்? அதை எப்படி செய்ய வேண்டும்? என்பதைப் பற்றியும்,

தேவன் யார்? அவர் எப்படிப்பட்டவர்? நம்மைக் குறித்து அவருடைய திட்டம் என்ன? நம்மை அவர் பூமிக்கு அனுப்பியதன் நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை பூமயின் மீது எப்படி நிறைவேற்றப் போகிறார் என்பதைப் பற்றியும்,

சாத்தான் யார்? அவன் எங்கிருந்து வந்தான்? நம்மைப் பார்த்தாலே அவனுக்கு ஏன் பற்றிக்கொண்டு வருகிறது? எப்போதும் ஏன் அவன் நமக்கு எதிராகவே வந்து கொண்டிருக்கிறான்? அவனுடைய தற்சமய நிலைமை என்ன? அவனுடைய முடிவு என்ன?

என்பதையெல்லாம் பற்றி இன்னும் ஆழமாக அறிந்து கொள்ள பரிசுத்தாவியானவர் இனிவரும் விதைகள் பகுதி 13 ... **(on-wards)** ல் உதவி செய்வாராக.

*"சத்திய ஆவியாகிய அவர் ... சகல சத்தியத்திற்குள்ளும் உங்களை நடத்துவார்;* ***(he will guide you into all truth)*** *... யோவான். 16:13"*

**பொய்யுரையாத தேவன் ஆதிகாலமுதல் நித்திய ஜீவனைக்குறித்து வாக்குத்தத்தம்பண்ணி, அதைக்குறித்த நம்பிக்கையைப்பற்றி தேவபக்திக்கேதுவான சத்தியத்தை அறிகிற அறிவும் விசுவாசமும் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டவர்களுக்கு உண்டாகும்படி,**

**ஏற்ற காலங்களிலே நம்முடைய இரட்சகராகிய தேவனுடைய கட்டளையின்படி எனக்கு ஒப்புவிக்கப்பட்ட பிரசங்கத்தினாலே தமது வார்த்தையை வெளிப்படுத்தினார்.**

*தொடரும் ...*

**தேவனுடைய திட்டம் பூமியின் மேல் பரிபூரணமாக நிறைவேறி முடியும் வரை!**